


# தமிழரசு

செப்டம்பர் 16-30, 1999 ரூ. 5/









## நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது. அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்


தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு
எய்ட்ஸ்
சென்னை -8

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.


Mudra:TNSACS:6259:98

# தமிழரசு


திருவள்ளுவர் ஆண்டு 2030

ஆவணி–புரட்டாசி

செப்டம்பர் 16–30, 1999

மலர் : 31 இதழ் : 6

விலை ரூ. 5


## இந்த இதழில்...


☞ பெரியார் ஒரு சகாப்தம் .............................. 2

☞ இயற்கையின் புதல்வர் .............................. 7

☞ பெரியார் குறித்து பேரறிவாளர்கள் .............. 10

☞ சென்ட்ரல்-எழும்பூர் ரயில் நிலையங்கள் இணைக்கும் ரயில்பாதை .............. 13

☞ நாடாளுமன்றத் தேர்தல் .............................. 16

☞ நிலபதிவுகள் கணினி மயமாக்கும் திட்டம் .............. 18

☞ விவசாயிகளுக்கு உதவிகள் .............................. 20

☞ இன்டர்நெட்டின் வரலாறு .............................. 22

☞ ஊனமுற்றோர்க்கு உதவிகள் .............................. 25

☞ இசை மருந்தாகுமா? .............................. 29

☞ அமானுடன் .............................. 30

☞ எங்கள் ஊர் பிரச்சினை .............................. 36

☞ பூம்புகார் .............................. 37

☞ மகளிர் நலத்திட்டங்கள் .............................. 38

☞ பொருளாதாரப் பின்னணியில் பெண் .............. 42

☞ பசி .............................. 48


### திருக்குறள்

***தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்***
***தன்னையே கொல்லுஞ் சினம்.***

ஒருவன் தன்னைத்தானே காத்துக் கொள்ள வேண்டுமானால், சினத்தைக் கைவிட வேண்டும். இல்லையேல் சினம், அவனை அழித்துவிடும்.

– கலைஞரின் திருக்குறள் உரையிலிருந்து...

முதல் பக்க அட்டையில்...

**தந்தை பெரியார்**

கடைசிப் பக்க அட்டையில்...

**தந்தை பெரியார் 121ஆவது பிறந்த நாளில் (17–9–1999) முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பெரியார் சிலைக்கு மாலையணிவிக்கிறார்.**



# பெரியார் ஒரு சகாப்தம்

**– பேரறிஞர் அண்ணா**

எனக்கென்று ஒரு வசந்த காலம் இருந்தது. நீண்ட நாள்களுக்குப் பிறகு – ஆண்டு பலவற்றிற்குப் பிறகு – அந்த வசந்த காலத்தை நினைவிலே கொண்டு, இன்றைய கவலை மிக்க நாள்களிலே எழவியலாத புன்னகையைத் தருவித்துக் கொள்கிறேன். பெரியாருக்கு அந்த வசந்த காலம் தெரியும்; இன்று பொறுப்பேற்றுக் கொண்டிருப்பதால் எழுந்துள்ள கவலையும் நன்கு புரியும்.

'வசந்த காலம்' என்றேனே, அந்த நாள்களில் நான் கல்லூரியிலிருந்து வெளியேறி அவருடன் காடு மேடு பல சுற்றி வந்த நிலை அது. அந்தக் காடு மேடுகளில் நான் அவருடன் தொண்டாற்றியபோது, வண்ண வண்ணப் பூக்கள் குலுங்கி, மகிழ்வளித்ததைக் கண்டேன்; நறுமணம் எங்கும் பரவிடக் கண்டேன்.

ஒருவர் தன்னந்தனியராய்ப் புறப்பட்டு, ஓயாது உழைத்து உள்ளத்தைத் திறந்து பேசி, எதற்கும் அஞ்சாது பணியாற்றி, ஒரு பெரிய சமூகத்தை விழிப்பும் எழுச்சியும் கொள்ளச் செய்வதில் வெற்றி பெற்ற வரலாறு, இங்கன்றி வேறெங்கும் நிகழ்ந்ததில்லை.

அந்த வரலாறு தொடங்கப்பட்டபோது சிறுவன் நான். அந்த வரலாற்றிலே புகழேடுகள் புதிதுபுதிதாய் இணைக்கப்பட்ட நாள்களிலே, ஒரு பகுதியில் நான் அவருடன் சேர்ந்து பணியாற்றியிருக்கிறேன். அந்த நாள்களையே 'என் வசந்தம்' என்று குறிப்பிட்டிருந்தேன்.

பெரியாருடன் இணைந்து பணியாற்றியவர் பற்பலர். ஆயினும், மற்றப் பலரையும்விட அவருடன் இடைவிடாது இருந்திருக்கும் வாய்ப்பினைப் பெற்றிருந்தவன் நான். அந்த நாள்கள் எனக்கு மிகவும் இனிமையான நாள்கள். இன்றும் அவைகளை நினைவிற் கொண்டுவரும்போது இனிமை பெறுகிறேன்.

எத்தனை எத்தனையோ கருத்துக்களை உரையாடல் வாயிலாக எனக்கு அவர் தந்திருக்கிறார். 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்' என்பதை நான் கற்றுணரும் வாய்ப்பினையும் அவர் தந்தார். பொதுத்தொண்டு ஆற்றுவதில் நான் ஆர்வமும் அகமகிழ்வும் மனநிறைவும் பெற்றிடச் செய்தார் அவர்.

கோபத்துடன் அவர் பலரிடம் பேசிடக் கண்டிருக்கிறேன்; கடிந்துரைக்கக் கேட்டிருக்கிறேன்; 'உன்னை எனக்குத் தெரியும் போ!' என்று உரத்தக் குரலில் கூறியதைக் கேட்டிருக்கிறேன். ஒரு நாள்கூட அவர் என்னிடம் அவ்விதம் நடந்து கொண்டதில்லை. எப்போதும் ஒரு கனிவு எனக்கெனத் தனியாக வைத்திருப்பார். என்னைத் தமது 'குடும்பத்தில் பிறவாப் பிள்ளை' என்று கொண்டிருந்தார்.

நான் கண்டதும் கொண்டதும் அந்த ஒரே தலைவரைத்தான். இப்போது நான் உள்ள வயதில் அவர் இருந்தார். நான் அவருடன் இணைந்தபோது – முப்பது ஆண்டுகளுக்கு முன்பு அதற்கும் முன்பு முப்பது ஆண்டுகள் அவர் பணியாற்றி வந்திருக்கிறார்.

இந்த ஆண்டுகள் தமிழரின் வரலாற்றிலே மிக முக்கியமான ஆண்டுகள். 'திடுக்கிட வைக்கிறாரே! திகைப்பாக இருக்கிறதே! எரிச்சலூட்டுகிறாரே! ஏதேதோ சொல்கிறாரே! என்று பலர் ஏசினர்; பேசினர்; பகைத்தனர்; எதிர்த்தனர்; ஆனால், அவர் பேச்சைக் கேட்ட வண்ண மிருந்தனர் – மூலையில் நின்றாகிலும், மறைந்திருந் தாகிலும்!

அந்தப் பேச்சு ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நடந்தபடி இருக்கிறது. எதிர்த்தவர்கள், ஏளனம் புரிந்தவர்கள், ஏனோ தானோ என்றிருந்தவர்கள், தங்களது நிலை தன்னாலே மாறிவிடக் கண்டார்கள். கொதித்தவர்கள் அடங்கினார்கள். மிரட்டியவர்கள் பணிந்தார்கள். அலட்சியம் செய்தவர்கள் அக்கறைக் காட்டினார்கள்.

அவருடைய பேச்சோ? அது தங்கு தடையின்றி வேகம் குறையாமல், பாய்ந்தோடி வருகிறது,

மலைகளைத் துளைத்துக் கொண்டு கற்களை உருட்டிக் கொண்டு, காடு கழனிகளை வளம் பெறச் செய்துகொண்டு, நுரை நயத்துடன், ஒய்யார நடையுடன், அங்கே போகிறார்; இங்கே வருகிறார். அது குறித்துப் பேசுகிறார் எனத் தமிழகம் இந்த ஐம்பது ஆண்டுகளாய் கூறி வருகிறது.

'மனத்திற்பட்டதை எடுத்துச் சொல்வேன், எது நேரிடினும்' என்னும் உரிமைப்போரே அவரது வாழ்வு. அதிலே அவர் கண்ட வெற்றி மிகப்பெரியது! அந்த வெற்றியின் விளைவு அவருக்கு மட்டும் கிடைத்துவிடவில்லை. இன்று அனைவரும் பெற்றுள்ளனர். அந்த வெற்றியின் விளைவுகளை, இந்தத் தமிழகத்தில் தூய்மையுடன், மனத்திற்குச் சரி எனப்பட்டதை எவரும் எடுத் துரைக்கலாம் என்னும் நிலை உறுதிப் படுத்தப் பட்டிருக்கிறது. அறிவுப் புரட்சியின் முதற்கட்ட வெற்றி இது. இதற்கு முழுக்க முழுக்க பொறுப்பாளர் பெரியார். இந்த வெற்றி கிட்ட அவர் ஆற்றிய தொண்டின் அளவு மிகப் பெரியது!

அவர் நமக்கு இதுவரையில் ஆற்றியிருக்கிற தொண்டுக்கு, அவரால் தமிழகம் பெற்றிருக்கிற வளர்ச்சிக்கு, நல்ல பெயருக்கு – நாம் நமது மரியாதையை – அன்பை – இதயத்தைக் காணிக்கையாக்க வேண்டும்.

தமிழகத்திற்கும் தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்விற்கும் – இன்னும் உலகத்திற்கே கூட என்றும் சொல்லலாம் – அவர் செய்திருக்கிற அரிய பெரிய காரியங்களை, ஆற்றியிருக்கிற அருந்தொண்டுகளை, ஏற்படுத்தியிருக்கிற புரட்சிகர உணர்ச்சிகளை, ஓடவிட்டிருக்கிற அறிவுப் புனலை தமிழகம் இதுவரை என்றுமே கண்டதில்லை. இதற்குப் பிறகும் இப்படிப்பட்ட மாபெரும் புரட்சி வேகத்தை நாம் காணப்போவதில்லை. வரலாற்றில் பொறிக்கத்தக்க புதிய வரலாறு எனக் கருதும் நிலைமையை அவர் தம்முடைய பொதுத் தொண்டின் மூலம் நமக்கு அளித்திருக்கிறார்.

என்னுடைய நினைவுகள் பல எண்ண அலைகளை நெஞ்சில் ஓடவிட்டுக் கொண்டிருக்கின்றன. எத்தனை இரவுகள், எத்தனை பகல்கள், எத்தனை காடுமேடுகள், எத்தனை சிற்றாறுகள், எத்தனை பேராறுகள்,



எத்தனை மாநாடுகள் என எண்ணிப் பார்க்கிற நேரத்தில், ஒரு போர் வீரன் களத்திற்புகுந்து, 'இந்தப் படையை முறியடித்தேன்! அந்தப் படையை வென்றேன்!' எனக் காட்டி, மேலும் மேலும் செல்வதைப் போல, வாழ்நாள் முழுவதும் அவர் களத்தில் நிற்கிற ஒரு மாபெரும் போராட்டமே நம் முன் காட்சி அளிக்கிறது.

முதற் போராட்டம், அவர் உள்ளத்தில் தோன்றியிருக்க வேண்டும். செல்வக் குடியிலே பிறந்த அவர், தம்முடைய செல்வத்தை – செல்வாக்கைக் கொண்டு ஊரை அடக்கி, போக போக்கியத்தில் மிதந்து மகிழ்ந்திருக்கலாம். அப்போதிருந்த பலரும் அப்படிப்பட்ட வாழ்க்கையில் தான் இருந்தனர். அப்படிப்பட்ட வாழ்க்கையில் இருந்து தம்மைத் தனியாக்கிக் கொண்டு, தம்மைப் பிரித்துக் கொண்டு 'என்னுடைய செல்வம் எனக்கில்லை; என்னுடைய செல்வத்தைக் கொண்டு, போக போக்கியத்தில் நான் திளைக்கப் போவதில்லை; பொது வாழ்க்கையில் ஈடுபடப் போகிறேன்' என்று எண்ணிய நேரத்தில், அவருக்கிருந்த செல்வமும், அவருடைய குடும்பத்துக்கிருந்த செல்வாக்கும், அதனால் அடையக்கூடிய சுகபோகங்களும் அவர் மனத்தில் ஒரு கணம் நிழலாடியிருக்க வேண்டும். அப்போது அவர் உள்ளத்தில் நிச்சயமாக ஒரு போராட்டம் எழுந்திருக்க வேண்டும்.


'செல்வத்தில் புரளலாமா, அல்லது வறுமையில், அறியாமையில் மூழ்கிக்கிடக்கும் தமிழ்ச் சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கு என்னை நான் ஒப்படைப்பதா?' என்ற போராட்டத்தில் தொண்டுள்ளம் வெற்றியடைந்தது. 'செல்வத்திற்காக அல்லேன் நான். சுகபோகத்திற்காக அல்லேன் நான். என்னிடத்திலுள்ள அறிவு, உழைப்புத்திறன், என்னிடத்தில் அமைந்திருக்கிற பகுத்தறிவு அனைத்தும் தமிழக மக்களுக்குத் தேவை. தமிழகத்திற்கு மட்டுமல்ல – இயன்றால் இந்தியா முழுவதற்கும் தேவை; வசதிப்பட்டால் உலகத்திற்கே தேவை. வீட்டை மறப்பேன்; செல்வத்தை மறப்பேன்' என்று அவர் துணிந்து நின்று அந்தப் போராட்டத்தில் முதலில் வெற்றி பெற்றார்.

'இதில் பிரமாதம் என்ன இருக்கிறது?' என்று எண்ணக்கூடும். செல்வம் இல்லாதவர்கள் ஒருவர் கையில்,

ஒரு பலாப்பழத்தைக் கொடுத்து ஒரு மணிநேரம் அவர் அதை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்றால் வைத்திருப்பவர் வாயில் நீர் உறும்; நேரம் செல்லச் செல்லப் பலாச்சுளையில் மொய்த்துக் கொண்டிருக்கிற ஈக்களோடு சேர்த்துச் சாப்பிடுவாரே தவிர, பார்த்துக் கொண்டேயிருக்க மாட்டார்.

பெரியார் குடும்பத்தின் நிலை எப்படிப்பட்டது? எந்தப் பக்கம் திரும்பினாலும் வாணிகத்தில் ஆதாயம், நில புலன்கள், வீடு வாசல்கள், இவை எல்லாவற்றையும் பார்த்து 'இவை எனக்குத் தேவையில்லை' என்றார். 'என் நாட்டு மக்களுக்கு – நல்லது கெட்டது ஆராய்ந்து பார்க்கும் பக்குவம் அற்றுப் போய்க்கிடக்கும் மக்களுக்கு – வேறு ஒரு செல்வத்தைத் தருவேன்; அறிவுச் செல்வத்தைத் தரப்போகிறேன்; சிந்தனைச் செல்வத்தைத் தரப்போகிறேன்; பகுத்தறிவுச் செல்வத்தை தரப்போகிறேன் – இவற்றை ஏற்று நடத்தத் தக்க துணிவைத் தரப் போகிறேன். இதைத் தடுக்க எவரேனும் குறுக்கிடுவாரானால் அவர்தம் ஆற்றல்களையும் முறியடிப்பேன். இதுதான் என் வாழ்க்கையின் குறிக்கோள்' என்று அவர் கிளம்பினார். அதுதான் வாழ்க்கையின் முதற் போராட்டத்தில் அவர் பெற்ற வெற்றி. அதற்குப் பிறகு அவர் சந்தித்த ஒவ்வொரு களத்திலேயும் வெற்றிதான் கிடைத்திருக்கிறது.

அவர் முக்கியமாய்க் கருதுவது 'தமிழ்நாட்டு மக்களிடையே மனிதத்தன்மை வளர வேண்டும்; அவர்கள் நம்பிக் கொண்டிருக்கிற காட்டுமிராண்டித்தனமான கொள்கைகள் – நாட்டைக் காடாக்கத்தக்க கொள்கைகள் – மனிதனை மிருகமாக்கத்தக்க கொள்கைகள் – வெளியுலகத்தாராலே இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பே உதறித் தள்ளப்பட்ட உருப்படியற்ற கொள்கைகள் – மறைய வேண்டும். இவை நீக்கப்பட்டு, தமிழக மக்கள் துல்லியமான மனத்துடன், தூய்மையான எண்ணத்தில், செயல் திறனில், பகுத்தறி வாளர்களாய், பண்பாளர் களாய்த் திகழ வேண்டும்; அதற்கோர் அறிவுப் புரட்சி தேவை' என்பதே. அவரது நாட்டமெல்லாம் இதிலேயே அமைந் திருக்கிறது. இந்த நாட்டத்தின் உருவந்தான் பெரியார் என்றால், அது மிகையாகாது.



இரண்டு நூற்றாண்டுகளில் செய்து முடிக்கக்கூடிய காரியங்களை இருபதே ஆண்டுகளில் அவர் செய்து முடித்திருக்கிறார். ஐரோப்பாக் கண்டத்தை எடுத்துக்கொண்டால், நாட்டினுடைய விழிப்பிற்கு ஐம்பது ஆண்டுகள், ஆட்சி முறையை மாற்றுவதற்கு ஐம்பது ஆண்டுகள் என்ற அளவில், பகுத்தறிவு மனப்பான்மையைத் தோற்றுவிப்பதற்காக வால்டேர், ரூசோ இப்படித் தொடர்ச்சியாய்ப் பலர் வந்து வந்து, இரண்டு மூன்று நூற்றாண்டுகள் பாடுபட்டதால்தான் பகுத்தறிவுப் பாதையிலே அந்த நாடுகள் செல்ல இயன்றது.

இப்படி இரண்டு நூற்றாண்டுகளில் செய்ய வேண்டிய காரியங்களைப் பெரியார் இருபதே ஆண்டுகளில் செய்து முடிக்க வேண்டுமென்று கிளம்பினார்; திட்டமிட்டார்; அத்திட்டத்தின் அடிப்படையில் பணியாற்றிக் கொண்டு வருகிறார். ஆங்கிலத்தில் சொல்வார்கள், Putting Centuries into Capsules என்று. பல மருந்துகளை உள்ளடக்கிச் சில மாத்திரைகளிலே தருவது போல பல நூற்றாண்டுகளை இருபது ஆண்டுகளில் அடைத்து, தம் வாழ்நாளிலேயே சாதித்துத் தீரவேண்டுமென – வெற்றி பெற்றுத் தீர வேண்டுமென – அறிவோடும், உணர்ச்சியோடும், நெஞ்சின் ஊக்கத்தோடும் யார் வருகிறார்கள், யார் போகிறார்கள் என்பதைக்கூட இரண்டாம் தரமாக வைத்துக்கொண்டு, எந்த அளவு முன்னேறுகிறோம் என்பதைக் காண்பதிலேயே வாழ்க்கை முழுவதும் அவர் போராட்டக் களத்தில் நின்றிருக்கிறார்.

அந்தப் போராட்டக் களத்தில் அவர் நின்றிருந்த நேரத்தில், சில பகுதிகளில் நான் உடனிருந்து பணியாற்ற வாய்ப்புக் கிடைத்தமைக்காக மகிழ்ச்சி அடைகிறேன். கல்லூரியை விட்டு வெளியே வந்ததும் முதலில் நான் அவரிடந்தான் சிக்கிக் கொண்டேன். கல்லூரியில் படித்த படிப்பையும் அதன் மூலம் என்னென்ன எண்ணங்கள் ஏற்படுமோ அவைகளையெல்லாம் நான் காஞ்சிபுரத்தில் உதறித் தள்ளிவிட்டு, ஈரோட்டில் போய்க் குடியேறினேன். இது எனக்கு நன்றாய் நினைவிருக்கிறது. அது பற்றி அப்போது என் பாட்டியார், அவரையொத்த மூதாட்டிகளோடு

பேசும்போது அடிக்கடி சொல்லுவார். ஆறுமாதம் அல்லது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நான் காஞ்சிக்குச் செல்கிற நேரங்களில் அவர் என்னைப்பற்றி மற்றவர்களிடம் சொல்லும்போது, 'யாரோ ஈரோடிலிருந்து வந்த ஒருவன், என் பிள்ளையைப் பிடித்துக் கொண்டு போய்விட்டான்' எனப் பேசுவார். ஒருமுறை காஞ்சிபுரத்தில் ஆடிசன்பேட்டையில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் பெரியாருடைய பேச்சைக் கேட்ட பிறகு அதே பாட்டியார் சொன்னார் என்னைப் பார்த்து, 'நீ ஈரோடிலேயே இரு' என்று. இத்தனைக்கும் பாட்டியாருக்கு அதிகமாய்ப் படிப்பறிவு இல்லை.

எதனால் இதைச் சொல்கிறேனென்றால், தொடக்கத்தில் பெரியாரிடத்தில் இருந்த காலத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் பலப் பல இருக்கின்றன. என்னுடைய வாழ்நாள் முழுவதும் எண்ணியெண்ணி மகிழத்தக்கவை அவை. இப்போது எனக்குக் கிட்டியிருப்பது இனி எனக்கு கிட்டக்கூடியது என எந்தப் பட்டியலைக் காட்டினாலும் நான் ஏற்கெனவே பெற்றிருந்ததை விட இவற்றுள் எதுவும் மகிழ்ச்சியிலோ பெருமையிலோ நிச்சயமாக அதிகமானதாய் இருக்கவியலாது.

வீரமிக்க காரியங்களை – வேறு யாரும் எண்ணிப் பார்க்க இயலாத காரியங்களை – நடத்திக் காட்டி, அதில் தாம் பெற்ற வெற்றிகளை நம்மிடம் பெரியார் ஒப்படைத்திருக்கிறார். அவர் சாதித்த காரியங்களை மிகப் பெரியவை என்றாலும், அவருக்கிருந்த துணிவோடு நாம் சாதிக்க வேண்டிய காரியங்கள் நிரம்ப இருக்கின்றன. ஒரு பெரிய மலை பிளக்கப்பட்டிருக்கிறது. கற்பாறைகள் எல்லாம் கீழே உருண்டு வந்து கொண்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் பக்குவப்படுத்தி அவைகளை எந்தெந்த வடிவத்தில் நாம் செதுக்க வேண்டுமோ அதில் நம்மை நாம் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். பெரியார் அழைக்கின்ற அழைப்பைக் கேளாத தமிழ் மக்கள் என்றுமே இருந்ததில்லை. அவர் கூப்பிடும் குரலுக்கு ஓடி வரத் துடியாத இளைஞர்கள் இருந்தது இல்லை.

30 ஆண்டுகளுக்கு முன்னாலே தமிழகத்தில் பேசுவதற்குக் கூச்சப்பட்டுக் கொண்டிருந்தவைகளை இன்று நமது எட்டு வயதுச் சிறுவன் வெகு தாராளமாகப் பேசுகிறான். 20 ஆண்டுகளுக்கு முன்னாலே நம் மனத்திலே பயந்து கொண்டிருந்த தத்துவங்கள், இன்றைய தினம் கேலிக்குரியனவாகுமென நாடே சொல்கிறது. இரண்டு நூற்றாண்டுகள் பாடுபட்டு உண்டாக்க வேண்டிய பகுத்தறிவுப் புரட்சியை இருபது ஆண்டுகளில் அவர் சாதித்துக் கொடுத்ததால், அது நமக்கெல்லாம் எளிதாய் இருக்கிறது; எல்லாம் சுலபமாக இருக்கின்றன.

பகுத்தறிவு வாதம் என்பது, அடிப்படை உண்மைகளை, நெறிகளை மறுப்பதாகாது; எதையும் காரணங்கண்டு, ஆராய்ந்து உண்மை காண்பதாகும். போலித்தனமான எண்ணங்களை – செயல்களை அழித்தொழிப்பதுதான் பகுத்தறிவு ஆகும்.

அறிவின் எந்தவொரு துறையேயாயினும் அதில் நமக்கென்று ஒரு முறை இல்லாமல் இல்லை. நம்முடைய வாழ்க்கை முறைகள் அழியாதவை என நாம் கொண்டாடலாம். ஆயினும், அந்த முறைகளை இளமை குன்றாது, தீவிரத் தன்மையோடு கூடியனவாய் வைத்திருக்க வேண்டுமானால், மாறுதலை ஏற்றுக்கொள்ளத்தக்க – புதிய கருத்துகளை ஏற்றுக் கொள்ளக் கூடிய – இளமை இதயத்தைப் போல நமது இதயம் பசுமையானதாய் விளங்க வேண்டும்.

நாம் நெடுங்காலமாய்ப் பழைய முறைகளிலேயே ஊறி, அவற்றைத் தாங்கி, அவற்றிற்கெதிரான வாரங்களுக்கு எதிர்ப்புக் கூறி, காலத்தைக் கழித்திருக்கிறோம். இதே காலத்தில், உலகத்தின் ஏனைய நாட்டவரெல்லாம் உண்மையை நாடிப் பொறுமையோடு தமது இடைவிடா ஆராய்ச்சி, சோதனை மூலம் பல புதிய முடிவுகளை எய்தியவுடன் உயர்வும் பெற்றுள்ளனர்.

நாமோ, பழம் பெருமையில் அமர்ந்திருப்பதில் திருப்தி அடைகிறோம்; நம்மையறியாமல் இவற்றைப் பாதுகாக்கக் கூடியவராய் இருந்து வந்துள்ளோம்; இந்த வகையில், புரையோடிய சமூகக் கருத்துக்களைச் சாகடிக்கும் வீரப் பெரியாரைக் குறைகூறத் துணிவதில் சிறிது கூட அறிவுத் தெளிவு இல்லை. பழம் பெருமைப் பேசிக் கொண்டு, மூடப்பழக்கங்களில் ஆழ்ந்து அடிமைப்பட்டிருக்கும் சமுதாயத்தை சீர்திருத்தி, புரையோடிய சமுதாயக் கருத்துகளை ஒழிக்கப் போராடும் வீரரான பெரியாரைக் குறை கூறிப் பெறும் பயன் என்ன?

பகுத்தறிவே எல்லாருடைய உள்ளங்களையும் தங்கு தடையின்றி ஆளவேண்டும். சாதி ஒழிந்த சமத்துவச் சமுதாயம் அமைக்கும் போர் வீரராக எல்லாரும் முன் வர வேண்டும்; பகுத்தறிவு மூலம் சமுதாயத்தினை சீர்படுத்தும் பணியில் ஈடுபட வேண்டும். விஞ்ஞானத்தோடு ஒட்டி வாழ இயலாத மூடப் பழக்கங்களுக்கு எதிராகப் போர் தொடுக்க வேண்டும்.

தமிழகத்தில் இன்று அவரால் ஏற்பட்டுள்ள இந்த நிலையை இந்தியாவில் வேறு எங்கும் காணவியலாது. மற்றப் பகுதியினர் இதுபற்றிக் கேள்விப்படும்போது வியர்த்துப் போகின்றனர்; 'அப்படியா! இயல்கின்றதா? நடக்கின்றதா?' எனக் கேட்கின்றனர். சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு, அரித்துவாரம், கல்கத்தா, பாட்னா, கான்பூர், காசி, இலாகூர், அலகாபாத், அமிர்தரசு போன்ற பல நகர்களில் என்னையும் உடனழைத்துக் கொண்டு பெரியார் சுற்றுப் பயணம் செய்தபோது, ஒவ்வோர் ஊரிலும் இதைப் போலவே கேட்டனர். யார்? அந்த ஊர்களிலே உள்ள பகுத்தறிவுவாதியார்.

அந்த இடத்துப் பகுத்தறிவுவாதிகள் படிப்பார்கள், பெரிய பெரிய ஏடுகளை;

எழுதுவார்கள், அழகழகான கட்டுரைகளை; கூடிப் பேசுவார்கள், சிறிய மண்டபங்களில், போலீசின் பாதுகாப்புப் பெற்றுக் கொண்டு இங்கோ?

இங்கா? இவர் பேசாத நாள் உண்டா? இவர் குரல் கேளாத ஊர் உண்டா? இவரிடம் சிக்கித் திணறாத பழைமை உண்டா? எதைக் கண்டு இவர் திகைத்தார்? எந்த மூடநம்பிக்கை இவரது தாக்குதலைப் பெறாதது?

'ஏ, அப்பா! ஒருவரே ஒருவர்! அவர் நம்மை அக்குவேறு ஆணிவேறாக எடுத்தெடுத்து வீசுகிறாரே!' என்று இந்நாட்டை என்றென்றும் விடப் போவதில்லை' என்று எக்காளமிட்டுக் கொண்டிருந்த பழைமை அலறலாயிற்று! புதுப் புதுப் பொருள் கொடுத்தும், பூச்சு மெருகு கொடுத்தும் இன்று பழைமையின் சில பகுதிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்றாலும், விழுந்த அடியால் அடித்தளம் நொறுங்கிப் போய்விட்டிருக்கிறது என்பதனை அறியாதார் இலர்.

எனவேதான்,

பெரியாருடைய பெரும்பணியை, ஒரு தனி மனிதரின் வரலாறு என மட்டுமின்றி, ஒரு சகாப்தம் – கால கட்டம் – ஒரு திருப்பம்.

– எனவும் நான் கூறுவது வழக்கம். அக்கிரமம் தென்படும்போது, பெரும்பாலோர்க்கு, 'அது நம்மைத் தாக்காதபடி தடுத்துக் கொள்ள வேண்டும்' என்னும் எண்ணமும் ஒதுங்கிக் கொள்வோம்! என்னும் பாதுகாப்பு உணர்ச்சியுமே தோன்றும், எதிர்த்து நிற்க வேண்டும் என்னும் எண்ணம் எளிதில் எழுவதில்லை.

அக்கிரமம் எங்கு இருக்கக் கண்டாலும், எந்த வடிவிலே காணப்படினும், எத்துணைப் பக்க பலத்துடன் வந்தாலும் அதனை எதிர்த்துப் போரிடத் தயங்குவதில்லை பெரியார். அவர் கண்ட களங்கள் பல! அவர் பெற்ற வெற்றிகள் பலப்பல! அவர் தொடுத்த போர் நடந்தபடியே இருக்கிறது. அந்தப் போரிலே ஒரு கட்டத்தில் அவருடன் இருந்திருக்கும் வாய்ப்பினைப் பெற்ற நாள்களையே நான் 'வசந்தம்' என்று குறிப்பிட்டேன்.

பெரியாரால் ஏற்படுத்தப்பட்ட அறிவுப் புரட்சி, எளிதில் நிற்கப் போவதில்லை. அது போக வேண்டிய தூரத்திற்குப் போய் அடைய வேண்டிய சக்தியை – இலக்கைத் தொட்ட பின்புதான் நிற்கும். எப்படி வில்லை விட்டுக் கிளம்பிய கணையின் வேகம், பாய வேண்டிய இடத்தில் பாய்ந்தேதான் நிற்குமோ, அப்படியே அவரிடத்திலிருந்து பிறந்த அறிவுக்கணை, எந்த இலட்சியத்தை அடைய வேண்டுமோ, அதை அடைந்தே தீரும்; இதில் யாருக்கும் ஐயம் இல்லை.

**- பேரறிஞர் அண்ணா தமிழக முதல்வராய் இருந்தபோது எழுதப்பட்டக் கட்டுரை.**

**இலக்கியம் என்பது நாகரீகத்தைப் புகட்ட வேண்டும். மக்களிடம் உயரிய குணங்களைப் புகுத்துவதாக இருக்க வேண்டும்.**

**– தந்தை பெரியார்**

**காலம் மாறக்கூடியது. மாறிக் கொண்டுதான் இருக்கும். காலத்திற்கேற்ப கருத்தில் மாற்றம் வேண்டும். மாறாத சமுதாயம் மறைந்து விடும்.**

**– பேரறிஞர் அண்ணா**

# இயற்கையின் புதல்வர்

(சேலம் நேரு கலையரங்கில் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் 11-1-1974 அன்று நடைபெற்ற "தந்தை பெரியார்" கவியரங்கில் கலைஞர் அவர்களின் தலைமைக் கவிதை முன்னுரை)

மாண்புமிகு அமைச்சர்களே, மாவட்டத் தோழர்களே
வணக்கம்.
வளமார் தமிழகத்துக் கவிஞர்க்கும்
வாஞ்சைமிகு சேலத்துப் பெரியோர்க்கும்
உளமார்ந்த என் வணக்கம் - ஏற்றிடுவீர்.

ஓய்வில்லை எனக்கென்று தெரிந்திருந்தும்
உரிமையுடன் கவியரங்கு நிகழ்த்த
வரவேண்டுமென்று
உத்திரவை வேண்டுகோளாய் விடுத்துவந்தார் - என்
உழுவலன்பர், உழைக்கின்ற மெய் அன்பர்,
உங்களூர்க் கிருஷ்ண நண்பர்

நம்மைப்
படகுபோல் கவிழ்த்திடுவோம் என்கின்றார்; இந்தப்
படகேறிப் பதவியிலே தொற்றிக்கொண்டார் -
தூளாக ஆக்கிடுவோம் என்கின்ற துரோகிகளும்
முதுகில்பாயும்
வாளாக மாறிடுவோம் என்கின்ற பாவிகளும்
சூழ்ந்தெதிர்க்கும் சூழ்ச்சியினை முறியடிக்க, நான்
சிந்தனையில்
ஆழ்ந்திருக்கும் போதன்றோ ஆணையிட்டார்
கவி எழுத
நேற்று, காலை முதல் நள்ளிரவு முடியும்வரை
ஏற்றமிகு நிகழ்ச்சிகள் எட்டுக்குமேல் கோவையிலே!
கற்பனை
ஊற்றுக்கண் திறக்குமா அதற்கு மேலே? இருந்தாலும்
காற்றுக்கு அசைகின்ற கொடிபோல - நண்பர்களின்
கட்டளைக்கு அசைகின்றேன் கவிபாட!

கவி எழுதும் ஆற்றல் எனக்குண்டென்ற காரணத்தால்
கவியரங்கத் தலைமைக்குத் தூண்டுகோலாய்த்
துணைநின்ற
கணபதியை நினைக்கின்றேன். கவியரங்கம்
தொடர்கின்றேன்.
ஆர்.வி. கணபதியை நினைக்கின்றேன்
அழகு தமிழ்க் கவியரங்கம் தொடர்கின்றேன்.

பூமியிலே நம்மை வாழவைத்து வளரவைத்த
சாமிதனை முதன் முதலில் தொழுதிடுவோம் - ராம
சாமிதனை முதன் முதலில் தொழுதிடுவோம் -
பெரியார்
ராமசாமிதனை முதன் முதலில் தொழுதிடுவோம்.
கவியரங்கம் பாடவந்த, காணவந்த பெருமக்காள்!
திருவரங்கப் பெருமாள் போல் படுத்திருந்த
தமிழ்உணர்வைத்
திசையெட்டும் சிலிர்த்தெழுந்து முழங்கச்செய்து
தீரமிகு பணிகள் பல ஆற்றியவர் பெரியார் அன்றோ?

தமிழ் அரங்கம், தனி அரங்கம் கண்டவர்க்குக்
கவியரங்கம் பாடுவது பொருத்தமன்றோ?
அதனால்தான்
"பயிர் போன்றோர் உழவருக்குப் பால்போன்றோர்
குழந்தைகட்குப் பசும்பால் கட்டித்
தயிர் போன்றார் பசித்தவர்க்குத் தாய் போன்றார்
ஏழையர்க்குத் தகுந்தவர்க்குச்
செயிர் தீர்ந்த தவம்போன்றார் செந்தமிழ்
நாட்டில் பிறந்த மக்கட்கெல்லாம்
உயிர் போன்றோர்' என்று
பாரதிதாசப் பாவேந்தன் பாடிச்சென்றான் அவரை!
"வீடுகட்டி அதற்குள்ளே வைக்கோலைத்
திணிப்பதுவோ?
வீடுகட்டாமலே வைக்கோற்போர் போடலாமே
எனச் சொன்ன ஈ.வெ.ரா. நாத்திகரா?
இல்லை இல்லை!
அவர்,
இயற்கையின் புதல்வர் - இந்த மண்ணை மணந்த
மணாளர்...
எதிர்காலத் தமிழகத்துப் பெருமைக்குத் தூதர்" என்று
அக்ரகாரத்து அதிசய மாமனிதர் வ.ரா. முன்பு
அழகாக வரைந்தார் ஒரு கட்டுரைதான்!
தங்கத்தின் உருக்கில் வந்த தனித்ததோர்
ஒளியைப்போல
செங்கதிர் உதயமாகும் செவ்வானம் வெட்கியோடப்
பொங்கியே எழுந்தார் பெரியார், புதுமைக்காளைகள்
கோடி



உறுதியாய்க் கூறிநின்றார் குருதிதான் பணயமென்று!
அங்கத்தில் பழுதென்றால் அறுத்தெறிய ஒப்புகிறோம்,
உயிர்பிழைக்கப்
பங்கமுறு சாதிமத பேதங்களால் அல்லலுறும் - மனித
சங்கத்தின் நோய் களையத் திகைக்கின்றோம்
சரிதானா? எனக்கேட்டார்.

அந்தச்
சிங்கத்தின் குரல்கேட்டுச் சிறுநரிகள் ஊளையிட்ட
கதைதானே நடந்ததிங்கே!
வங்கத்துத் தாகூர் போல் தாடியுண்டு
பொங்குற்ற வேங்கை போல் நிமிர்கின்ற பார்வை
உண்டு
செங்குன்றத் தோற்றம் உடலில் உண்டு - வெண்
சங்கொத்த கண்களிலே விழியிரண்டும் கருவண்டு -
அதில்
சாகும்வரை ஒளி உண்டு!
பம்பரமும் ஓய்வுபெறும் சுற்றியபின் - இவரோ
படுகிழமாய்ப் போன பின்னும் பரம்பரமாய்ச் சுற்றி
வந்தார்;
எரிமலையாய்ச் சுடுதழலாய்
இயற்கைக் கூத்தாய்
எதிர்ப்புகளை நடுங்கவைக்கும் இடிஒலியாய்
இன உணர்வுத் தீப்பந்தப் போரொளியாய்
இழிவுகளைத் தீர்த்துக்கட்டும் கொடுவாளாய்
இறைவனுக்கே மறுப்புச் சொன்ன இங்கர்சாலாய்
எப்போதும் பேசுகின்ற ஏதென்நகர் சாக்ரடீசாய்
ஏன் என்று கேட்பதிலே வைரநெஞ்ச வால்டேராய்
எம்தந்தை பெரியாரும் வாழ்ந்திட்டார். இன்றைக்கோ
இறப்பின் மடியினிலே வீழ்ந்திட்டார்.

மதுவிலக்கு தேவை என்று மகாத்மா காந்தி
சொன்னவுடன்
மதுக்கலயம் கட்டாமல் இருப்பதற்குத் தோட்டத்தில்
மண்டி நின்ற தென்னைகளை வெட்டிச் சாய்த்தார் -
வைக்கத்து வீரர் என்று யாரைச் சொன்னோம்?
"வை கத்தி! தீண்டாமை கழுத்தில்" என்று
வரிப்புலியாய்க் களம் சென்று வாகைசூடி
வையத்து மக்கள் தந்த பட்டமன்றோ வைக்கம்வீரர்!
காங்கிரசுக் கட்சிக்கு மீகாமனாய்க்
கதர் இயக்க வெற்றிக்குத் தளபதியாய்க்
காந்தி வழி நின்றிட்ட கர்மவீரன்
கட்சிக்குள் போராடக் காலம் வந்து
காஞ்சிபுரம் மாநாட்டில் வெளிநடந்தார்

வ.வே.சு. அய்யர் என்பார் வடிகட்டிய தேசபக்தர்
வகுப்புவாத உணர்வாலே வம்புக்கு
அழைப்புத் தந்தார் -

சேரன்மாதேவி ஊரில் சிறந்ததொரு குருகுலத்தில்
ஒரு குலத்துக்கொரு நீதி கடைப்பிடித்தால்
சகிக்குமா பெரியார்மனம்? சமருக்கு வில்வளைத்தார்,
சரித்திரம் படைக்கலுற்றார். அதனி விளைவாய்த்
தன்மான இயக்கத்தின் தந்தையாகத்
தமிழர் இனப்பாதுகாப்புத் தலைவராகப்
பெரியார் ஆனார் - புது
நெறியார் ஆனார்!
பிற்பட்டோர் நலனுக்கென்று நீதிக்கட்சி
பெரும்பணிகள் இயற்றிடவே முனைந்தபோதும் - அது
பித்தாபுரம் பனகல் என்று பிரபுக்கள் காலடியில்
வற்றாத செல்வந்தர் கைத்தடியில் இருந்ததாலே
அதைமாற்றி
மாளிகையில் இருந்தகட்சி மக்களிடை வருவதற்கு
மாமேதை அண்ணாவின் துணையுடனே வெற்றி
கண்டார்
மந்தி கை மாலையென
இந்தி கைத் தமிழர், ஆக
வஞ்சகச் சூழ்ச்சிகள் வலையாக விரிந்தபோது
அஞ்சிடா நெஞ்சுகொண்டு அறுத்தவர் பெரியார்தானே?
அவர்,
பாதம் படாத பட்டி தொட்டி உண்டோ - அவர் பேர்
கேட்டுக்
காதம் ஓடுகின்ற ஆத்திகரும் (அவர்) பேசக்கேட்டால்,
தமிழ்க்

கீதம் கேட்ட கிறுகிறுப்பில் மயங்கிப்போவார்.
அறிவு மழை பொழியும் எழில்
வழியும் - இருள்கழியும்
தெளிவுமிகு உரைகள் பல
ஒளிரும் திறன் மிளிரும் -
கடலின்மடை அலையின்ஒலி - மலையின் முடி -
தழுவும் முகில் வழியும்!
அறிவு மழை பொழியும்!
ஆணவங்கள் அழியும்!
அடிமை முறை ஒழியும்,
அய்யாவின் பேச்சென்றால்
அதிரசம் தின்பதுபோல் கழகத்தவர்க்கு,
அணுகுண்டு வெடித்ததுபோல்
கயவர்கட்கு!
அவர் தலைமை ஏற்று நானும் அவருடனே
ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்தெட்டில்
ஆரூரில் மாணவனாய் இருந்தபோதே
இணைந்துவிட்டேன்.
அதன்பிறகு புதுவையில் நான் தாக்குண்டபோது
அய்யாவின் கையாலே மருந்திட்டார், என் காயத்திற்கு!
குடியரசு அலுவலகக் குருகுலத்தில்
கொள்கை வழிப்பாடங்கள் பயின்றகாலை - நான்
தமிழரசுத் தலைவனாக வருவேன் என்றும்,
எனைவளர்த்த
தந்தைக்கு அரசு மரியாதையுடன்
இறுதி வணக்கம் செய்வேன் என்றும்,
எண்ணியும் பார்த்ததில்லை;

"பாராட்டிப் போற்றிவந்த பழமை லோகம்
ஈரோட்டுப் பூம்பத்தால் இடியுது பார்!
ஈவெரா என்ற வார்த்தை இந்நாட்டு வஞ்சகத்தின்
அடிபீடம் ஆட்டுகின்ற சூறாவளியாம் - அவர்
வெண்தாடி அசைந்தால் போதும்,
கண்சாடை தெரிந்தால் போதும்...
கறுப்புடை தரித்தோர் உண்டு - கொடுமையை
நறுக்கியே திரும்பும் வாட்கள்"
ஈரோட்டு குருகுலத்தில் நான் இயற்றியது இப்பாடல்!
இன்றைக்கும் நினைக்கின்றேன் - பெரியார்
இளவயதில் மறையவில்லை
நிறைவயது வாழ்ந்துவிட்டே ஓய்வு கொண்டார்
எனினும்,
தாஜ்மகால் திடுமெனத் தரைக்குள்ளே போய்விட்டால்
அதைக் கட்டி, ஆண்டு பல ஆயிற்றே என்று
ஆறுதல்தான் பெறுவோமா?
தஞ்சைக் கோபுரம் சாய்ந்துவிட்டால் அதற்கு
வயது அதிகமென்று சொல்லித்
தாங்கதல்தான் எளிதாமோ? இவரோ,
தஞ்சைக் கோபுரம்போல் உயர்ந்தவர் -
தாஜ்மகால்போல் சரிதம் படைத்தவர் -
அவர் வாழ்வார் வாழ்வார் என்று வாழ்த்துகின்றேன்,
வாழ்கின்ற பெரியார் பற்றிப் பாடுதற்கு வண்டமிழ்க்
கவிஞர்களை
வரிசையாக அழைக்கின்றேன்!

*– கலைஞரின் கவிதைகள் நூலிலிருந்து...*

**வரவுக்கு மேல் செலவிடக்கூடாது. வரவிற்குள் செலவிட்டு ஒருசிறு தொகையையாவது சேமிக்க வேண்டும்.**

**– தந்தை பெரியார்**

**தீண்டாமையானது மதத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல. பொருளாதாரத்தையும் அடிப்படையாகக் கொண்டது. இது அடிமைத் தனத்தைக் காட்டிலும் மிகவும் மோசமானது.**

**– டாக்டர் அம்பேத்கர்**

# பெரியார் குறித்து பெரியோர்கள்

இந்தியாவில் இன்று பொது வாழ்வில் உள்ள மிக முக்கியமான பிரபலஸ்தர்களில் பெரியார் அவர்களும் ஒருவர் என்பதைத் தயங்காமற் கூறுவேன்.

செய்கையில் உண்மை, நீதியை நிலை நாட்டுவதில் அடங்கா ஆர்வம், சிறிதும் தன்னலமென்பதே இல்லாத வாழ்க்கை – இவைகளே ஒரு மனிதனைச் சிறந்தவனாக ஆக்கக்கூடியனவென்றால், உண்மையிலேயே பெரியார் நம்முடைய மிகச் சிறந்த மனிதர்களில் ஒருவராவார். நாட்டிற்குத் தொண்டு புரிவதற்காகவே தம்முடைய வாழ்க்கையைப் பயன்படுத்துவதிலுள்ள அவரது ஆர்வமும், இந்திய சமுதாயத்திலுள்ள கேடுகளை ஒழிப்பதற்காக அவைகளுக்கெதிராய்ச் செய்து வரும் பிரச்சார முறைகளும், அவைகள் மீது அவருக்குள்ள நியாயமான கோபாவேசமும், இக்காரணங்களுக்காக அவர் செய்துள்ள மகத்தான தியாகங்களும் தமிழ்நாட்டு மக்களின் உள்ளத்தில் பெரியாருக்கு ஒரு நிரந்தரமான இடங் கிடைக்குமாறு செய்துவிட்டன.

**- சர் ஆர். கே. சண்முகம் செட்டியார்.**

இராமசாமிப் பெரியார், அவர் ஈரோட்டில் பிறந்து வளர்ந்தவர். அவர் தம் புகழோ தென்னாடெங்கிலும், வடநாட்டிலும், பிற நாடுகளிலும் மண்டிக் கிடக்கின்றன! காரணம் என்ன? தோழர் ஈ.வெ.ராவின் உண்மையும், வாய்மையும், மெய்ம்மையும் செறிந்த அறத்தொண்டாகும்.

தோழர் இராமசாமியார் பல நூல் பயின்றவரல்லர்; அவர் செல்வராயினும் எளிமையில் நின்று பழகியவர்; இக்காலச் சூழ்ச்சியே அவருக்குத் தெரியாது. அவர் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதவர்.

உரிமை வேட்கை, அஞ்சாமை முதலியன ஈ. வெ. ராவின் தோற்றத்திலேயே பொலிதல் வெள்ளிடை மலை.

**- திரு.வி.க.**



சீரார் ஈ.வெ.ரா. அவர்களுக்கும் எனக்கும் உள்ள அக நகும் நட்பு யார் என்ன சொன்ன போதிலும் என்றும் குறையாது.

**- இராஜாஜி**

பெரியார் அவர்கள் வாழ்நாள் முழுவதும் சாதி, மூடநம்பிக்கைகளை முழு மூச்சுடன் எதிர்த்த பெருந்தலைவர்.

**- ஜெயப்பிரகாஷ் நாராயணன்**

வைக்கம் வீரர் ஒரு மனிதர் அல்லர்; அவர் எனக்கு ஒரு மனிதராகத் தோன்றவில்லை. ஒரு கொள்கையாகவே தோன்றுகிறார்.

உலகத்தில் எந்தெந்தத் தேசங்கள் முன்னேறியிருக்கின்றனவோ, அந்தந்தத் தேசங்களில் இவரது



கொள்கை நிலவக் காணலாம். மற்றும், தீவிரமாக எந்த மக்கள் சுதந்திரப் போராட்டம் செய்கின்றனரோ, அந்த மக்கள் இந்தக் கொள்கையையே கொண்டிருப்பதையும் காணலாம்.

**- எஸ். இராமநாதன்**

மற்றவர்களுடைய உணர்ச்சி எவ்வாறு பாதிக்கப்படும் என்பதைக் கொஞ்சமும் மதியாது, தமக்குச் சரியென்று பட்டதை வலியுறுத்தி வந்த காரணத்தாலேயே நான் அவரிடம் மாறாத அன்பு கொண்டேன். அத்தகைய ஒரு சிறந்த குணமே இப்போது நம் மக்களின் முற்போக்குக்கு அவசியமாயிருக்கிறது.

**• - டாக்டர் பி. சுப்பராயன்**

மேனாட்டில் அன்று பிறந்து வளர்ந்த சாக்ரடீஸ் என்ற ஓர் அறிஞரைப் பற்றிக் கேட்டோம். ஆனால், கண்டோமில்லை. இவ்விந்தியாவிலேயே, அங்ஙனம் கண்டதாகக் கூறுவாருமில்லை.

எனினும், இத்தமிழ்நாட்டில், இன்று அரும்பெரும் செயலாற்றும் ஒரு சாக்ரடீஸைக் கண்டோம்; தாடியோடு கண்டோம். அவர்தான் நம் ஈ.வெ.இராமசாமிப் பெரியார்.

**- பட்டுக்கோட்டை அழகிரிசாமி**

திரு.ஈ.வெ.இராமசாமிப் பெரியார் சட்டசபைகளைப் பற்றியோ, அரசாங்கத்தைப் பற்றியோ கவலை கொள்ளாதவர். அவர் ஏழைகளுக்குத் தொண்டு செய்வதே – தமது பிறவியின் பயன் என்று கருதியிருப்பவர்.

**- எம்.ஆர். ஜெயகர்**

தற்காலத் தமிழகத்தில் தலைநின்று, ஒல்லும் வகை ஓயாது உழைத்து, தமிழர் வாழ் உயர்வளம் சிறக்க உரிமைப் போர்த்தலையணியில் பொருதுவரும் ஒப்புயர்வற்ற தலைவர், இராமசாமிப் பெரியார். காந்தியடிகளாலும் பாராட்டப்பெற்றுப் பொதுநலம் பேணும் அறம் திறம்பா அருண்மறவரிவர். கலாநிலையக் கல்விப் பட்டங்கள் பெறாமலும், மானமிழந்து பிறர் பின் நின்று பதவி முதலிய வீண் பெருமை தேட விரும்பாமலும், ஊக்கமும் வாய்மையும் ஆக்கமனைத்தும் தரும் என்பதை நாள்தோறும் தாம் வாழ்ந்து காட்டும் சால்புடையார். கல்வி வளம் செல்வம் போல் மிகுந்து மலிந்த ஆங்கில நாட்டில், கல்லூரிப் பயிற்சி மிக இல்லாமல், தன்னலமறந்து, பிறர் உரிமை பேண முயன்று, பெருமையும் புகழும் பெற்றுயர்ந்து 'பிராட்லா' வைப் போலவே, நமது பெரியாரும் தம் வாழ்வனைத்தும், தமிழர் உரிமை பேணும் அறப்போருக்குதவி, நல்லோர் மதிப்பும் அல்லோர் அழுக்காறும் நாளும் பெருக்கும் இயல்புடையார்.

**- நாவலர் ச.சோமசுந்தர பாரதியார்**

திரு. இராமசாமி நாயக்கரைப் பற்றி, நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. அவரைப் பற்றி ஐரோப்பாவிலே உள்ள பார்லிமெண்டில் பேசப்படுகிறது என்றால் நாயக்கரின் புகழைப் பற்றி நான் என்ன சொல்வது?

திரு.நாயக்கரிடத்திலுள்ள விசேஷ குணம் என்னவென்றால், மனத்திற்படும் உண்மையை ஒளிக்காமல் சொல்லும் ஓர் உத்தம குணந்தான்.

**- வ.உ. சிதம்பரனார்**

சாதிக்கொடுமைகளை அறவே ஒழித்திட தீவிரமாகப் போரிட்டு வருபவர் பெரியார் இராமசாமி மத மூடநம்பிக்கைகளையும் சமூகக் கேடுகளையும் கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக எதிர்த்து வருபவர் பெரியார். பெரியார் ஒரு வெற்றி வீரர். அவர் ஓர் ரட்சகர்.

**- ஜகஜீவன்ராம்**
முன்னாள் மத்திய அமைச்சர்

நாயக்கர் நல்ல வேலைகளைச் செய்துள்ளார். தீண்டாமையைத் தொலைக்க வைக்கத்தில் சத்தியாகிரகம் செய்து சிறைப்பட்ட பாக்கியம் பெற்ற தமிழ்த்தலைவர் நாயக்கர் ஒருவரே ஆவர்.

**- டாக்டர் பி. வரதராஜுலு**



# அவர்தாம் பெரியார்

அவர்தாம் பெரியார் - பார்
அன்புமக்கள் கடலின் மீதில்
அறிவுத் தேக்கம் தங்கத் தேரில்...(அவர்)

மக்கள் நெஞ்சில் மகிழ்வுப் பதிப்பு
வஞ்ச கர்க்கோ கொடிய நெருப்பு
மிக்க பண்பின் குடியிருப்பு
விடுதலைப் பெரும் படையின் தொகுப்பு...(அவர்)

தொண்டு செய்து பழுத்த பழம்
தூய தாடி மார்பில் விழும்
மண்டைச் சுரப்பை உலகு தொழும்
மனக்குகையில் சிறுத்தை எழும்...(அவர்)


தமிழர் தவம்கொடுத்த நன்கொடை
தன்மானம் பாயும்தலை மேடை
நமக்குத் தாண்டி அந்த வாட்படை
நமை அவரின் போருக் கொப்படை....(அவர்)

– பாவேந்தர் பாரதிதாசன்
(குயில் : 26–8–1956)

# தேசியச் செம்மல்

கார்கா லத்துக் கறுத்த மேகங்கள்
மண்ணிடைப் பொழியும் மழைபோல் நாட்டில்
சீர்திருத் தத்தைத் திறம்படச் சொன்னவர்
செந்தமிழ் எழுத்தில் திருத்தம் செய்தவர்
மதுவிலக் கென்பதை மனதால் விரும்பி
மனையின் தென்னை மரங்களை வெட்டி,
செயலில் காட்டிய திறமிகு தலைவர்
கடைகளி லிருந்து கதருடை எடுத்து
தெருவினில் விற்ற தேசியச் செம்மல்
சரியோ தவறோ தனக்குள் பட்டதை
புட்டுப் புட்டுப் புகன்றதோர் நேர்மையர்
எதிர்ப்பில் பிறந்து எதிர்ப்பில் வளர்ந்து
இறுதி வரைக்கும் இயங்கிய சூரணர்
கருத்து மாற்றங்கள் காணினும் அவரை
ஒப்புக் கொண்டனர் ஒவ்வொரு தலைவரும்!
தனக்கென என்றுத் தனிவழி வகுத்து,
வந்தவர் கணக்கோ வாராதவர் கணக்கோ
பாராது சென்ற பழந்தமிழ்த் தலைவர்
பெரியார் தமது பிறந்தநாள் இன்று!

– கவியரசர் கண்ணதாசன்



# சென்ட்ரல் - எழும்பூர் ரயில் நிலையங்களை இணைக்கும் ரயில் பாதை

சென்னை சென்ட்ரல், எழும்பூர் ரெயில் நிலையங்களை இணைக்கும் வகையில் ரூ.200 கோடி செலவில் மேம்பால ரெயில் பாதை அமைக்கப்படவுள்ளது. இந்த அகல ரெயில் பாதை 2 கிலோ மீட்டர் தூரம் கொண்டது.

இந்த மேம்பால ரெயில் பாதை அமைக்கும் திட்டம் குறித்து தமிழக போக்குவரத்துத்துறை அமைச்சர் பொன்முடி தலைமையில் 22-9-99 அன்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.


ரெயில்வே, பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்தவர்களும் போக்குவரத்துத்துறை வல்லுநர்களும் இதில் கலந்து கொண்டனர்.

வட மாநிலங்களிலிருந்து சென்ட்ரலுக்கு வரும் பயணிகள் எழும்பூர் செல்லவும், தமிழகத்தின் தென்மாவட்டங்களிலிருந்து எழும்பூர் வரும் பயணிகள் நேரடியாக சென்ட்ரலுக்குச் செல்லவும் இந்த மேம்பால ரெயில் பாதை உதவும்.

சென்ட்ரல், எழும்பூர் ஆகிய இரு ரெயில் நிலையங்களுக்கும் இடையில் எந்த நேரமும் இயங்கும் வகையில் ஷட்டில் சர்வீஸ் தொடங்குவது குறித்தும் பரிசீலிக்கப்படும். இப்போது சென்ட்ரலுடன் நிறுத்தப்படும் சில ரெயில்களை எழும்பூர் வரையும், எழும்பூருடன் நிறுத்தப்படும் ரெயில்களை சென்ட்ரல் வரையும் நீட்டித்து இயக்க இந்தப் பாலம் பயன்படும்.


எழும்பூரிலிருந்து தரை மட்டத்தில் தொடங்கும் இந்தப் புதியபாதை, காந்தி-இர்வின்பாலத்தைக் கடந்ததும் படிப்படியாக உயர்நிலைப் பாதையாக மாறும். கடற்கரை திருமயிலை இடையே துரித ரெயில் சென்றுவர அமைக்கப்பட்டுள்ளதைப் போன்ற உயர் நிலைப்பாதையாக அது இருக்கும்.

பூங்காநகர் ரெயில் நிலையம், மத்திய சிறைச்சாலை ஆகிய பகுதிகளைக் கடந்து சென்ட்ரல் ரெயில் நிலையத்துக்கு எதிரே வளைந்து திரும்பும். ஈ.வெ.ரா. பெரியார் நெடுஞ்சாலையைக் கடந்து சென்ட்ரல் வளாகத்துக்குள் இந்த உயர்நிலைப்பாதை நுழையும். பெரியார் சாலையின் மீது 6.5 மீட்டர் உயரத்தில் ரெயில் பாதை அமைந்து இருக்கும்.



சென்ட்ரலில் இந்த மேம்பாலப் பாதைக்கென்று அமைக்கப்படும் உயர்நிலை பிளாட்பாரத்துடன் மேம்பால ரெயில் பாதை இணைக்கப்படும்.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் போது சிறைத்துறைக்குச் சொந்தமான நிலங்களைக் கட்டுமானப் பணிகளுக்குப் பயன்படுத்த நேரிடும். எனவே, சிறைத்துறை ஒப்புக் கொண்டால், மத்திய சிறைச்சாலையை இப்போதுள்ள பகுதியிலிருந்து வேறு பகுதிக்கு மாற்றலாம். சென்னையில் ரெயில்வேக்குச் சொந்தமான நிலங்கள் உள்ளன. அவற்றில் சிறைத்துறை விரும்பும் இடத்தை அளிக்கலாம் என்ற கருத்தும் உள்ளது. சிறைத்துறை ரெயில்வே துறையின் ஒப்புதலைப் பெற்ற பிறகே மேம்பால ரெயில்பாதை அமைக்கும் கருத்துக்கு செயல் வடிவம் தரப்படும் என்றும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும வட்டாரங்கள் தெரிவித்தன. ★



**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர், சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தையும் எழும்பூர் ரயில் நிலையத்தையும் இணைக்கும் மேம்பாலத் திட்டத்தின் மாதிரி வடிவத்தை 23-9-1999 அன்று தலைமைச் செயலகத்தில் பார்வையிடுகிறார்.**

## 17 புதிய காவல் நிலையங்கள்

காவல்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதங்களுக்கு பதில் அளித்து, 10—5—99 அன்று சட்டப்பேரவையில் உரையாற்றியபோது, இவ்வாண்டில், தமிழகத்தில் 17 இடங்களில் புதிய காவல் நிலையங்கள் திறக்கப்படும் என முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பின்படி, கோவையில் உக்கடம், வெரைட்டி ஹால் சாலை ஆகிய இடங்களில் இரண்டு காவல் நிலையங்களைத் திறந்திட 4—6—1999 அன்று ஆணையிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து சென்னையில் சீரணி அரங்கம், வடபழனி, கடலூர் மாவட்டத்தில் மருதூர், சோழத்தலம் — திண்டுக்கல் மாவட்டத்தில் தாடிக்கொம்பு, வில்லூர், மதுரை மாவட்டத்தில் கூடல் புதூர், திருவாரூர் மாவட்டத்தில் வைப்பூர், நாகை மாவட்டத்தில் திருக்குவளை, தூத்துக்குடி மாவட்டத்தில் குரும்பூர், நெல்லை மாவட்டத்தில் குருவிகுளம், விழுப்புரம் மாவட்டத்தில் பெரிய தச்சூர், விருதுநகர் மாவட்டத்தில் ஆவியூர், திருவண்ணாமலை மாவட்டத்தில் வந்தவாசி—தெற்கு, திருவள்ளூர் மாவட்டத்தில் கவரைப்பேட்டை ஆகிய 15 இடங்களில் புதிய காவல் நிலையங்களைத் திறந்திட முதலமைச்சர் 22—9—99 அன்று ஆணையிட்டுள்ளார். இந்த 17 காவல் நிலையங்களும் மொத்தம் 8.43 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படுகின்றன.

## கனிம நிறுவனம்

தமிழ்நாடு கனிம நிறுவனம் (TAMIN) தனது வரலாற்றில் முதல் தடவையாக இந்த ஆண்டில் 53.17 கோடி ரூபாய் விற்பனை செய்து சாதனை படைத்துள்ளது. இதன் மூலம் 1998-99ஆம் ஆண்டில் மொத்தம் 7.24 கோடி ரூபாய் இலாபம் ஈட்டியுள்ளது. இது முந்தைய ஆண்டில் ஈட்டிய இலாபத்தைவிட 2.25 கோடி ரூபாய் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இலாபத் தொகையில் தமிழக அரசுக்கு 40 விழுக்காடு பங்கு ஈவுத்தொகையாக 3 கோடியே 14 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.எல்.கே.திரிபாதி 22-9-1999 அன்று வழங்கினார். தலைமைச் செயலாளர் திரு.ஏ.பி. முத்துசாமி, தொழிற்துறை செயலாளர் திரு.எம்.எஸ். சீனிவாசன் ஆகியோர் உடனிருந்தனர்.

## திருக்குறளை மலையாள மொழியில் அச்சிட்டு வெளியிட ரூ.2 இலட்சம் நிதியுதவி முதல்வர் கலைஞர் ஆணை

மலையாள இலக்கிய உலகில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்பவர் திரு.ரமேசன் நாயர். இவர் குமரி மாவட்டம் தக்கலை அருகேயுள்ள குமாரபுரத்தைச் சேர்ந்தவர். இவர் ஏற்கெனவே மலையாளத்தில் நூலையும், பாரதியார் கவிதைகளில் சிலவற்றையும் மலையாளத்தில் மொழி பெயர்த்துள்ளார். தற்போது திருக்குறள் நூலை மலையாள மொழியில் மொழிபெயர்த்து, அதனை நூலாக வெளியிட தமிழக அரசிடம் நிதியுதவி கோரியுள்ளார்.

திரு. ரமேசன் நாயர் செய்துள்ள திருக்குறளின் மலையாள மொழிபெயர்ப்பு தெளிவுரையோடு, மலையாள மக்கள் திருக்குறள் கருத்துகளை எளிதாகப் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் அமைந்துள்ளது. எனவே, திரு.ரமேசன் நாயரின் கோரிக்கையினைக் கனிவோடு ஏற்று, அவரது திருக்குறளின் மலையாள மொழி பெயர்ப்பினை நூலாக வெளியிட அவருக்கு 2 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கி முதல்வர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.



*மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர் திரு.வ.முல்லைவேந்தன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.சுரேஷ்ராஜன், செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு.க. முத்துசாமி ஆகியோர், 25-9-1999 அன்று, கன்னியாகுமரி கடலில் அரசின் சார்பில் அமைக்கப்படும் 133 அடி உயர திருவள்ளுவர் சிலை அமைப்புப் பணிகளை பார்வையிட்டனர். (படம் : சிலையின் பீடத்தை சுற்றி அமைக்கப்படவுள்ள யானை சிலையின் தோற்றம்)*

# நாடாளுமன்றத் தேர்தல்

நாடாளுமன்றத் தேர்தல் தமிழ்நாட்டில் 5-9-1999, 11-9-1999 ஆகிய இருநாட்களில் இருகட்டமாக நடைபெற்றது. முதல் தடவையாக இத்தேர்தலில் மத்திய சென்னை, தென் சென்னை, கோவை, மதுரை ஆகிய தொகுதிகளில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் பயன்படுத்தப்பட்டது.

திண்டிவனம், கடலூர், சிதம்பரம் (தனி), ராசிபுரம் (தனி), மதுரை, கரூர், திருச்சி, பெரம்பலூர் (தனி), மயிலாடுதுறை, நாகப்பட்டினம் (தனி), தஞ்சாவூர், புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், சிவகாசி, திருநெல்வேலி, தென்காசி (தனி), திருச்செந்தூர், நாகர்கோவில் ஆகிய 19 தொகுதிகளில் 5-9-1999 அன்று காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 5 மணி வரை வாக்குப்பதிவு நடைபெற்றது. இத்தொகுதிகளில் 153 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

## பதிவான வாக்குகள் விவரம்

| எண். | தொகுதி | மொத்த வாக்காளர்கள் | | | பதிவான வாக்குகள் | | | பதிவான வாக்குகள் (%) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் கள் | பெண் கள் | மொத் தம் | ஆண் கள் | பெண் கள் | மொத் தம் | ஆண் கள் | பெண் கள் | மொத் தம் |
| 10. | திண்டிவனம் | 563497 | 564674 | 1128171 | 368441 | 328284 | 696725 | 65.38 | 58.14 | 61.7 |
| 11. | கடலூர் | 568415 | 567542 | 1135957 | 375512 | 359426 | 734938 | 66.06 | 63.33 | 64.70 |
| 12. | சிதம்பரம் | 560275 | 549747 | 1110022 | 387970 | 345835 | 733805 | 69.25 | 62.91 | 66.11 |
| 15. | ராசிபுரம் | 576457 | 584815 | 1161272 | 341892 | 297658 | 639550 | 59.31 | 50.90 | 55.07 |
| 24. | மதுரை | 728855 | 700626 | 1429481 | 403842 | 344975 | 748817 | 55.41 | 49.24 | 52.38 |
| 26. | கரூர் | 578586 | 591705 | 1170291 | 381942 | 353452 | 735394 | 66.01 | 59.73 | 62.84 |
| 27. | திருச்சி | 624380 | 621057 | 1245437 | 371982 | 330237 | 702219 | 59.58 | 53.17 | 56.38 |
| 28. | பெரம்பலூர் | 529592 | 534341 | 1063933 | 351978 | 342866 | 694844 | 66.46 | 64.17 | 65.31 |
| 29. | மைலாடுதுறை | 523424 | 506877 | 1030301 | 347749 | 306738 | 654487 | 66.44 | 60.52 | 63.52 |
| 30. | நாகப்பட்டினம் | 531726 | 522546 | 1054272 | 361891 | 332907 | 694798 | 68.06 | 63.71 | 65.90 |
| 31. | தஞ்சாவூர் | 523314 | 526068 | 1049382 | 342409 | 318418 | 660827 | 65.43 | 60.53 | 62.97 |
| 32. | புதுக்கோட்டை | 604741 | 613368 | 1218109 | 401570 | 377505 | 779075 | 66.40 | 61.55 | 63.96 |
| 33. | சிவகங்கை | 552985 | 563215 | 1116200 | 295188 | 325270 | 620458 | 53.38 | 57.75 | 55.59 |
| 34. | இராமநாதபுரம் | 550837 | 563562 | 1114399 | 321291 | 318219 | 639510 | 58.33 | 56.47 | 57.39 |
| 35. | சிவகாசி | 621661 | 635149 | 1256810 | 395329 | 394725 | 790054 | 63.59 | 62.15 | 62.81 |
| 36. | திருநெல்வேலி | 556133 | 564920 | 1121053 | 331583 | 280155 | 611738 | 59.62 | 49.59 | 54.57 |
| | **Less 3 PS s** | 2354 | 439 | 2793 | | | | | | |
| | **Net** | 553779 | 564481 | 1118260 | | | | | | |
| 37. | தென்காசி | 509994 | 533456 | 1043450 | 348145 | 327900 | 676045 | 68.26 | 61.47 | 64.79 |
| 38. | திருசெந்தூர் | 507271 | 532996 | 1040267 | 277820 | 265954 | 543774 | 54.77 | 49.90 | 52.27 |
| 39. | நாகர்கோவில் | 533762 | 522519 | 1056281 | 333030 | 287454 | 620484 | 62.39 | 55.01 | 58.74 |
| | மொத்தம் | 11302038 | 11364103 | 22666141 | 6739564 | 6237978 | 12977542 | 59.63 | 54.89 | 57.26 |
| | திருவட்டார் சட்டப்பேரவை இடைத்தேர்தல் | 81705 | 80461 | 162166 | 53032 | 49171 | 102203 | 64.91 | 61.11 | 63.02 |

**வாக்குப்பதிவு அமைதியாக நடைபெற தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை காவல்துறையினர் மேற்கொண்டனர். வாக்கு எண்ணிக்கை 6–10–1999 அன்று நடைபெறுகிறது.**

**20 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கு 11–9–1999 அன்று வாக்குப்பதிவு நடைபெற்றது.**

**இந்த 20 தொகுதிகளில் 208 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.**

## பதிவான வாக்குகள் விவரம்

| | | மொத்த வாக்காளர்கள் | | | பதிவான வாக்குகள் | | | பதிவான வாக்குகள் (%) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| எண் | தொகுதி | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
| 1. | சென்னை (வ) | 1080089 | 961077 | 2041166 | 502501 | 391978 | 894479 | 46.524 | 40.79 | 43.82 |
| 2. | சென்னை (மத்திய) | 661012 | 613877 | 1274889 | 336752 | 281282 | 618034 | 50.945 | 45.82 | 48.48 |
| 3. | சென்னை (தெ) | 1081143 | 992704 | 2073847 | 515394 | 422694 | 938088 | 47.671 | 42.58 | 45.23 |
| 4. | ஸ்ரீபெரும்புதூர்(தனி) | 674247 | 679358 | 1353605 | 397179 | 348287 | 745466 | 58.907 | 51.27 | 55.07 |
| 5. | செங்கல்பட்டு | 605120 | 594771 | 1199891 | 369019 | 328516 | 697535 | 60.983 | 55.23 | 58.13 |
| 6. | அரக்கோணம் | 553663 | 564953 | 1118616 | 383740 | 357799 | 741539 | 69.309 | 63.33 | 66.29 |
| 7. | வேலூர் | 569920 | 579249 | 1149169 | 367599 | 332515 | 700114 | 64.5 | 57.40 | 60.92 |
| 8. | திருப்பத்தூர் | 568652 | 574613 | 1143265 | 378739 | 364869 | 743608 | 66.603 | 63.50 | 65.04 |
| 9. | வந்தவாசி | 546166 | 556782 | 1102948 | 353589 | 325082 | 678671 | 64.74 | 58.39 | 61.53 |
| 13. | தருமபுரி | 620955 | 605335 | 1226290 | 388710 | 338805 | 727515 | 62.599 | 55.97 | 59.33 |
| 14. | கிருஷ்ணகிரி | 591198 | 570303 | 1161501 | 375741 | 320794 | 696535 | 63.556 | 56.25 | 59.97 |
| 16. | சேலம் | 635680 | 621226 | 1256906 | 396802 | 343448 | 740250 | 62.422 | 55.29 | 58.89 |
| 17. | திருச்செங்கோடு | 770030 | 756901 | 1526931 | 464185 | 380290 | 844475 | 60.281 | 50.24 | 55.31 |
| 18. | நீலகிரி | 682481 | 664965 | 1347446 | 401806 | 339505 | 741311 | 58.874 | 51.06 | 55.02 |
| 19. | கோபிச்செட்டிப்பாளையம் | 539008 | 527268 | 1066276 | 349302 | 293033 | 642335 | 64.805 | 55.58 | 60.24 |
| 20. | கோயம்புத்தூர் | 816783 | 754511 | 1571294 | 484514 | 389778 | 874292 | 59.32 | 51.66 | 55.64 |
| 21. | பொள்ளாச்சி (தனி) | 541898 | 532213 | 1074111 | 333900 | 278236 | 612136 | 61.62 | 52.28 | 56.99 |
| 22. | பழனி | 579903 | 579459 | 1159362 | 363103 | 318278 | 681381 | 62.61 | 54.93 | 58.77 |
| 23. | திண்டுக்கல் | 594154 | 599391 | 1193545 | 357895 | 325115 | 683010 | 60.24 | 54.24 | 57.23 |
| 25. | பெரியகுளம் | 560024 | 559955 | 1119979 | 342897 | 323595 | 666492 | 61.23 | 57.79 | 59.51 |
| மொத்தம் – 2வது கட்டம் | | 13272126 | 12888911 | 26161037 | 7863367 | 6803899 | 14667266 | 59.25 | 52.79 | 56.07 |
| | மொத்தம் | 24018031 | 23688094 | 47706125 | 14602931 | 13041877 | 27644808 | 60.8 | 55.06 | 57.95 |
| | நத்தம் | 90665 | 91903 | 182568 | 60965 | 57737 | 118702 | 67.24 | 62.82 | 65.02 |

**வாக்குப் பதிவு அமைதியாக நடைபெற தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை காவல்துறையினர் மேற்கொண்டனர். வாக்கு எண்ணிக்கை 6–10–1998 அன்று நடைபெறுகிறது.**

# நிலபதிவுகளை கணினி மயமாக்கும் திட்டம் - சுணக்கம் இல்லாமல் செயல்படுத்த வேண்டும்

– மாண்புமிகு
வருவாய்த்துறை அமைச்சர்
**திரு. நாஞ்சில் கி. மனோகரன்**

இன்று எழிலகத்தில் நடைபெறும் இந்த எழில்மிகு விழாவிலே பங்கேற்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். சேப்பாக் – கத்தில் கட்டப்பட்டுள்ள இந்த அரசு அலுவலக வளாகம் முதல்வர் கலைஞர் அவர்களால் சில ஆண்டுகளுக்கு முன்திறந்து வைக்கப்பட்டது. இந்த எழில்மிகு கட்டடம் எழிலகம் என்று பெயர் பெற்று மக்கள் மத்தியிலே பிரபலமாகப் பேசப்பட்டு வருகிறது.

இந்த வளாகத்தில், வருவாய்த்துறையைச் சேர்ந்த வருவாய் நிர்வாக ஆணையர், நில சீர்திருத்த ஆணையர், நில நிர்வாக ஆணையர் உள்ளிட்ட 18 துறை அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. குறிப்பாக முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் பலதரப்பட்ட பணிகளைக் கவனித்து வருகிறார். இயற்கைச் சீற்றம் ஏற்படும்போதெல்லாம் நிவாரணப் பணிகளைக் கவனிக்கும் ஆணையராகவும் அவர் செயல்பட்டு வருகிறார்.

வருவாய்த்துறையைச் சேர்ந்த 3 ஆணையர்கள் துறை அலுவலர்களுடனும், மாவட்ட ஆட்சியர்களுடனும், மாவட்ட வருவாய் அலுவலர்களுடனும் மற்றும் வருவாய்த்துறையைச் சேர்ந்த சங்க பிரதிநிதிகளுடனும் அடிக்கடி கூடி விவாதித்து பல்வேறு விஷயங்கள் குறித்து ஆய்வு செய்ய வேண்டிய நிலை உள்ளது. இருப்பினும் இத்தகைய கூட்டங்களை நடத்துவதற்கு போதுமான அரங்கு வசதி இல்லை என்பதனால் நமது முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அரசுக்கு ஒரு செயற்குறிப்பினை அனுப்பி ஒரு கூட்ட அரங்கினை அமைத்துத்தரக் கோரினார்.

## ரூ.12 இலட்சத்தில் மாநாட்டுக் கூடம்

1998–99–ஆம் ஆண்டில் பகுதி–II திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டப் பணிகளுக்கு அரசு அனுமதி அளித்தது. கோட்ட மற்றும் வட்ட அலுவலகங்கள், அலுவலர் குடியிருப்பு ஆகியவை கட்டுதல் போன்ற பல்வேறு செயற்குறிப்புகளை வருவாய் நிர்வாக ஆணையர் அரசுக்கு அனுப்பியதை ஏற்று அனுமதித்த வேளையில், எழிலகத்திற்கு ஒரு மாநாட்டுக் கூடம் கட்டுவதற்கும் 8 இலட்சம் ரூபாயை அனுமதித்து அரசு ஆணையிட்டது.

3.6.99–ல் வெளியிடப்பட்ட அந்த அரசாணை செயல் வடிவம் பெற்று, கட்டுமானப் பணிகள் முடிந்து, இன்று அதை நான் திறந்து வைப்பதில் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறேன். முதலில் 8 லட்ச ரூபாய் மட்டும் நிதி ஒதுக்கீடு செய்திருப்பினும், ஏறக்குறைய 12 இலட்சம் ரூபாய் செலவில் இம்மாநாட்டுக் கூடம் அமைந்துள்ளது. இந்த பணியைச் செவ்வனே முடித்துக் கொடுத்த பொதுப்பணித் துறை மற்றும் அனைவருக்கும் எனது பாராட்டுக்கள் உரித்தாகுக.



இந்த வளாகத்தில் உள்ள அனைத்துத் துறை அலுவலர்களும் தத்தம் துறைப் பணிகளை நிறைவு செய்யத் தேவையான கூட்டங்களை இங்கே நடத்தி, அரசுப் பணிகளை விரைவில் முடித்திட இந்த அரங்கம் உதவும் எனில், அது மேலும் மிகுந்த மகிழ்ச்சியை எனக்கு அளிக்கும். இந்த வாய்ப்பு வசதிகளை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளுமாறு உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

கூட்ட அரங்கம் திறப்பு விழா காணும் இதே நாளில் இதே அரங்கில் முதன்முதலில் கூட்டப் பெறும் மாவட்ட வருவாய் அலுவலர்களின் ஆய்வுக் கூட்டத்திலும் நான் பங்கு பெறுவது எனக்கு கிடைத்த மற்றும் ஒரு வாய்ப்பு. மாவட்ட வருவாய் அவலுவலர்களுடன் 2.2.99 அன்று ஏற்கனவே நான் கலந்து பேசி, அவர்தம் பணியை ஆய்வு செய்து இருக்கிறேன். அன்றைய கலந்துரையாடல் எனக்கு மிகுந்த மன நிறைவை அளித்த ஒரு கூட்டம் ஆகும்.

## நிலம் ஒப்படைப்பு தாமதம் கூடாது

நிலங்கள் தொடர்பான நேர்வுகளில் தணிக்கை செய்தல், அறிக்கை அனுப்புதல், அரசாணையை செயல்படுத்துதல், பட்டா மாறுதல் செய்தல், மற்றும் பொதுக் கணக்குக்குழு வினாக்களுக்கு பதில் அளித்தல் ஆகிய பணிகளில் காலதாமதம் இருப்பதை நான் சுட்டிக்காட்டினேன்.

இத்தகைய தாமதங்களை தவிர்க்க வேண்டும் என்றும் நான் உங்களைக் கேட்டுக் கொண்டேன். இருப்பினும், கடந்த 6 மாத காலத்தில் சில இனங்களில் குறிப்பாக, பொதுக்கணக்குக் குழு வினாக்களுக்கு அறிக்கை அனுப்புவது மற்றும் நிலம் தொடர்பான நேர்வுகளில் போதுமான முன்னேற்றம் இன்னமும் ஏற்படவில்லை என்று நான் அறிகிறேன். இன்னும்சொல்லப் போனால், சில நிறுவனங்களுக்கு அரசு நிலம் வழங்கி ஆணை வெளியிடப்பட்ட பிறகும் கூட அந்த நிறுவனங்களுக்கு இன்னமும் நிலம் ஒப்படைக்கப் படவில்லை என்பது வருத்தத்திற்குரியது..

குத்தகை வாயிலாக நிலங்கள் அளிக்கப்பட்டு, ஆனால் ஒப்படைக்கப்படாவிடில், நிறுவனங்களிடமிருந்து அரசுக்குக் கிடைக்கக் கூடிய குத்தகைத் தொகை, தல வரி, தல மேல் வரி ஆகிய வரி இழப்பு ஏற்பட இந்த தாமதங்கள் காரணமாக அமையும். எந்த ஒரு மாவட்ட வருவாய் அலுவலரையும் குறிப்பிட்டுக் குறை கூற நான் விரும்பவில்லை. இன்றைய கூட்டத்திற்குப் பிறகாவது, நிறுவனங்களுக்கு நிலம் ஒப்புவிப்பது நிலுவையாக இருந்தால் அவற்றை உடனடியாக செய்ய வேண்டிய கடமை அவர்களுக்கு உண்டு.

## நில ஆக்கிரமிப்பு அகற்றும்பணி தீவிரம்

மாவட்ட பெருந்திட்ட வளாகங்களைப் பொறுத்த வரையில் நிலங்கள் பொதுப்பணித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டு, கட்டிடப்பணி நடந்து வருவதாகத் தெரிகிறது. இந்தக் கட்டிடப்பணிகளை மாவட்ட வருவாய் அலுவலர்கள் அக்கறையுடன் மேற்பார்வையிட்டு பணிகள் விரைவில் முடிவுற்று, மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் புதிய கட்டிடங்களில் இயங்குவதற்கு நீங்கள் துணை செய்ய வேண்டும்.

சென்ற ஆய்வின் போது அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றும் பணி தீவிரமாக்கப்பட வேண்டும் என்றும், சுமார் 10 இலட்சம் ஆக்கிரமிப்புகளில் கால் பகுதிதான் அகற்றப்பட்டுள்ளது என்றும், மாவட்ட வருவாய் அலுவலர்கள் இந்த பணியில் தீவிர கவனம் செலுத்திட, அரசு நிலங்களைப் பாதுகாப்பதில் முனைப்புடன் செயல்பட வேண்டும் என்றும் நில நிர்வாக ஆணையர் அறிவுரை வழங்கினார். அந்த அறிவுரையின் செயல்பாடு எந்த அளவு முன்னேற்றம் கண்டுள்ளது என்பதையும், ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட நிலங்கள் தற்போது தொடர்ந்து பாதுகாக்கப்பட்டு வருகிறதா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

## நில பதிவுருக்கள் கணினி மயம்

நில பதிவுருக்களைக் கணினி மயமாக்கும் திட்டம் கடந்த சுமார் 10 ஆண்டுகளாக துவக்க நிலையிலேயே தேக்க நிலையில் உள்ளது என்பது உங்களுக்கும் தெரியும். மாவட்ட வருவாய் அலுவலர்கள் இந்த பணியில் தீவிர கவனம் செலுத்தாவிடில் இந்தப் பணியில் முன்னேற்றம் காணமுடியாது. 50 வட்ட அலுவலகங்கள் கணினி மயமாக்கப்படும் என்றும் முதல்வர் அவர்கள் அறிவித்திருந்தார்கள்.

நமது வருவாய்த்துறை செயலாளர் சாரங்கியின் ஈடுபாடு காரணமாக திருவள்ளூர், தஞ்சாவூர் மாவட்டங்களிலும், இராமநாதபுரம் வட்டத்திலும் இப்பணியில் துவக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆகவே, கணினி வாயிலாக, பொதுமக்களுக்கு வருவாய்த்துறை ஆற்றும்பணி வேகமாக சென்றடையும் என்ற நோக்கத்தின் செயல்பாடு உங்களிடம் தான் உள்ளது. ஆகவே இதில் எந்த சுணக்கமும் இல்லாமல் நீங்கள் அக்கறை காட்ட வேண்டும்.


மாவட்ட ஆட்சியர்கள் வளர்ச்சிப் பணியிலும், சட்டம் ஒழுங்கு பராமரிப்பிலும் தங்களது நேரங்களை செலுத்த வேண்டியிருக்கும் என்ற காரணத்தால், வருவாய்த் துறைப்பணி அனைத்தும் உங்களிடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த பணிகளில் முழுமையான ஈடுபாட்டுடன் நீங்கள் பணியாற்றுவதோடு, உங்களது சார்நிலை அலுவலர்களையும் அதே ஈடுபாட்டுடன் பணியாற்றச் செய்வதும் உங்களது கடமையாகும்.

ஆகவே, இவற்றை கருத்தில் கொண்டு உரிய முறையில் பணியாற்றி, மாவட்ட நிர்வாகத்திற்கும், வருவாய்த்துறைக்கும், நற்பெயரையும், பெற்றுத்தாருங்கள்.

*— சென்னை சேப்பாக்கத்தில் முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் அலுவலகத்தின் மாநாட்டுக் கூடத்தை திறந்துவைத்து மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு.நாஞ்சில் கி.மனோகரன் ஆற்றிய உரை.* ★

# வேளாண்மைப் பொறியியல் துறை மூலம்
# விவசாயிகளுக்கு வழங்கப்படும் உதவிகள்

| திட்டத்தின் பெயர் | விவரம் | வரையறைகள் | அணுகவேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| **சொட்டு நீர்ப் பாசனம்** | பழமரங்கள், பூக்கள், காய்கறி மற்றும் தென்னைக்கு சொட்டு நீர்பாசனம் அமைத்திட மானியம் வழங்கப்படுகிறது. இவ்வாண்டு இதற்கென ரூ.11.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. | சிறுவிவசாயிகள், மிகச் சிறிய விவசாயிகள், பெண் விவசாயிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தை சேர்ந்த விவசாயிகளுக்கு – 90%, இதர விவசாயிகளுக்கு – 70%, அதிகபட்சமாக எக்டருக்கு ரூ.25,000. | மாவட்ட செயற் பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை (அல்லது) அந்தந்த வருவாய் கோட்டத்திலுள்ள உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை. |
| **பாசனப் பகுதியில் நீர் மேலாண்மை** | காவிரி, அமராவதி, பரம்பிக்குளம் – ஆளியாறு, கோதையாறு, சித்தார் பாசனப் பகுதியில் நீர் மேலாண்மைக்கு ரூ.43.75 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. | அனைத்து விவசாயிகள். | உதவி செயற் பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, பாசன பகுதி மேம்பாட்டுத் திட்டம். |
| | இத்திட்டத்தின் கீழ் பண்ணையளவில் நீர் பிரிவுத் தொட்டிகள், காரை வாய்க்கால் அமைத்து கொடுக்கப் படுகிறது. | அனைத்து விவசாயிகள். | |
| **நீலகிரி மாவட்டத்தில் மலைப் பகுதியில் மண்வளப் பாதுகாப்பு** | நீலகிரி மாவட்டத்தில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் மண்வளப் பாதுகாப்புக்கு ரூ.4 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.<br>மண்வளப் பாதுகாப்புப் பணிகள் – 50% மானியம்; 50% கடன்.<br>நிலச்சரிவு தடுப்புப் பணிகள் – 100% மானியம். | அனைத்து விவசாயிகள். | செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை, உதகமண்டலம். |
| **மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டில் மண்வளப் பாதுகாப்பு** | கோவை, ஈரோடு, திண்டுக்கல், தேனி, விருதுநகர், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டில் மண்வளப் பாதுகாப்புக்கு ரூ.4 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.<br>மண்வளப் பாதுகாப்புப் பணிகள் – 50% மானியம்; 50% கடன். | அனைத்து விவசாயிகள். | சம்பந்தப்பட்ட மாவட்ட உதவி செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை. |





| | | | |
|---|---|---|---|
| **மண்வளப் பாதுகாப்புத் திட்டம்** | மண்வளப் பாதுகாப்புத் திட்டத்திற்கு ரூ.16.16 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.<br>மண்வளப் பாதுகாப்புப் பணிகள் – சமவெளிப்பகுதிக்கு – 25% மானியம்; 75% கடன்.<br>மலைப்பகுதிக்கு – 40% மானியம்; 60% கடன். | அனைத்து விவசாயிகள் | **வருவாய் கோட்டத்திலுள்ள உதவி செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை.** |
| **பழங்குடியினர் பகுதிகளின் மண்வளப் பாதுகாப்பு** | பழங்குடியினர் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பிற்கு ரூ.92 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.<br>மண்வளப் பாதுகாப்புப் பணிகள் – 100% மானியம். | பழங்குடி இனத்தைச் சேர்ந்த விவசாயிகள். | **வருவாய் கோட்டத்திலுள்ள உதவி செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை.** |
| **சலுகை வாடகையில் விவசாயக் கருவிகள்** | நிலம் சமன்படுத்த, இயந்திர சாகுபடிப் பணிகளுக்கு ஊற்றுநீர் கண்டுபிடிக்க குழாய்க்கிணறு அமைக்க, சலுகை வாடகையில் விவசாயிகளுக்குக் கருவிகள் வழங்கப்படுகின்றன.<br>வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் விவசாயிகளுக்குச் சலுகை வாடகையில் தரப்படும் விவசாயக் கருவிகள்:<br>புல்டோசர்கள் – 138; டிராக்டர்கள் – 126; கதிரடிக்கும் கருவி – 2; சுழல்விசைத் துளைக் கருவி – 49; பெர்குசன் டிரில் – 28; வாகன இன்வெல் துளைக் கருவி – 37; கைத்துளைக்கருவி – 250; பாறை வெடிக்கருவி – 72; நீள்துளைக் கருவி – 40; காற்றழுத்தக் கருவி – 9; ரெஸிஸ்டிவிடி மீட்டர் – 22. | அனைத்து விவசாயிகள் | **வருவாய் கோட்டத்திலுள்ள உதவி செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை.** |

# இன்டர்நெட்டின் வரலாறு

**- வே. தமையந்திரன்**

இன்டர்நெட்டின் தோற்றத்திற்கு மனிதர்களின் விண்வெளி பயண முயற்சி ஒரு வகையில் உதவியுள்ளது என்று கூறலாம்.

ராக்கெட் உருவாக்கப்பட்டு விண்வெளிப் பயணம் தொடங்கப்பட்ட ஆரம்ப காலத்தில் இந்த முயற்சியில் அமெரிக்காவுக்கும், சோவியத் யூனியனுக்கும் இடையில் கடுமையான போட்டி இருந்தது.

ஆனால், 1957இல் சோவியத் யூனியன் ஸ்புட்னிக் செயற்கைக் கோளை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தி அமெரிக்காவை தோற்கடித்தது. அமெரிக்கா இந்த தோல்வியைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ளவில்லை. எதிர்காலத்தில் இதுபோன்ற தோல்விகளைத் தவிர்க்க அந்த நாடு விரும்பியது.

அதன் விளைவாக அமெரிக்க அரசு அட்வான்ஸ்டு ரிஸர்ச் புராஜெக்ட்ஸ் ஏஜென்சி (Advanced Projects Agency) சுருக்கமாக Apra) என்னும் ஆராய்ச்சி நிறுவனத்தை ஏற்படுத்தியது. அந்த ஆராய்ச்சி நிறுவனத்தினுடைய கம்ப்யூட்டர் துறையின் தலைவராக ஜே.சி.ஆர். லிக்லைடர் (J.C.R. Licklider) நியமிக்கப்பட்டிருந்தார்.

அந்த ஆராய்ச்சி நிறுவனத்தினுடைய கம்ப்யூட்டர் துறை 1969இல் அர்பாநெட் (Arpanet) என்னும் பெயரில் பரிசோதனை முறையில் ஒரு கம்ப்யூட்டர் இணையத்தை (network) ஏற்படுத்தியது. அர்பாநெட் (Arpanet) என்பது அட்வான்ஸ்டு ரிஸர்ச் புராஜெக்ட்ஸ் ஏஜென்சி நெட்வொர்க் (Advanced Research Projects Agency Network) என்பதன் சுருக்கமாகும்.

அமெரிக்க ராணுவ ஆராய்ச்சி நிறுவனத்தினால் ஏற்படுத்தப்பட்ட இந்த கம்ப்யூட்டர் இணையத்திற்கு அமெரிக்க ராணுவ அமைச்சகம் நிதி உதவி வழங்கியது. எனவே ஆரம்ப காலத்தில் அர்பாநெட் அமெரிக்க அரசுக்குச் சொந்தமானதாகத்தான் இருந்தது.

இந்த கம்ப்யூட்டர் இணையம் முற்றிலும் பரிசோதனை அடிப்படையிலேயே ஏற்படுத்தப்பட்டது. எனவே, தொடக்க காலத்தில் ஆராய்ச்சிக்கு மட்டுமே இது பயன்படுத்தப்பட்டது. முக்கியமாக கம்ப்யூட்டர் இணைய தொழில்நுட்பங்களை (networking technologies) உருவாக்கவும், அவற்றை பரிசோதிக்கவுமே இந்த கம்ப்யூட்டர் இணையத்தைப் பயன்படுத்தினார்.

முதன்முதலில் இந்த கம்ப்யூட்டர் இணையத்தில் அமெரிக்காவின் வெவ்வேறு பகுதிகளில் உள்ள நான்கு பல்கலைக்கழகங்களில் நிறுவப்பட்ட நான்கு ஹோஸ்ட் கம்ப்யூட்டர்கள் மட்டும்தான் இணைக்கப்பட்டிருந்தன.


இதுபோல முதன்முதலில் 1969ஆம் ஆண்டு நான்கு கம்ப்யூட்டர்களுடன் தொடங்கப்பட்ட அமெரிக்க அரசுக்குச் சொந்தமான ஒரு கம்ப்யூட்டர் இணையம்தான் இன்று பல இலட்சம் கம்ப்யூட்டர்கள் இணைக்கப்பட்ட உலகின் மிகப் பெரிய கம்ப்யூட்டர் இணையமான இன்டர்நெட்டாக வளர்ந்துள்ளது.

1972ஆம் ஆண்டு வாக்கில் அர்பாநெட்டுடன் 37 ஹோஸ்ட் கம்ப்யூட்டர்கள் இணைக்கப்பட்டன. அதே ஆண்டில் அர்பா (Advanced Research Projects Agency)வின் பெயர் டர்பாவாக (Darpa=Defence Advanced Research Projects Agency) மாற்றப்பட்டது.

1973இல் அர்பாநெட் அமெரிக்க எல்லைகளைத் தாண்டி இங்கிலாந்துக்கும், நார்வேக்கும் முதல் சர்வதேச இணைப்புகளை வழங்கியது.

கம்ப்யூட்டர் இணைய தொழில்நுட்பங்களின் வளர்ச்சிக்கு அர்பாநெட் முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளது. கம்ப்யூட்டர் இணையத்தின் ஒரு பகுதி பழுதடைந்துவிட்டால் கூட அதன் மற்ற பகுதிகள் செயல்படும் வகையிலான ஒரு கம்ப்யூட்டர் இணையத்தை உருவாக்க அர்பாநெட் தீவிர ஆராய்ச்சிகளை நடத்தியது.

இந்த ஆராய்ச்சியின் விளைவாக கம்ப்யூட்டர் இணையத்தைப் பயன்படுத்துவதற்கான புதிய வரிசை



முறைகள் (Protocols) அல்லது விதிமுறைகள் உருவாக்கப்பட்டன. அவை டிரான்ஸ்மிசன் கண்ட்ரோல் புரோட்டோகால் (Transmission control protocol சுருக்கமாக TCP) இன்டர்நெட் புரோட்டோகால் (Internet Protocol சுருக்கமாக IP) என்று அழைக்கப்படுகின்றன.

இந்த வரிசை முறைகள் கம்ப்யூட்டர் இணையம் முழுவதற்கும் தகவல்கள் எவ்வாறு அனுப்பப்படுகின்றன என்பதைக் கட்டுப்படுத்துகின்றன. கம்ப்யூட்டர் இணையம் முழுவதும் டாஸ் (DOS) யூனிக்ஸ் (Unix) போன்ற பல்வேறு வகையான கம்ப்யூட்டர் செயல் திட்டங்களின் உதவியுடன் தகவல்களை பகிர்ந்து கொள்ளவும் இந்த புரோட்டோகால்கள் உதவுகின்றன.

அர்பாநெட் ஒரு முக்கிய கம்ப்யூட்டர் இணையமாக செயல்பட்டு சிறிய வட்டார இணையங்கள் அதனுடன் இணைந்து கொள்ள அனுமதித்தது. அதுபோன்ற சிறிய கம்ப்யூட்டர் இணையங்கள் முக்கிய இணையத்துடன் இணைக்கப்பட்டதும் அவை அனைத்தும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டவையாக ஆகிவிடுகின்றன.

அர்பாநெட்டுடன் இணையும் கம்ப்யூட்டர்களால் பயன்படுத்தப்படுவதற்கான தரமான புரோட்டோகால்கள் (விதிமுறைகள்) டிசிபி (TCP)யும், ஐ.பி. (IP)யும்தான் என்று 1983இல் டர்பா (Darpa) முடிவு செய்தது. அதாவது அர்பாநெட்டுடன் இணைய விரும்பும் எந்த சிறிய கம்ப்யூட்டர் இணையங்களும் (எடுத்துக்காட்டாக ஒரு பல்கலைக்கழக கம்ப்யூட்டர் இணையம்) டிசிபி மற்றும் ஐ.பி. புரோட்டோகால்களைத்தான் பயன்படுத்த வேண்டும்.

டிசிபி மற்றும் ஐபி புரோட்டோகால்களைப் பயன்படுத்திக் கொள்ள கட்டணம் எதுவும் வசூலிக்கப்படுவதில்லை. எனவே இன்று கம்ப்யூட்டர் இணையங்கள் டிசிபி மற்றும் ஐபி புரோட்டோகால்களைப் பயன்படுத்துவது அதிகரித்து வருகிறது.

இதுபோல கம்ப்யூட்டர் இணையங்களின் மத்தியில் டிசிபி மற்றும் ஐபி புரோட்டோகால்களின் உபயோகம் பரவியதால்தான் இன்று நாம் அறிந்துள்ள அதாவது ஒன்று டிசிபி மற்றும் ஐபி புரோட்டோ கால்களைப் பயன்படுத்தும் வேறு கம்ப்யூட்டர் இணையங்களுடன் இணைந்து செயல்படக்கூடிய கம்ப்யூட்டர் இணையங்களின் கம்ப்யூட்டர் இணையமான – இன்டர்நெட் உருவாவது சாத்தியமானது.

அர்பாநெட் இதுபோல மெதுவாக வளரத் தொடங்கியது. முதன்முதலில் நான்கு கம்ப்யூட்டர்களுடன் தொடங்கப்பட்ட அந்த கம்ப்யூட்டர் இணையத்தில் 1984இல் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கம்ப்யூட்டர்கள் இணைந்தன. 1987இல் அது 10 ஆயிரம் கம்ப்யூட்டர்களாக வளர்ந்தது. 1989 வாக்கில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட கம்ப்யூட்டர்கள் அர்பாநெட்டில் இணைந்தன.

1990இல் அர்பாநெட் என்னும் பெயர் மறைந்தது. இன்டர்நெட் என்னும் புதிய பெயரில் அது அழைக்கப்படுவது தொடங்கியது. அர்பாநெட் என்னும் பெயர் மறைந்த பின்னர் இன்டர்நெட்டின் வளர்ச்சி வேகமாக அதிகரிக்க தொடங்கியது. 1992இல் 10 இலட்சம் கம்ப்யூட்டர்களாக அது வளர்ச்சி அடைந்தது. இப்போது இன்டர்நெட்டில் இணைக்கப்பட்டுள்ள கம்ப்யூட்டர்களின் எண்ணிக்கை 50 இலட்சத்திற்கும் அதிகமாகிவிட்டது.

அதேபோல, ஆரம்பத்தில் அரசு நிறுவனங்களும், பல்கலைக்கழகங்களும், ஆராய்ச்சி நிறுவனங்களும் மட்டுமே பயன்படுத்தி வந்த இன்டர்நெட்டை இப்போது பொதுமக்களும் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். இன்டர்நெட் தகவல் தொடர்பிற்கான மிக விரைவான அதே சமயம் மிகவும் மலிவான சாதனம் என்பதால் பொதுமக்கள் அதைப் பயன்படுத்துவதும் இன்று வேகமாக அதிகரித்து வருகிறது.

உலகம் முழுவதிலும் இன்று சுமார் 5 கோடி பேர் இன்டர்நெட்டை பயன்படுத்துகின்றனர். 2000ஆம் ஆண்டு வாக்கில் இந்த எண்ணிக்கை 20 கோடியாக அதிகரித்து விடும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இன்டர்நெட்டின் வளர்ச்சியில் பல சந்தர்ப்பங்களில் பலர் பங்குகொண்டிருக்கின்றனர். ஆராய்ச்சி நடத்துவதற்காக அர்பாநெட்டை பயன்படத்திய ஆராய்ச்சியாளர்கள் அனைத்து துறைகளிலும் பல்கலைக்கழக ஆராய்ச்சிகளுக்கு அதிவேக கம்ப்யூட்டர் இணையங்கள் மிகவும் அவசியம் என்பதை உணரத் தொடங்கினர்.

இன்டர்நெட்டின் பயன்பாட்டை செம்மைப்படுத்திய பலகருவிகளும் சேவைகளும் 1970–க்குப் பின்னர் உருவாக்கப்பட்டுள்ளன. அந்த வரலாறு பற்றி மேலும் காண்போம்.

நேஷனல் சென்டர் பார் சூப்பர் கம்ப்யூட்டிங் அப்ளிகேஷன்ஸ் (National Cener for supercomputing Applications சுருக்கமாக NCSA) நிறுவனம் தொலைவிலிருந்து இணைப்பதற்கான (Remote login) டெல்நெட் (Telnet) புரோட்டோகாலை 1972இல் உருவாக்கியது. அதனால் தொலைவிலுள்ள கம்ப்யூட்டர்களுடன் இணைப்பை ஏற்படுத்திக் கொள்வது எளிதானது.

இணைக்கப்பட்ட கம்ப்யூட்டர்களுக்கிடையில் பைல்களை மாற்றுவதைத் தரப்படுவதற்கான பைல் டிரான்ஸ்பர் புரோட்டோகால் (File Transfer Protocol சுருக்கமாக FTP) 1973இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

1983இல் இன்டர்நெட்டில் பல முக்கியமான வளர்ச்சிகள் ஏற்பட்டன. அர்பாநெட்டில் டிசிபி மற்றும் ஐபி புரோட்டோகால்களை (விதிமுறைகளை) மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று இந்த ஆண்டில்தான் முடிவு செய்யப்பட்டது. மற்ற கம்ப்யூட்டர் இணையங்களுக்கும் (Networks) அதுவே தரமாக நிர்ணயிக்கப்பட்டது. டிசிபி அல்லது ஐபி

புரோட்டோகால்களை பயன்படுத்தும் அல்லது அந்த புரோட்டோகால்களைப் பயன்படுத்தும் இணையங்களுடன் இணைந்து செயல்படக் கூடிய கம்ப்யூட்டர் இணையங்களின் இணையம் என்பதைக் குறிப்பிட பயன்படுத்துவதற்கான இன்டர்நெட் என்னும் சொல் உருவாக்கப்பட்டது.

அர்பாநெட் இரண்டு இணையங்களாக பிரிக்கப்பட்டது. ராணுவம் அல்லாத தகவல்களுக்கான இணையம் அர்பாநெட் என்றும் ராணுவ தகவல்களுக்கான இணையம் மில்நெட் (Milnet) என்றும் அழைக்கப்பட்டன.

**1982**–லும் **1983**–லும் டெஸ்க் டாப் கம்ப்யூட்டர்கள் (Desk Top Computers) விற்பனைக்கு வரத்தொடங்கின. அந்த கம்ப்யூட்டர்கள் பலவற்றில் இணைய (networking) சாப்ட்வேர் அடங்கிய பெர்க்கிளியூனிக்ஸ் (Berkeley Unix) என்று அழைக்கப்படும் செயல்திட்டம் பொருத்தப்பட்டிருந்தது. டெல்நெட்டை (Telnet) பயன்படுத்தி இன்டர்நெட்டுடன் மிக எளிதாக இணைப்பு பெற இது உதவியது.

எண்பதுகளில் பெர்சனல் கம்ப்யூட்டர்களில் ஏற்பட்ட வளர்ச்சியினால் பொதுமக்கள் கூட சொந்தமாக கம்ப்யூட்டர் வாங்குவது எளிதானது. இதனால் பொதுமக்கள் கம்ப்யூட்டர் இணையங்களைப் பயன்படுத்திக் கொள்வது அதிகரித்தது.

**1986**இல் அமெரிக்காவின் நேஷனல் சயன்ஸ் பவுண்டேஷன் (National Science Foundation சுருக்கமாக NSF) அந்த நாட்டில் உள்ள ஆறு சூப்பர் கம்ப்யூட்டிங் மையங்களை இணைத்தது. இந்த கம்ப்யூட்டர் இணையம் என்.எஸ்.எப் நெட் (NSF Net) என்று அழைக்கப்பட்டது.

இன்டர்நெட்டை பயன்படுத்திக் கொள்வதை விரிவுபடுத்துவதற்காக பிராந்திய கம்ப்யூட்டர் இணையங்களின் வளர்ச்சியை என்.எஸ்.எப் ஆதரித்தது. அந்த பிராந்திய கம்ப்யூட்டர் இணையங்கள் என்.எஸ்.எப். நெட்டுடன் இணைக்கப்பட்டன. அதோடு, பல்கலைக்கழகங்கள் போன்ற நிறுவனங்கள் பிராந்திய கம்ப்யூட்டர் இணையங்களுடன் இணைவதையும் என்.எஸ்.எப். ஊக்குவித்தது.

என்.எஸ்.எப். நெட்டை இயக்கவும் அதன் எதிர்கால வளர்ச்சியை நிர்வகிக்கவும் மெரிட் நெட்ஒர்க் (Merit Network) என்னும் நிறுவனத்துக்கு **1987**இல் என்.எஸ்.எப். நிதி உதவி வழங்கியது. மெரிட் நெட்ஒர்க் நிறுவனம் இன்டர்நேஷனல் பிசினஸ் மெசின்ஸ் (International Business Machines சுருக்கமாக IBM) நிறுவனத்துடனும், எம்சிஐ டெலிகம்யூனிகேஷன்ஸ் (MCI Tele Communications Corporation) நிறுவனத்துடனும் கூட்டுச் சேர்ந்து வேகமான இணைய தொழில்நுட்பங்களை (Networking Technologies) உருவாக்க ஆராய்ச்சி மேற்கொண்டது.

**1990**இல் அர்பாநெட் என்னும் பெயர் அகற்றப்பட்டது. இன்டர்நெட் என்னும் பெயர் வேகமாக பிரபலமடையத் தொடங்கியது.

அமெரிக்காவிலுள்ள மின்ன சோட்டா பல்கலைக்கழகம் **1991**–ல் கோபர் (முடிாநசு) என்னும் இன்டர்நெட் கருவியை உருவாக்கியது. இந்த முறை இன்டர்நெட்டை பயன்படுத்துவதை மிகவும் எளிதானதாக்கியது.

சுவிட்சர்லாந்தில் உள்ள ஐரோப்பியன் லேபரட்டரி பார் பார்ட்டிகிளி பிசிக்ஸ் (European Laboratory for Particle Physics சுருக்கமாக CERN) என்னும் ஆய்வுக்கூடம் டிம் பெர்னர்ஸ் லீ (Tim Berners-Lee) என்பவரால் உருவாக்கப்பட்ட வர்ல்டு ஒயிடு வெப்பை (World Wide Web) சுருக்கமாக WWW) **1993**இல் வெளியிட்டது. வர்ல்டு ஒயிடு வெப் ஹைப்பர் டெக்ஸ்ட் டிரான்ஸ்பர் புரோட்டோகாலையும் (Hyper text trnasfer protocol சுருக்கமாக HTTP) ஹைப்பர் டெக்ஸ்ட் தொடர்பு இணைப்புகளையும் கசூநுநிசூ பயன்படுத்துகிறது. இதனால் இன்டர்நெட்டில் தகவல்களை ஒழுங்குபடுத்தி வழங்கக் கூடிய மற்றும் பெறக்கூடிய முறையிலேயே பெரிய மாற்றம் ஏற்பட்டது.

வினாடிக்கு **4** கோடியே **50** இலட்சம் பிட் (bits) தகவல்கள் அல்லது வினாடிக்கு சுமார் **1400** பக்க தகவல்களை அனுப்பக் கூடிய அளவிற்கு **1993**இல் என்.எஸ்.எப் நெட் முக்கிய இணையத்தின் வேகம் அதிகரிக்கப்பட்டது. இது டி**3** (ப3) எனப்படும்.

**1993** மற்றும் **1994**இல் மொசைக் (Mosaic), நெட்ஸ் கேப் நேவிகேட்டர் (Netscape Navigator) போன்ற வெப் பிரவுசர்கள் (Web browsers) அறிமுகப்படுத்தப்பட்டு அவை இன்டர்நெட்டை பயன்படுத்துபவர்கள் மத்தியில் வேகமாக பிரபலமடைந்தன. இந்த பிரவுசர்களின் உதவியுடன் எழுத்து தகவல்களை மட்டுமல்லாமல் படங்களையும் பெற முடியும். இதனால் பொதுமக்களின் மத்தியில் இன்டர்நெட்டின் கவர்ச்சி அதிகரித்தது.

இன்டர்நெட்டுக்கு அமெரிக்க அரசின் நிதி உதவி முற்றிலுமாக நிறுத்தப்பட்டு விட்டதால் எந்த ஒரு தனிப்பட்ட அரசுக்கும் அல்லது நிறுவனத்துக்கும் அல்லது மனிதருக்கும் சொந்தமில்லாத ஒரு வகை சர்வதேச வாழ்க்கை முறையாக இன்டர்நெட் இன்று பரிணமித்துள்ளது.

இன்டர்நெட் என்பது குறுகிய கட்டுப்பாடுகளைக் கொண்ட ஒரு நிறுவனம் அல்ல, விசாலமான பார்வையைக் கொண்ட ஒரு சர்வதேச வாழ்க்கை முறை என்பதை இன்டர்நெட் பற்றி அறிந்தவர்கள் நன்கு உணர்ந்திருப்பர்.

உலகம் முழுவதிலுமுள்ள மனிதர்களையும் தகவல்களையும் மிக எளிதாகவும், விரைந்தும் சிக்கனமான முறையிலும் தெரிந்துகொள்ள இன்டர் உதவுகிறது. உரிய முறையில் இதை கட்டுப்படுத்தினால் இந்த நவீன சர்வதேச வாழ்க்கை முறை ஒட்டு மொத்த சமுதாயத்திற்கும் பயன் தருவதாக இருக்கும்.

*– இன்டர்நெட் ஒரு நவீன பந்தம் நூலிலிருந்து...*
*வெளியீடு : பூங்கொடி பதிப்பகம்,*
*14, சித்திரைக்குளம், மைலாப்பூர், சென்னை–4.*

# ஊனமுற்றோர்க்கு உதவிகள்

| திட்டத்தின் பெயர் | விவரம் | வரையறைகள் | அணுகவேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| **பார்வையற்றவர்களைத் திருமணம் செய்து கொள்ளும் பார்வையுடையவர்களுக்குச் சலுகைகள் வழங்குதல்** | பார்வையற்றோரைத் திருமணம் செய்து கொள்ளும் பார்வையுள்ள நபருக்கு ஊக்குவிப்புத் தொகையாக ரூ.10,000 அளிக்கப்படுகிறது. இதில் ரூ.7,000 தேசிய சேமிப்புப் பத்திரமாகவும், ரூ.3,000 திருமணச் செலவுக்காகவும் மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது. | தம்பதியர் இருவரும் 18 வயது பூர்த்தியடைந்தவராகவும் இருவரில் ஒருவர் பார்வையுள்ளவராகவும் இருத்தல் வேண்டும். அடையாள அட்டை (ம) திருமணத்திற்கான அத்தாட்சி வயது சான்றிதழ் இணைக்கப்படவேண்டும். வருமான வரம்பு இல்லை. | மாவட்ட மறுவாழ்வு அலுவலர் |
| **கை, கால் ஊனமுற்றோரை திருமணம் செய்து கொள்வோருக்கு நிதியுதவி அளித்தல்** | கை,கால் பாதிக்கப்பட்ட ஊனமுற்றோரைத் திருமணம் செய்து கொள்ளும் சாதாரண நபரை ஊக்குவிக்கும் பொருட்டு திருமண உதவித் தொகையாக ரூ.5,000 அளிக்கப்படுகிறது. இதில் ரூ.3,000 தேசிய சேமிப்புப் பத்திரமாகவும், ரூ.2,000 திருமணச் செலவிற்காகப் பணமாகவும் வழங்கப்படுகிறது. | நல்ல உடல்நிலையில் உள்ளவர்கள் கை, கால் ஊனமுற்ற நபர்களைத் திருமணம் செய்து கொள்ளுதல் வேண்டும். வயது 18க்கு மேல் இருக்க வேண்டும். அடையாள அட்டை மற்றும் திருமணத்திற்கான அத்தாட்சி வயது சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும். ஆண்டு வருமானமும் ரூ.24,000–க்குள் இருத்தல் வேண்டும். | மாவட்ட மறுவாழ்வு அலுவலர் |
| **பேசும் திறனற்ற காது கேளாதவர்களைத் திருமணம் செய்து கொள்ளும் சாதாரண நபருக்குத் திருமண ஊக்கத் தொகை அளித்தல்** | பேசும் திறன் மற்றும் செவித்திறன் அற்ற நபரை திருமணம் செய்துகொள்ளும் சாதாரண நபருக்குத் திருமண ஊக்கத்தொகையாக ரூ.5,000 வழங்கப்படுகிறது. இதில் ரூ.3,000 தேசிய சேமிப்புப் பத்திரமாகவும், ரூ.2,000 திருமணச் செலவின மாகவும் வழங்கப்படுகிறது. | தம்பதியரில் ஒருவர் பேசும் திறன் (ம) செவித்திறன் உடையவராக இருத்தல்வேண்டும். தம்பதியரின் வயதும் 18–க்கு மேல் இருத்தல் வேண்டும். அடையாள அட்டை மற்றும் திருமணத்திற்கான அத்தாட்சி வயது சான்றிதழ் இணைக்கப்படவேண்டும். வருமான வரம்பு இல்லை. பயனாளிகள் 35 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். | மாவட்ட மறுவாழ்வு அலுவலர் |

| | | | |
|---|---|---|---|
| **ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பு** | ஊனமுற்றோருக்கு அரசு பணிகளில் 3 சதவிகிதம் இடஒதுக்கீடு. அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்களில் எழும் காலி பணியிடங்களில் ஒரு சதவிகிதம் – பார்வையற்றவர்களுக்கும், ஒரு சதவிகிதம் – கை, கால் ஊனமுற்றோருக்கும், ஒரு சதவிகிதம் – செவித்திறன் குறையுடையோருக்கும் • வழங்கப்பட்டு வருகிறது.<br><br>கல்வி நிறுவனங்களில் எழும் ஆசிரியர் பணியிடங்களில் காலி இடங்களில் இரண்டு சதவிகித பணியிடங்கள் பார்வையற்றோருக்கென ஒதுக்கப்பட்டுள்ளது.<br><br>அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்களில் எழும் ஆசிரியர் பணியல்லாத பணியிடங்களில் மொத்த எண்ணிக்கையில் இரண்டு சதவிகித பணியிடங்களைச் செவித்திறன் குறையுடையோரைக்கொண்டு நிரப்ப வழிவகை செய்யப்பட்டுள்ளது. | தமிழ்நாடு அரசு தேர்வாணையம்/ஆசிரியர் தேர்வு வாரியம்/வேலைவாய்ப்பு அலுவலகங்கள் நிர்ணயம் செய்து உள்ள வயது வரம்பு மற்றும் கல்வித் தகுதி. | சம்பந்தப்பட்ட நிறுவன அலுவலர்கள் |
| **வேலை வாய்ப்பு இல்லாத பார்வையற் – றோருக்கான நிவாரண உதவித்தொகை** | வேலைவாய்ப்பற்ற பார்வையற்றோருக்குக் கீழ்க்கண்டவாறு நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது.<br><br>பத்தாம் வகுப்பு மற்றும் அதற்குக் கீழ், தகுதியுள்ளவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.200; புகுமுக வகுப்பு மற்றும் மேல்நிலை தேர்ச்சி பெற்றவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.250; பட்டதாரி மற்றும் அதற்கு மேல் தகுதியுள்ளவர்களுக்கு மாதம் ரூ.300 வீதம். | பார்வையற்ற நபர் வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்து ஓராண்டிற்கு மேல் இருத்தல் வேண்டும். வயது 40–க்குள் இருக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை அல்லது வேலைவாய்ப்பு கிடைக்கும் வரை இதில் எது முன்னரோ அதுவரை வழங்கப்படும். உதவித்தொகை 5 ஆண்டுகளுக்கு வழங்கப்படும். | சம்பந்தப்பட்ட மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் |

| | | | |
|---|---|---|---|
| **ஊனமுற்றோருக்கு சுயவேலை வாய்ப்பு** | கல்வித் தகுதி குறைவாக உள்ளவர்கள் மற்றும் சுயதொழில் புரிய விருப்பமுள்ள ஊனமுற்ற நபர்களுக்குத் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கடனளிக்கப் பரிந்துரை செய்யப்படுகிறது. வங்கிக்கடன் அளித்த பின்னர் அரசு மானியமாக கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு அல்லது ரூ.1,000, இதில் எது குறைவோ அது அரசு மானியமாக வழங்கப்படுகிறது. | 18 வயதிற்கு மேற்பட்ட ஊனமுற்ற நபர்கள் அவர்களின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000–த்திற்கு மிகைப்படாமல் இருத்தல் வேண்டும். | மாவட்ட மறுவாழ்வு அலுவலர் |
| **சிறப்புக் கல்வி** | பார்வையற்றோர், காது கேளாதோர், மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் கை, கால் ஊனமுற்றோருக்கு இலவச விடுதி வசதியுடன் கூடிய 23 அரசு பள்ளிகளில் சிறப்புக் கல்வி வழங்கப்பட்டு வருகின்றது. இவை தவிர, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 136 சிறப்புப் பள்ளிகளுக்கு அரசு மானியம் வழங்குகிறது. | 5 வயதிற்கு மேற்பட்ட ஊனமுற்ற குழந்தைகள். | மாவட்ட மறுவாழ்வு அலுவலர்/சிறப்புப் பள்ளி தலைமை ஆசிரியர் |
| | பேச்சுத் திறன் மற்றும் செவித்திறனற்ற குழந்தைகளுக்கு முன்பருவக் கல்வி 20 இடங்களில் வழங்கப்பட்டு வருகிறது. | 3 வயதிற்கு மேற்பட்ட பேச்சுத்திறன் மற்றும் செவித்திறனற்ற குழந்தைகள். | மாவட்ட மறுவாழ்வு அலுவலர் |
| **கல்வி உதவித் தொகை** | ஒன்றாம் வகுப்பு முதல் பனிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் வகுப்புக்கு ஏற்றவாறு, ஆண்டிற்கு ரூ.250 முதல் ரூ.1,100 வரையும் அதற்கு மேல் பட்டப்படிப்பு, தொழிற்கல்வி பட்டமேற்படிப்பு ஆகியவற்றிற்கு ரூ.1,500 முதல் 1,950 வரை ஆண்டு கல்வி உதவித்தொகையாக வழங்கப்படுகிறது. | அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் பயில வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் 1 முதல் 8ஆம் வகுப்பு வரை உதவித்தொகை பெறுபவர்களுக்கு ரூ.12,000–க்கும், 9ஆம் வகுப்புக்கு மேல் ரூ.24,000–க்கும் மிகாமல் இருத்தல் வேண்டும். **ஊனத்தின் தன்மை 75%–க்குள் இருக்க வேண்டும்.** | மாவட்ட மறுவாழ்வு அலுவலர் |

| | | | |
|---|---|---|---|
| **பராமரிப்பு உதவித் தொகை** | கடும் உடல் ஊனமுற்றோருக்கான பராமரிப்புத் தொகை மாதம் ரூ.150 வீதம் வழங்கப்பட்டு வருகிறது. | ஆண்டு வருமானம் ரூ.12,000–க்குள் இருக்க வேண்டும். | மாவட்ட மறுவாழ்வு அலுவலர் |
| **உதவி உபகர ணங்கள்** | 1. மூன்று சக்கரவண்டிகள்; 2. சக்கர நாற்காலிகள்; 3. காதொலிக் கருவி (ம) சூரிய ஒளியால் சக்தி பெறும் பாட்டரிகள்; 4. கருப்புக்கண்ணாடி (ம) மடக்குக் குச்சிகள்; 5. கால்பாதம் வளைந்தவர்களுக்கு பிரத்யேக காலணியும், மிதி வண்டியும்; 6. கால்தாங்கி மற்றும் ஊன்றுகோல்கள்; 7. பிரெய்லி கைக்கடிகாரங்கள்; 8. செயற்கை உறுப்புகள் | ஊனத்தின் தன்மை 40%க்கு மேல் இருக்க வேண்டும். ஆண்டு வருமானம் 1–6 வரை உள்ள உபகரணங்கள் பெறுவதற்கு ரூ.30,000–க்கு மிகாமலும், பிரெய்லி கைக்கடிகாரம் பெற ஆண்டு வருமானம் ரூ.24,000–க்கு மிகாமலும், செயற்கை உறுப்புகள் பெற ஆண்டு வருமானம் ரூ.12,000–க்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். | மாவட்ட மறுவாழ்வு அலுவலர் |
| **இலவசப் பேருந்து பயணச் சலுகை** | மாவட்டத்திற்குள் 100 கி.மீ. தூரம் அரசுப்பேருந்துகளில் செல்ல இலவசப்பயணச் சலுகைக் கீழ்க்கண்டவர்களுக்கு வழங்கப்படுகிறது. | | மாவட்ட மறுவாழ்வு அலுவலர் |
| | 1. பார்வையற்றோர் | நிபந்தனை ஏதும் இல்லை | |
| | 2. மனவளர்ச்சி குன்றியோர் மற்றும் உதவியாளர் 3. செவித்திறன் குறைவுடையோர் 4. உடல் ஊனமுற்றோர் | வசிக்கும் இடத்திலிருந்து கல்விபயிலும் இடம், மருத்துவமனை, பயிற்சிக்கூடம் (அ) பணியிடம் சென்றுவர; ஆண்டு வருமானம் ரூ.12,000–க்கு மிகாமலிருக்க வேண்டும். மாதத்திற்கு 46 தடவைகள் பயணம் மேற்கொள்ளலாம். | |
| **இலவச விரைவுப் பேருந்து பயணச் சலுகை** | பார்வையற்றோர் (ம) கால் ஊனமுற்றோர் ஆண்டிற்கு ஒரு முறை மாநிலத்திற்குள் இலவசமாகச் சென்றுவர அனுமதி. | பயனாளி பார்வையற்றவராக அல்லது கால் ஊனமுற்றவராக இருத்தல் வேண்டும். | மாவட்ட மறுவாழ்வு அலுவலர் |

*குறிப்பு* : இத்துறையின் மூலம் பயன்பெற அனைத்து திட்டங்களுக்கும் 40 சதவிகிதத்திற்கு மேல் ஊனத்தின் தன்மையை குறிக்கும் சான்றிதழுடன் கூடிய அடையாள அட்டை வைத்திருக்கவேண்டும்.

# இசை மருந்தாகுமா...?

**- குடந்தை டி.எஸ்.பாலு**

*இசை*
*ஒழுங்குபடுத்தப்பட்ட ஓசை*
*ஆத்மாவோடு பேசுகிற*
*அந்தரங்க பாஷை!*

*பாடகன்*
*சப்தத்தைப் படம் வரைகிறான்*
*அதன் தலைப்புதான் 'சங்கீதம்'*

*இசை –*
*காதுகளுக்குப் போர்த்திவிடுகின்ற*
*கௌரவப் பொன்னாடை...!*

–இப்படி இசையின் மகத்துவத்தை இனிதாகக் கூறியவர் கவிஞர் மு.மேத்தா.

அறுபத்து நான்கு கலைகள் என்று நம் முன்னோர்களால் தொகுத்துரைக்கப் பட்டவற்றுள் இசைக் கலையும் ஒன்று. உலகில் முதல் தோற்றமே ஒலி என்பது சமயங்கள் உணர்த்தும் உண்மை. "

"ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே!" என்று திருநாவுக்கரசரும் இறைவனைப் பாடுகின்றார்.

"மக்களுடைய மனத்தை வயப் படுத்துவது; அசைவிப்பது என்பது இசையே!" என்று கூறினார் இசைப் பேரறிஞர் எம்.எம்.தண்டபாணி தேசிகர். இதயத்தைக் கவர்ந்து விருந்தூட்டும் இன்ப ஊற்றாக மட்டும் இருப்பதா இசை... இல்லை! அது நோய்களுக்கு மருந்தூட்டும் நல்ல செவிலியாகவும் இருக்கின்றது என்பதே உண்மை!

## உடம்பிற்குள்ளே சுருதியும் லயமும்

நிலம், நீர், தீ, காற்று, வான் என்னும் பஞ்ச பூதங்களின் துணையில்லாமல் மனிதன் வாழவே இயலாது. குறிப்பாகக் காற்றின் துணை இல்லாமற் போனால், அவன் உயிரற்றதாக ஆகிவிடுவான்.

காற்றை உள்ளிழுத்தும் வெளி விட்டும் இடைவிடாது நம் மூக்கு சுவாசித்துக் கொண்டிருக்கிறது. ஒரு நிமிடத்திற்குச் சுமார் 16 முதல் 19 வரை இந்த சுவாசம் நடைபெறுவதாக அறிஞர் கூறுவர். அவ்வாறு சுவாசிக்கும் பொழுது ஏற்படும் காற்றின் அதிர்வை, இசையில் சுருதியுடன் இணைத்துக் காணலாம்.

மனிதரின் இதயத்துடிப்பு ஒரு நிமிடத்திற்கு 60 முதல் 72 வரை நடைபெறுகின்றது. லப்–டப் என்னும் இந்த ஓசையை, இசையில் தக–திமி என்ற லய ஒலியுடன் இணைத்துப் பார்க்கலாம். சுருதியும் லயமும் இல்லாமல் இசையில்லை. அதைப்போல் சுவாசமும் இதயத் துடிப்பும் இல்லாமல் நம் உடல் இல்லை.

## இரத்த ஓட்டமும் இராகங்களும்

மனித உடலில் இரத்த ஓட்டம் சரியாக நிகழவில்லையென்றால், பல்வேறு நோய்கள் தோன்றும். நம் உடலுக்குள் இரத்த ஓட்டம் சீராகவும், செம்மையாகவும் நிகழ்வதற்குப் பல்வேறு இராகங்களும் துணைபுரிவததாகக் கண்டுபிடித்துள்ளனர். அந்த இராகங்களின் ஒலி அலைகள் நம் உடலுக்குள் வீசும்போது, நம் மனக்கடல் அமைதிப் பள்ளத்தாக்கில் இனிதாகப் பாய்கிறது.

எந்தெந்த நேரத்தில், எந்தெந்த இராகங்களைச் செவி அரங்கில் அறிமுகப்படுத்த வேண்டும் என்று நம் முன்னோர்கள் முன்னரே அறுதியிட்டு உறுதியாகக் கூறியுள்ளனர். அவற்றின் விவரம் :

| | |
|---|---|
| விடியற்காலை | – பூபாளம், பௌளி, மலயமாருதம் |
| காலை | – அம்சத்வனி, கேதாரம், பிலகரி |
| முற்பகல் | – அசாவேரி, தன்யாசி |
| நண்பகல் | – ஸ்ரீராகம், மத்யமாவதி |
| பிற்பகல் | – தர்பார், பேகடை |
| மாலை | – வசந்தா, கல்யாணி, சண்முகப்பிரியா |
| எந்நேரமும் | – ஆரபி, பைரவி, கரகரப்பிரியா, சங்கராபரணம் |

– இவ்வாறு, பல்வேறு இராகங்களையும் கேட்கும்போது நம் புலன்களுடன் அமைதியும் ஆனந்தமும் கைகுலுக்குகின்றன என்பதில் ஐயமே இல்லை.

## நோய்களைத் தீர்க்கும் இசை

மகிழ்வையும், அமைதியையும் ஊட்டுவதற்கு மட்டுமா இசை...? அது பல்வேறு நோய்களையும் தீர்க்கவும்தான்...!

'அசோஷியேஷன் ஆஃப் புரொபஷனல் மியூசிக் தெரபி' என்ற அமெரிக்க அமைப்பு, நோயாளிகளின் மனநிலை, நோயின் தன்மை ஆகியவற்றுக்கு ஏற்ப இசை மருத்துவம் அளிக்கின்றது. குறிப்பிட்ட நேரம் நோயாளியைக் குணப்படுத்தக்கூடிய இசையை இங்குள்ளவர்கள் ஒலிபரப்புவார்கள். இந்த ஒலிப் பேழையைக் குறித்த நேரத்தில் தொடர்ந்து கேட்டு வந்தால், நோய் படிப்படியாகக் குணமாகிவிடும்! என்று சமீபத்தில் வெளிவந்த ஒரு பத்திரிகைக் குறிப்பும் கூறுகின்றது.

நம் இசையில் உள்ள இராகங்களின் தன்மையை ஆராய்ந்தவர்கள் என்னென்ன நோய்களை அவை தீர்க்கும் என்றும் கண்டுபிடித்துள்ளனர். சான்றுக்குச் சிலவற்றைக் காணுங்கள் :

| | |
|---|---|
| பைரவி | – காய்ச்சலைக் குணப்படுத்தும்; சுறுசுறுப்பை உண்டாக்கும். |
| அசாவேரி | – இரத்தக் கொதிப்பை அடக்கும். |
| சாரங்கா | – தலைவலியிலிருந்து சுகமளிக்கும். |
| தர்பாரி | – நெஞ்சுவலி, வாதநோய்களைக் குணமாக்கும். |
| ஜெயஜெயவந்தி | – கோபம், படபடப்பு ஆகியவற்றை நீக்கும். |

இப்படிப் பல்வேறு நோய்களையும் பாங்கோடு தீர்க்கும் உன்னதக் கலையாக இசைக் கலை திகழ்கிறது. அந்தக் கலையின் நிழலில், உடல் நலமும் பெறுவோம்; உள்ள வளமும் அடைவோம்! ●

# அவனுடன்

**பிரபஞ்சன்**

"தாழி... காலைலேந்து, காலை மரிச்சு மரிச்சுக்கிட்டு வந்து நிக்கிறான். என்னன்னும் சொல்லித் தொலைய மாட்டேங்கறான். ரொம்ப குசும்பனாயிட்டான் அவன்..." என்று தனக்குள் சொல்லிக் கொண்டார் முத்துப்பாண்டி.

வேர்வகிடு மாதிரி இருந்தது வரப்பு. வரப்பு வழி அவர் களத்துமேட்டில் ஏறி, தெற்குப் புளியமரத்துப் பக்கமாக வந்து நின்றார். அவர், மாலைக் கடன் கழிக்க, குளக்கரைக்கு வந்தவர் அவர். அப்படியே குளத்தில் ஒரு முங்கல். துவட்டிக்கொண்டு நீண்டு வளர்ந்திருந்த தலைமுடியை உலரவைத்துக் கொண்டு நின்றவர்க்கு, வயிறு கிள்ளியது. பேச்சி கடைக்குப் போய் ரெண்டு வடைகளைப் பிட்டுப் போட்டுக்கொண்டு, ஒரு டீயைக் குடித்தால் தேவலை என்று இருந்தது. துவைத்த வேஷ்டியை அகல விரித்து முதுகுப்புறமாகப் பிடித்துக்கொண்டு, கோவணத்துடன் நடந்து களத்து மேட்டுவழி தெருவுக்கு வந்தார். பகல் நேரத்திலும்கூட, இருண்டு கிடக்கும் புளியஞ்சாலை. தெற்கு மரத்தண்டை அவர் வந்தபோது, திடுமென உடம்பு மயிர்க்கூச்செறிந்தது. லேசான மயக்கம்கூட வந்துவிட்டது அவருக்கு. கால் பின்னிக்கொண்டு தடுமாறியது. ஆவேசம் வந்துவிட்டது என்பது அவருக்குப் புரிந்தது.

"த்தூ...சமயா சமயம் தெரியாமே, இப்படிக் காலைச் சுத்திக்கொண்டு நின்னா, எப்படிடா, பெரிய கருப்பா?" என்று மர உச்சியைப் பார்த்துக்கொண்டு சொன்னார், முத்துப்பாண்டி. அந்த இடத்தில்தான் அவன் குடி இருக்கிறான் என்பதை நிச்சயமாக அறிந்தவர் அவர். அந்த இடத்திலேயே நின்று, அரைஞாண் கயிற்றில் கட்டித் தொங்கிவிட்ட விபூதிப் பையிலிருந்து ஒரு சிட்டிகை திருநீறை எடுத்து நெற்றியில் 'சம்போ மகாதேவா' என்றபடி பூசிக்கொண்டார்.

"காத்து மாத்து அண்டாமே, காடன் மாடன் அணுகாமே காத்துரட்சியும், கருப்பசாமி...காட்டுக் கரம்பு வேல்சாமி..." என்று முணுமுணுத்துக் கொண்டார். ஆவேசம் நீங்கியது மாதிரி இருந்தது. தன் இடப்பக்கமாக பார்த்தார். அவன் நின்று கொண்டிருந்தான். ஒரு பனைமரம் உயரத்துக்கு. அப்புறம் குள்ளக் கத்திரிக்காய் உருவம் எடுத்துக் கொண்டான் அவன்.

"தாழி...வரியா...வா...பேச்சிப் பய கடைக்குத்தான் போறேன். வா பேசிட்டே போவோம்...நீயும்தான் என்ன செய்வே... என்றபடி மறுபடியும் தோளில் போட்ட வேஷ்டியைப் பிரித்து காயப் போட்ட படி நடந்தார். அவருடன் அவன் பேரக் குழந்தை, தாத்தாவோடு நடப்பது மாதிரி நடந்து வந்தான்.

மண், குளிர்ந்திருந்தது. இருட்டத் தொடங்கி இருந்தது. தெருவில் இருபுறமும் ஆங்காங்கே தென்னை ஓலை வேய்ந்த ஓடுகள். உரலில் கட்டின ஆடுகள், இவர்களைப் பார்த்ததும், ஆவேசமாகக் கத்தின. கயிறை அறுத்துக்கொண்டு போக முயல்வன மாதிரியாக அலைந்தன.

"பார்த்தியா...ஆட்டுக் கண்களுக்கு உன்னைத் தெரியுதுடா கருப்பா..." என்றார்.

"ம்ங..." என்று அவர் சொன்னதை ஒப்புக்கொண்டான். கருப்பு தொடர்ந்து அவனே சொன்னான்.

"பாம்புத் ஆட்டுக் கிடாவும், நாயும் அறியும்; மனுசங்கதான் என்னை அறியமாட்டாங்க..."

"அட சரி! தாழிகத்துக்கு ஊளக் கண்ணுதானே...!"

— என்று அவன் சொன்னதை ஒப்புக்கொண்டார் அவர்.

திடுமென, ஆள் அரவமற்ற அந்த இடத்தில் சுருட்டு வாசம் வீசியது. இடப்பக்கம் பார்த்தார். அவன், ஒரு அடி நீளத்துக்கு ஒரு சுருட்டை புகைத்துக்கொண்டு வருவது தெரிந்தது. கருப்பு சுருட்டுப் பிடிப்பான். கூடவே, சாராயமும் குடிப்பான். அது அவன் வழக்கம். கொடை நடக்கிறது என்றால், சாராயம், தெருவை நனைக்குமே. தண்ணீர்பட்ட பாடாய் ஓடும். அது ஒரு காலம். தாழிகள் இப்போதெல்லாம் எவன் கொடை கொடுக்கிறான்? பூசை வைக்கிறான்? எல்லாம் கலி காலம். சாமியாவது பூதமாவது என்று பேசத் தொடங்கிவிட்டார்கள். நகரத்துக்குப்



போய் படித்துவிட்டு வருகிற தாழிகள் ஒருத்தருக்கும் கருப்பு, சின்னக் கருப்பு, மாடன், தலையன், மம்பட்டியான் என்று கொஞ்சமாவது பயம் இருந்தால்தானே? மசுருப் படிப்பு படிக்கிறாங்கனுங்க..."

''அது சரிதான். எல்லாம் குறைஞ்சு போச்சு'' என்றான் கருப்பன். அவன் நினைப்பதைப் புரிந்து கொண்டவனாக.

''அதுல பாரு கருப்பா... ஊர்க்கவுண்டர் வீட்டுல பொண்ணுக்கு, கல்யாணம் குதிர்ந்துச்சுதே... அவர் எப்படியாக் கொத்த மனுஷர். அவர் கொடை போடுவார். ஒரு ஆடாவது அடிப்பார்னு இருந்தேன். என் வாயிலே மண்ணைத்தான் போட்டார்..."

"ஆமா...நான் கூட எதிர்ப்பார்த்துகிட்டுதான் இருந்தேன். ஆசாமி ஏமாத்தியுட்டார்".

''கவுண்டர் நல்ல மாதிரிதான். சாமி, பூதம்னா பயந்துக்குவார்... அவர் மகன் இருக்கானே, பிரசெண்டு, அந்தத் தாழிதான் வேண்டாம்னுட்டார். சிலை தெய்வம்லாம் வேணாமாம். என் முன்னாலேயே சொன்னான்னா பாரேன். எவ்ளோ கொழுப்பு இருக்குன்னு...தி...தாழி...கொஞ்சமும் உன் 'பவரை' காட்டினாத்தானே? ராத்திரியில, இந்தப் பக்கமாதானே வீடு திரும்பறான். பயலை, ஒரு அறை அறையேன். வழிக்கு வந்துருவானே... காலம் மாறிப்போச்சு, கருப்பா... உயிரோடதான் இருக்கோம்னு அடிக்கடி தாழிகளுக்கு நிருபிச்சுக் கிட்டே இருக்கணும். தூங்குற போதுகூட கால்விரலை ஆட்டிக்கிட்டே இருக்கனும்...இல்லேன்னா, செத்துட்டாம்னு கொண்டு போயி புதைச்சுப் போடுவாங்கோ...நீ, என்னடான்னா...அநியாயத்துக்கு அடங்கி போயிட்டியே கருப்பா...கிழவன் கைத்தடி மாதிரி. கொஞ்சம் விருட்டும் முரட்டும் வேணுமப்பா. நீயே ஒரு காலத்துல எப்படி இருந்தே... இந்த ஏரியாவிலே மனுஷன் நடக்க முடியுமா. நடக்க விட்டியா. உறுமை வேளையிலே நடந்தான்னு புள்ளத்தாச்சியை அறைஞ்சி, தாய் வேறயா, புள்ளை வேறயா ஆக்கினேயே...எத்தனைப் பயல்களை அறஞ்சி ஒழுங்கு பண்ணி இருக்கே... எனக்கே கூட, எத்தினி பயம் உன் மேலே. என்னயே அலமந்து பண்ணிட்டயே...அப்படியாக் கொண்ட உனக்கு என்ன வந்துச்சு? இப்படி வாலாட்டுற நாய் ஆயிட்டயே. இப்பம், ஒன்னும் ஆயிடலை. ரெண்டு வாட்டி, உன் விசுவரூபத்தை எடுத்து நில்லு. நாலு பேரை ரத்தம் கக்க வையி...கொஞ்சம் பேரை, வயிறு நோக வையி, அப்போதான் தாழிங்க மனசுல கொஞ்சமாவது பயம் வைக்குமப்பா...இல்லேன்னா சோத்துக்கு பறக்கிற நாய்கள்கூட, குண்டிக்குத் தண்ணி கொண்டு வரச் சொல்லுவாங்க...உன்னியே...என்னமோ போ..."

மிகக் கவனமாக அவர் சொல்றதைக் கேட்டுக்கொண்டு நடந்து வந்தான் கருப்பன். 'ஆமாம்', அவர் சொல்வதெல்லாம் உண்மை' என்கிறாற்போல, தலையை அசைத்துக் கொண்டான் அடிக்கடி.

டீக்கடை பெட்ரோமாக்ஸ் வெளிச்சம் தெரிந்தது.

"நான் டீக்குடிக்கப் போறேன். உனக்கும் ஒரு சிறட்டையில, வாங்கித் தரவா? கடைக்குப் பின்னாலே வர்றியா!"

"வேணாம்".

முத்துப்பாண்டி யோசித்துக் கொண்டு நின்றார். அப்புறம் சொன்னார்.

"ஒரு கில்லாடித்தனம் பண்ணுவோமா? நீ சரின்னா. நம்ம ரெண்டு பேருக்கும் நல்லது".

"சொல்லுமே"

''டீக்கடைக்காரன் இருக்கானே, அதான் பேச்சிப்பய. கொஞ்சம் 'சல்லு புல்லுன்னு' நாலு காசு பண்ணி இருக்கான். ஆள், நம் வளைப்புக்கு வளைவான். அவன் மக ஒருத்தி இருக்கா... விடை குட்டி. நீ அவளைப் பிடியேன். பள்ளிக்கூடம் விட்டு, அந்த வழியாத்தான் வருவா...பக்குன்னு பிடி. சேஷ்டை பண்ணு...ஆள் பேயோட்ட என்கிட்டதான் வரனும்..."

"ஆனா, இங்க நான் பிடிச்சுடுவேன். ஆனா, அந்த இடம் மாடசாமிக்கு அதிகாரம் உள்ள இடம். அங்கனே வந்து, நான் தின்கவோ, குடிக்கவோ முடியாதே..."

"அப்படியும் வேற இருக்கா..."

"ஆமாம்...சிவனார் எங்களுக்கு அதிகார எல்லை பிரிச்சுக் கொடுத்திருக்கார்..."

''எனக்கு வேண்டியது காசு. உனக்குக் கோழியும் சாராயமும். இப்படி பண்ணினா என்ன"

"சொல்லும்..."

''பூசை முடிச்சு கோழியையும் சாராயத்தையும் இடங் கொண்டு வந்துடறேன்"

"ரொம்ப சரி..."

"எப்படி நம்ம டுபாக்கூர் வேலை?"

"ஆங்...என்ன வேலை"

"டுபாக்கூர் வேலை. அப்படின்னா, பேத்து மாத்து வேலை. என்ன கருப்பா, தமிழே தெரியலயே உனக்கு? சரி பசிக்குது. நான் கிளம்பறேன்... நாளைக்கே பிடிச்சுக் கிடனும், பேச்சி மவளை, சரியா?"

"சரி நான் புறப்படறேன்"

"சரி புறப்படு. எங்கனே இப்போ..."

''மரத்துக்குத்தான்'' என்று களைப்புடன் சொன்னான் கருப்பன்.

"சரி நானும் மேலும் நாலு இடத்துல முயற்சி பண்ணறேன். நாலு கொடை, ரெண்டு கடா வெட்டு, ரெண்டு பேய் விரட்டுன்னு நடந்தா தானே, நமக்கும் நல்லது. ஊருக்கும் நல்லது..."

''டீக்கடை, கூத்து முடிந்த மைதானம் மாதிரி வெறுமையாகக் கிடந்தது. பேச்சி, தன் மனைவியுடன், சாவகாசமாகப் பேசிக் கொண்டிருந்தான். ஆம்பிளையைக் கண்டதும் பேச்சியின் மனைவி எழுந்து, சாக்குப் படுதாவை விலக்கி, அந்தப்புரத்துக்குப் போனாள். வந்தவர், கோமணத்துடன் வேறு இருந்தாரே?

"வாங்க, மந்திரக்காரரே, குளியல் ஆச்சாக்கும்..."

''ஸ்நானம் ஆச்சி...'' என்றார் முத்துப்பாண்டி. அப்படிச் சொல்வதில் ஒரு மரியாதை, மேலான பண்பு மிளிர்வதை அவர் உணர்ந்து இருந்தார். வேஷ்டியை உதறி, இடுப்பில் சுற்றிக்கொண்டார். மூதாட்டிகள் மார்பு மாதிரி நீண்டு தொங்கின விபூதிப்பையிலிருந்து, திருநீற்றை எடுத்துப் பூசிக்கொண்டார். அவர் நின்ற இடம், கல்லாவுக்கு எதிரே. அங்குதான் முருகன் தன் மனைவிமார்களுடன் காட்சியளித்துக் கொண்டிருந்தார்.

கண்ணை மூடிக் கொண்டு சில நிமிஷங்கள், மந்திரம் போல சில வார்த்தைகளை முணு முணுத்தார்.

பேச்சி அவரைப் பார்த்துக் கொண்டிருந்தவன், அவனையும் அறியாமல் எழுந்து நின்றான். இயல்பாகவே தன் கைகளைக் கட்டிக் கொண்டான்.

"முட்டு வினையெல்லாம் தீர்த்துவிடு முருகா...

ஏவல் பில்லி சூனியம் எடுத்துவிடு கருப்பா...

கண்ணேறு, கருப்பு, கழித்துவிடு பெரிய கருப்பா...

பெண்ணைவிட்டுப் போயிடுவாய் பிள்ளை மேல் வாராதே...

கண்ணைப்போல பாதுகாரு பச்சைமரக் கருப்பு தேவா" என்று சொல்லிக் கொண்டே வந்தவர், பல்லை 'நறநற'வெனக் கடித்துக் கொண்டு, 'ம்'...'சே'...'தாழி' என்று ஒலிக்குறிப்புகளை எழுப்பிக்கொண்டு நின்றார். பேச்சிக்குப் பயம் பிடித்துக் கொண்டது.

"மந்திரக்காரரே...மந்திரக்காரரே..." என்றார் இரண்டு முறை பேச்சி.

முத்துப்பாண்டி கண்விழித்தார். தன் சுற்றுச்சூழலை ஆச்சர்யமுடன் ஏதோ அயல் கிரகத்தில் இருந்து வந்தவர் போன்று ஒரு முறை பார்த்துக்கொண்டார். உடம்பை உதறிக் கொண்டார்.

"ம்! அப்படியா சங்கதி" என்று கூரையைப் பார்த்துச் சொன்னார். விசுப்பலகையில் அமர்ந்தார்.

"என்ன, மந்திரக்காரரே!" என்றார் பேச்சி...

"என்னவோ மாதிரி, உடம்பை முறிச்சுப் போடறாம்பா...அவன்"

"யாரு?"

"வேற யாரு...கருப்பன்தான். பெரியவன்"

"யார் யாரு சொன்னிய?"

"பெரிய கருப்பு. எத்தனை வாட்டி சொல்றது? அவன்தானே என்கிட்டே ஒண்டிக்கிட்டு என் வாக்குல வர்றது! நான் சொல்றது எல்லாம் பலிக்குன்னா, சங்கதி அதுவாம் இல்லை? பய, என் கைப்பிடியில அடக்கம்வா?"

"என்ன சாப்பிடறிய..." என்ற படி ஒரு காய்ந்த வாழை இலைத்துண்டை எடுத்து, அழுக்கு வேஷ்டியில் துடைத்து, அதில் இரண்டு வடையை வைத்து அவர் முன் வைத்தான் பேச்சி.

"எதுக்கு இந்த இழவு"

"தின்னுங்க..." என்று வேண்டினான் பேச்சி.

வேண்டா வெறுப்பாக வடையைப் பிட்டு வாயில் போட்டுக் கொண்டார் அவர். இஞ்சி, தட்டுப்பட வடை நன்றாகவே இருந்தது. பேச்சி, டீ போட்டுக் கொண்டு கேட்டார்.

"கூரையைப் பார்த்துட்டு என்னவோ சொன்னிய, என்னன்னு விளங்கலையே"

"அவன்தான் என்னமோ சொன்னான்...ஏதோ சொன்னதைச் செய்யாத சொங்கிப்பயன்னு, உன்னைத்தான் என்னமாவது வேண்டுதலை செய்துக்கிட்டு, அதை நிறைவேற்றலையோ? வீட்டுல யாருக்காச்சும் சுகவீனமோ, எல்லாம் கருப்பன் வேலை"

டீயை ஆற்றிக்கொண்டு இருந்தவன் கை படக்கென்று நின்றது.

"ஆமாங்க...இந்தப் பொம்பளை உடம்பு சுகவீனமா இருந்தப்போ கோழி போடறேன்னு சொன்னேன். எங்கே பண்றது? சனி, சம்சாரத்தோடு வந்த மாதிரி, வந்து போனா ஒரு வில்லங்கம். என்ன பன்றச் சொல்றியே...அதை ஞாபகத்துல வச்சுக்கிட்டு கேக்குதாக்கும்?"

"பொல்லாத பயன்னா அவன்? ஒரு வார்த்தையை விட்டுட்டா, பிடுச்சுக்குவானே, இங்கனே சுத்திச் சுத்தித் திரிவான். வீட்டுல, யாருக்காச்சும் உடம்பு சுகவீனமா இருக்கனுமே".

"சரியாச் சொன்னிய...பொட்டைக் குட்டிக்கு நேத்திலேந்து சாயங்காலம் ஆனா அனல் காயுது. உடம்பு சுடுது! என்னடான்னு பார்த்தேன். இதுதான் சங்கதியா?"

"பின்னே வேற! நான் வர்றச்சே பார்த்தேனே. அந்த தண்ணி அண்டாவுக்கு பக்கத்துல, குந்திக்கிட்டு இருந்தான்..."

"அதா?"

"ஆமாம், வேற யாரு தாழி அவன்தான்".

பேச்சியின் முகம் வெளிறிப் போயிற்று. பித்தளை அண்டாவையே பார்த்துக் கொண்டு இருந்தான். அண்டாவுக்குப் பக்கத்தில் இடம் இருந்தது.

"மந்திரக்காரரே....பூசை போட்டுடுவம். என்ன ஆகும்?"

டீயைக் குடித்துக்கொண்டு முத்துப்பாண்டி சொன்னார்.

"பொண்ணு, அந்தி நேரத்துல யாரோ அறுத்துப் போட்ட கோழிக் காலை மிதிச்சு இருக்கா..."

"தாழி மவ செய்தாலும் செய்திருப்பா...என்ன பண்றது மந்திரக்காரரே..."

"பரிகாரம்தான். பயலுக்குப் பூசை போட்டுடுவம். ஒரு இருநூறாவது வேணும். இப்படியே விட்டா, பொண்ணுக்கு வயிறு வீங்கி வயித்தாலே போயி, அப்புறம்..."

"வேணாம். உங்க வாயாலே அதைச் சொல்ல வேணாம்..."

"பின்னே? தாழி, கோழி கெட்ட கேடு, என்ன விலை விக்குது. யோசிச்சுப் பார்க்கனும். இதையே, ஐம்பது ரூபாயிலும் பண்ணலாம். ஆனா எதுக்குப் பண்ணறோம். கருப்பு சந்தோஷப்பட வேணாமா? ஏதோ பண்ணேனோம்னு பண்ணா, என்ன பிரயோசனம். எனக்கென்ன போச்சு? ஒத்தை ரூவா கொடு பண்ணி வைக்கிறேன்"

"வேணாம். வேணாம் மந்திரக்காரரே. சாமிக்குப் பண்றதுலே குறை வைக்கப்படாது. நூத்து அம்பது கொடுத்துடறேன். நிறைவா பண்ணிவையுங்க. வயசுப் பொண்ணு. சுருண்டு படுத்துக்கிட்டா மனசு கேக்கவா செய்யுது...?"

கல்லாவைத் திறந்து, பத்து, இருபது, அஞ்சு, இரண்டு அழுக்கு ஒற்றை ரூபாய் நோட்டுகளையெல்லாம் சேர்த்து, ஒரு வழியாக நூற்று ஐம்பதைத் தயார் செய்து, அவரிடம் தந்தார் பேச்சி.

"அப்ப சரி...நாளை வெள்ளி, ராத்திரிக்கு பூசை வச்சுக்குவோம். வடை, டீக்கு என்ன காசு?"

''சும்மா இருக்கட்டும் போங்க... இதெல்லாம் ஒரு சங்கதியாட்டும்?''

கையில் சில்லறை புழங்கியது. வேலையும் ஒன்று வந்திருக்கிறது. மிகுந்த உற்சாகம் கொண்டவராக ஆனார் முத்துப்பாண்டி...தென்னஞ்சோலை சாராயக் கடைக்கு போய் குடித்தார். சாராயம் கூட இனிப்பாக இருப்பது மாதிரி தென்பட்டது அவருக்கு.

''வியஞ்சனம் என்ன வேணும்யா? ஊறுகாய் தரட்டுமா!'' என்றான் கடைக்காரன்.

''தாழி...ஊறுகாயா? என்ன இருக்கு உன் கடையில!''

''கறி இருக்கு. தலைக்கறி, நண்டுப் பொறியல், எறா எல்லாமும்தான் இருக்கு. உனக்கு என்னயா வேணும்...''

''உனக்கு எதுக்கடா இந்தச் சங்கதியெல்லாம்'' என்கிற தொனி. அவன் வார்த்தையில் இருக்கிறதை அவர் உணர்ந்தார். சொன்னார்.

''நண்டும், எறாவும் கொண்டா...''

கடைக்காரன் அவரை ஆச்சர்யமுடன் பார்த்துச் சொன்னான்.

''உக்காருங்க அண்ணாச்சி...''

முத்துப்பாண்டி தனக்குள் சொல்லிக் கொண்டார்.

''காசில்லா ஆம்பிளையக் கட்டியவள் வேண்டாள்''

''வேசியும் விரும்பாள் உறவுகளும் விலகிடுமே...''

நிறையவே குடிக்க முடிந்தது அவரால். ஆனாலும் நிலை தடுமாறுவது என்பது அவர் அளவில் இல்லை. அவிழ்ந்து தோளில் புரளும் கூந்தலை அள்ளிக் கொண்டையாக முடிந்து கொண்டார். வேஷ்டியை இறுக்கிக் கட்டிக்கொண்டு தோப்புக்கு அந்தப்புறமாக இருந்த வெள்ளச்சி வீட்டுப்பக்கம் நடந்தார். ஒரு கையில் பாட்டிலில், அவரின் பிரியமானவளான வெள்ளச்சி குடிக்க என்று சாராயம் வாங்கி இருந்தார். கடை திருப்பத்தில், வெற்றிலை பாக்குக் கடையில், நல்ல கைச் சுருட்டாக நாலு வாங்கி முடித்துகொண்டார். வெள்ளச்சிக்குச் சுருட்டு பிடிக்கும், தோப்புக்கு வடக்காக, வடகரை போகிற ரஸ்தாவில் அரைமைல் நடந்தால், வடக்கு வாசல் விழும். அங்குதான், சவுக்குத் தோப்புக்குள் குடிசை போட்டுக் குடி இருந்தாள் வெள்ளச்சி.

வெள்ளச்சியோடு அவருக்கு அண்மைக் காலத்துப் பழக்கம்தான். சுமார் நாலைஞ்சு வருஷத்து உறவு. வெள்ளச்சியின் பட்டியலில் அடிக்கடி சில பேர் ஏறும். சில பெயர்கள் வீழும். சமீப காலங்களில், மேலத்தெரு பால்கார பத்பநாபன் அவளைக் கொண்டிருந்தார். என்றாலும், முத்துபாண்டியையும் அவள் கைவிட விரும்பவில்லை. 'தாய்க்கு நாலு குழந்தைகள் இருந்தால், நாலையுமே அவள் விரும்புவது இல்லையா' என்று கேட்பார். யாருக்குத்தான் தத்துவம், மெய்ஞானம் லயிக்காது?

தோப்புக்கு வெளியே நின்று, ஜாக்கிரதையாகப் பால்காரன் வில் வண்டி நிற்கிறதா என்று கண்காணித்தார். இல்லை, ஆக அவர் தைரியமாகக் கதவைத் தட்டலாம். தட்டினார்.

''யாரு'' உள்ளிருந்த குரல் கேட்டது.

''நான்தான் முத்துப்பாண்டி''

கொஞ்சம் அமைதி. எண்ணெய் காணாத கதவு, நரநரவென்று சப்தத்துடன் திறந்துகொண்டது.

வெள்ளச்சி, கசங்கிய புடவையுடனும், கலைந்த கூந்தலுடனும் நின்றிருந்தாள்.

''இப்பத்தான் வழி தெரிஞ்ச தாக்கும்?'' என்றாள் வெள்ளச்சி. கலைந்த கூந்தலை முடிந்து கொண்டாள். ''என்ன பண்றது வெள்ளை, தாழி நம்ம பிழைப்பு நாறிப் போச்சே...இந்தா...''

''என்னது!''

''உனக்குப் பிடிச்சதுதான்...''

பாயில் அமர்ந்தார்கள் இருவரும். நகர்ந்து சுவரில் சாய்ந்து அமர்ந்து கொண்டார் அவர். இரண்டு அலுமினிய டம்ளர்களை எடுத்தாள் வெள்ளை.

''எனக்கு வேணாம்...''

''நிறைய போட்டுக்கினியோ! பதார்த்தம் ஒன்னும் வாங்கியா ரல்லையா?''

''மறந்துட்டேன்''.

அவள் சாராயத்தில் தண்ணீர் கலந்து ஒரே 'தம்'மில் குடித்தாள்.

''எங்க ஊருலதானே இருக்கீரு?''

''ஊருலேதான் எங்க போறது. வேறே? மனுஷங்க, தாழி, தெய்வபயம் அத்துப் போயிட்டாங்க. தாழி ஊருல ஒத்தனும் விளங்கப் போறது இல்லை...''

அவள் சிரித்தாள்.

''என்ன சிரிப்பு?''

அவள், ஊறுகாய் மட்டை தேடி எடுத்து வந்தாள். உட்கார்ந்து, மீதியையும் குடித்து முடித்தாள். ஊறுகாயை வழித்து நாக்கில் தடவிக் கொண்டாள்.

''வயிற்றாலே விடுற சாபம் எல்லாம் பலிக்குமா?''

''வயிற்றாலேயா!''

''பின்ன என்ன? நீரு, கொடை, பலின்னு ஊரை ஏமாத்திக்கிட்டு இருப்பீரு. ஜனங்க, ஏமாந்தா அவங்க நல்லவங்க. ஏமாறலைன்னா, நீரு சாபம் கொடுப்பீரு. என்னையா, நியாயம் பேசறீரு! வயிறு காஞ்சி சாபம் விட்டா அது பலிக்குமா!''

''நான் ஊரை ஏமாத்தறதா சொல்றே? கருப்புகூட பட்டினி கிடக்கிறான். அவனைத் திருப்திப் படுத்தினா, நாலு நல்லது நடக்குமா, நடக்காதா? நீயே சொல்லு''

''யார் பட்டினி கிடக்கிறான்னு சொன்னே?''

''நம்ம பெரிய கருப்புதான்...''

வெற்றிலையைத் துப்பிவிட்டுச் சிரித்தாள் வெள்ளச்சி.

''இந்தக் 'கப்சா'ல்லாம் என்கிட்டே வேணாம். பேய்கிட்டே நீ பேசினியாக்கும்...ஆச்சு, எனக்கும் நாற்பத்தி ஏழு. இதுவரைக்கும் ஒரு மூதி கூட என் கண்முன்னாலே வரல்லையே...''

''தூஷணை பேசாதே...வெள்ளை, நேத்திக்குச் சாயங்காலம் கூட, கருப்பு என்கூட நடந்து வந்தா ன். பாவம்,

மெலிஞ்சு போய்க்கிடக்கான். சவரட்ணை இல்லை. அந்தக் காலத்துல ஆடு, கோழின்னு நிறைய கிடைச்சுது. இப்ப, தாழி, எல்லாப் பயலும் இங்கிலீஷ் படிச்சுட்டு சாமி பூதம் இல்லைங்கறான். அவனுக்காகவே நான் ஒரு ஏற்பாடு பண்ணி இருக்கேன்..."

"ஊரை ஏச்சுப் பிழைக்கிற பொழைப்பு எதுக்கு பண்ணீரு? ஒழுங்கா ஏதானும் வேலையைப் பாரும்யா. வேணும்னா சொல்லு. பால்காரர் கிட்டே சொல்லி உனக்கு ஒரு வேலை போட்டுத் தரச் சொல்றேன். என்ன சொல்றீரு?"

"அவன் கிட்டயா!"

"ஏன்?"

அவள் பாயை உதறிப் போட்டு, போர்வையை அதன் மேல் விரித்தாள்.

"இந்தா சுருட்டு?"

வெள்ளச்சி, சுருட்டைப் பற்றவைத்து, புகையை விட்டாள். பெண் சுருட்டு பிடிப்பதை அதன் அழகை ரசித்தார் முத்துப்பாண்டி.

"ஏன் அவர்கிட்டே வேலை பார்க்கக் கூடாது?"

"அவன் பிரியாணிப் பொட்டலாம் வாங்கி என்கிட்டயே உனக்குக் கொடுத்து அனுப்புவான். இது நமக்குத் தேவையா? நம்மாலே மாமா வேலை பார்க்க முடியாது. மந்திவாதியா, மாமாவா? நீயே சொல்லு"

"உன் இஷ்டம்"

அவள் காறி எச்சிலை உமிழ்ந்தாள்.

"பணம் ஏதாச்சும் இருக்கா?"

"பேச்சி, தூது கொடுத்தான். கொடை போடனும் கோழி வாங்கனும்".

"ஏழு எட்டு ரூபாயை விட்டெறிஞ்சா, கோழி கிடைக்குது. நூறு ரூபாய் என்னத்துக்கு? அம்பது கொடுத்துட்டுப்போம். விடிஞ்சா செலவு இருக்கு".

"அம்பது போதுமா?" என்படி அதைக் கொடுத்தார்.

"பாவம் உமக்கும் வேணுமே! வச்சிக்கிடும்..."

விநாயகா டாக்கிஸ் விளக்கும் அணைந்து கிடந்தது. மணி இரண்டுக்கும் மேலே என்று புரிந்தது. முத்துப்பாண்டிக்கு ஜனங்கள் ஒருத்தரும் நடைபாதையில் இல்லை. போதை சுத்தமாகப் போய் விட்டிருந்தது அவருக்கு. 'வெள்ளச்சி, வெள்ளச்சிதான்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டார். பேரன் பேத்தி எடுத்த இந்த வயசிலும், எப்படி ஒரு குதிரைத் தெம்பு? இதுகள்ளாம் ஒருவன வார்ப்பு! இது மாதிரி தொழில் பண்ணி வாழறதுக்கு, அதுக்குத் தக்க உடம்பு வேண்டும்தானே, இல்லையென்றால் பால்காரன் என்னத்துக்கு அவள்மேல், அள்ளிக் கொட்டுகிறான். எல்லாம் சுழிதான். அண்டமா முனிவர் எல்லாம் அடங்கும் இடம் அல்லவா? அடக்க ஸ்தலம். ஜனன வாயில், என்ன முரண்?

ஓடை சலசலத்தது. இறங்கிக் கால் கை முகம் கழுவிக் கொண்டார். முகத்தில் இருந்த வெற்றிலை எச்சிலைத் துடைத்துக் கழுவினார். புளியஞ் சாலையை கடந்து தெற்குப் புளிய மரத்தண்டை வந்து சேர்ந்தார்.

உடம்பு நெட்டி முறித்தது. மயிர் குத்திட்டது. உடம்பு ஆவேசம் வந்ததுபோல் ஆயிற்று. சுருட்டு வாசனை கம்மென்று கமழ்ந்தது.

கருப்பு, அவர் எதிரில் நின்றான்.

"வா...கருப்பா. உனக்கு நூறு வயசு. இப்பத்தான் உன்னை நினைச்சேன்"

"நூறா. நான் இந்த இடத்துக்கு வந்து ஐநூறு வருஷமாட்டு" என்றான் கருப்பு.

"ம்...மனுஷனுக்குச் சொல்றதை உனக்குச் சொல்லிட்டேன்" ஒரு விஷயமில்லாமல் அவர்கள் களத்துமேட்டுப் பக்கம் நடந்தார்கள்.

"பேச்சிப் பயலை அமுக்கிட்டேன். பய பணம் கறந்திருக்கான். நாளை ராத்திரி பலி. ஷோக்கான கோழி. எல்லாம் உனக்காகத்தான் ராசா. பாவம். நீயும்தான் எத்தனை நாள் பசியா கிடப்பே. நீயும் வேலையைக் கச்சிதமாய் பண்ணி இருக்கியே..."

முத்துப்பாண்டி கருப்பன் முகத்தைப் பார்த்தார். அது சந்தோஷத்தில் இருந்ததாக அவருக்குப் பட்டது.

"எங்கேந்து வர்றீரு. கவிச்சை வாசனை வீசுதே"

"சரியான துர்வாசனைக்காரம்பா நீயி. வெள்ளச்சி வீட்டுல இருந்துதான். அதுக்கு உன் மேல நம்பிக்கையே இல்லைப்பா..."

"பயந்துக்கிறவனுக்குத்தான் நாங்க எல்லாம். அப்படித்தான் சிவனார் எங்களுக்கு வரம் கொடுத்திருக்கார். அவளே ஒரு பேய். நான் என்ன பண்ண முடியும், நீரே சொல்லும்"

"அது சரி. நம்பினவருக்குத்தானே நாராயணன். நாளை ராத்திரிக்கு சரியா இரண்டு மூன்று மணிக்குள்ளாற வந்துடறேன். கோழி ரத்தமும், சாராயமும், அவ்ளோதானே?"

"அவ்ளோதான்"

"சுருட்டு?"

கருப்பன், திடுமென புகை விட்டது. எத்தனை பெரிய சுருட்டு.

"இது மாதிரி எவன் இப்போல்லாம் பண்றான்? எல்லாம் விரல் நீளம்" கருப்பன் சிரித்தார்.

களத்துமேடு வந்தது.

"இதுக்கு மேலே நான் வர முடியாது. அது மாடசாமி தங்கியிருக்கிற இடம். இப்படியே நின்னுக்கிறேன்"

"நல்லது. நாளைக்கு வர்றேன்"

"சரி. மறக்க மாட்டீரே".

கொஞ்சம் தூரம் போய் திரும்பிப் பார்த்தார் முத்துப்பாண்டி. தென்னை மரத்துக்கும் மேலே உயரமாக நின்றான் கருப்பன்.

பேச்சியின் மகள் மிரள மிரள விழித்தாள் 'ஹி...ஹி...' என்று குதிரை கனைப்பது மாதிரி சிரித்தாள். அப்புறம், "எங்கேடா கோழி?" என்றாள். முத்துப் பாண்டியைப் பார்த்து, "வாடா, என் மவனே, பேமானி!" என்றாள் அவள்.



பெற்றோர்கள் மட்டுமல்ல. முத்துப்பாண்டியே கொஞ்சம் அதிரத்தான் செய்தார்.

"தாழி கருப்பன்தான். ரொம்ப 'ஸ்டாங்கா' பிடிச்சிருக்கான் தாழி...இன்னிக்கு அவனா, நானான்னு பார்க்கலைன்னா, நான் முத்துசாமி மகன் இல்லேப்பா..."

"புடுங்கக்கூட முடியாது"

அம்மாக்காரியும் பேச்சியும் திடுக்கிட்டார்கள்.

"வண்டி வண்டியா பேசுது பாருங்க, இம்மாம் பொண்ணு".

"இவளா பேசறாள்? அந்தத் தாழில்லே பேசறான். இன்னும் அரை அவர்லே பாரு..."

முத்துப்பாண்டி கோலமாவு வாங்கி, சக்கரம் வரைந்தார். பதினாறு மூலை கொண்ட சக்கரம். அதன் மேல் மந்திர எழுத்துக்கள் எழுதினார். அதன் மேல் பலகை போட்டு, பெண்ணை அமர வைத்தார்கள். பெண் தலையை விரித்துப் போட்டுக் கொண்டு பயங்கரியாக அமர்ந்திருந்தாள்.

வேப்பிலைக் கொத்தை எடுத்துக்கொண்டு முத்துப்பாண்டி கேட்டார்,

"கோழி ரெடியா!"

"ரெடி சாமி"

"சாராயம்"

"ரெடி"

"சுருட்டு?"

"வைக்கப்பட்டிருக்கு"

"என்ன சமையல்?"

"நீங்க சொன்ன மாதிரிதான். கோழிக் குழம்பு, மீன் குழம்பு, கருவாட்டுக்குழம்பு".

"போடடுப் பிசந்திட வேணாம். தனித்தனியாவே இருக்கட்டும்". அவருக்குத் தனித்தனியாகச் சாப்பிடத் தான் பிடிக்கும்.

"நான் சொன்ன மாதிரி மண்கலயங்கள் தயாரா?"

"ஆகா"

முத்துப் பாண்டி, வர்ணிக்க ஆரம்பித்தார்.

**"வாடா கருப்பா...வானத்தில் வாழ்வோனே...**
**தேடுவார்க்கு தெம்பூட்டும் தென்னை மரக்கருப்பா**
**கண்ணுக்குத் தெரியாமல் விசுவருகில்**
**வாழ்வோனே...**
**மனசுக்குத் தெரியாமல் மண் மேலே வாழ்வோனே**
**கோழி ரத்தம் குடிச்சுவிட்டு குலமகளைக்**
**காத்திடுடா...**
**சாராயம் குடிச்சுப்போட்டு சரவிளக்கைக்**
**காத்திடுடா...**
**சுருட்டைக் குடிச்சுக்கிட்டு சுந்தரியைக்**
**காத்திடுடா...**
**இறைச்சிக்கறி தின்னு இளமகளைக்**
**காத்திடுடா...**
**பூசைகளை ஏற்று புத்திரியைக் காத்திடுடா...**
**கொடையை ஏற்றி கொழுகொம்பைக்**
**காத்திடுடா...**

ஒரு வழியாக நள்ளிரவு தாண்டி கருப்பன் போகச் சம்மதித்தான்.

"போறியா?"

"போறேன்"

"எந்த வழியா போறே!"

"வந்த வழியே போறேன்"

"திரும்பி வருவியா?"

"திரும்பி வரமாட்டேன்"

"மீண்டும் வருவியா?"

"எல்லை தாண்டி வரமாட்டேன்"

"சிவன் மேலே சத்தியமா?"

"சிவனார் மேலே சத்தியம்?"

"சரி...போ...."

"போறேன்..."

முத்துப்பாண்டி சொன்னபடியே, கலயங்களிலே சோறு, கறி, குழம்பு என்று வைத்துக் கொடுத்ததை எடுத்துக்கொண்டார். பையில் சாராயமும், தோளில் கால் கட்டிய கோழி பாதி உயிரை வைத்துக் கொண்டு 'கீகீ' என்று குரல் எழுப்ப, முத்துப்பாண்டி, தட்சணைப்பணம் அம்பது ரூபாயுடன் நடந்தார். மனம் உற்சாகத்தில் குதி போட்டது. கருப்பன் காத்திருப்பான்.

புளியஞ் சாலைப் பக்கமாகத் திரும்ப இருந்தவர், ஒரு கணம் யோசித்தார். சவுக்குத் தோப்பு வழியாகத் திரும்பி நடந்தார். இன்றைக்கும் பால்காரன் வந்திருக்கக் கூடாது என்று கடவுளை வணங்கிக் கொண்டார். அவர் எதிர்பார்த்தபடி தான் நடந்தது. வெள்ளச்சி கதவைத் திறந்தாள்.

முத்துப்பாண்டிக்கு கருப்பன் நினைவே வரவே இல்லை. விடியும்வரை கருப்பன் மனிதனுக்காகக் காத்திருந்தது.


*தமிழரசு இலக்கிய மலரிலிருந்து...* ✶

# எங்கள் ஊர் பிரச்சினை

**பிரச்சினை :**

கோவை நஞ்சுண்டாபுரம் பகுதியில் 35 வருடங்களாக வாடகைக் கட்டடத்தில், கிளை நூலகம் இயங்கி வருகிறது. தற்போது, இந்தக் கட்டடம் பழுதடைந்து உள்ளது. மாவட்ட நூலக ஆணைக்குழு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ரூ. 5¼ இலட்சம் ஒதுக்கி மூன்று வருடங்கள் ஆகின்றன. இது சம்பந்தமாக இடம் வழங்கக் கோரி, பொதுமக்கள் சார்பாக 1997 முதல் 26—4—1999 வரை விண்ணப்பம் மூலமாக மாவட்ட ஆட்சித்தலைவர் மாவட்ட வருவாய் கோட்டாட்சியர், தெற்கு வட்டாட்சியர் வருவாய் அதிகாரி மற்றும் கிராம அலுவலர் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்தி வருகிறார்கள். தாங்கள் நடத்தி வரும் தமிழக அரசு பத்திரிகையில் எங்கள் ஊர்ப்பகுதியில் பிரசுரித்து இதன் மூலமாக எங்கள் ஊர் நஞ்சுண்டாபுரம் கிளை நூலகத்திற்குக் கட்டடம் கட்ட இடம் வழங்குமாறு தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

*ஊர் பொதுமக்கள், நஞ்சுண்டாபுரம், கோவை—36.*



**தீர்வு :**

**கோவை மாநகராட்சியில் செயல்பட்டு வருகின்ற நஞ்சுண்டாபுரம் கிளை நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட வருவாய்த்துறை 1,150 சதுர அடி காலி மனையை நூலக ஆணைக்குழுவிற்கு முன் நுழைவு அனுமதி வழங்கியுள்ளது. மேற்படி பூமியை கோவை வருவாய் ஆய்வாளரிடம் விரைவில் சுவாதினம் எடுத்துக் கொள்ள இருக்கிறது.**

**நிலம் சுவாதினம் எடுத்துக் கொண்ட பிறகு மாவட்ட நூலக ஆணைக்குழு ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் சொந்தக் கட்டடம் கட்ட தக்க நடவடிக்கை எடுக்க இயலும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.**

*மாவட்ட நூலக அலுவலர்,*
*மாவட்ட நூலக ஆணைக்குழு, கோயமுத்தூர்—641 001.*

★ ★ ★

**பிரச்சினை :**

திருநெல்வேலி மாவட்டம் வாசுதேவநல்லூர் கிளை நூலகத்தில் ஒரு நூலகர் மட்டும் பணிபுரிந்து வருகிறார். ஒரு வாரத்தில் மூன்று நாட்கள் மட்டும் கிளை நூலகம் திறந்து வைக்கப்படுகிறது. சில வாரங்களில் அதுவுமில்லை. விசாரித்ததில் வாசுதேவநல்லூர் கிளை நூலகத்தில் பணிபுரியும் நூலகர் அருகிலுள்ள புளியங்குடி, இராயகிரி கிளை நூலகங்களுக்குச் சென்று பணிபுரிகிறாரென்று தெரியவருகிறது.

ஆகவே, வாசுதேவநல்லூர் கிளை நூலகம் வாரம் முழுவதும் திறந்துவைத்து வாசகர்களுக்கும், மக்களுக்கும் சேவை செய்ய மேலும் ஒரு பகுதிநேர ஊழியரோ அல்லது ஒரு நூலகரையோ அருள்கூர்ந்து நியமிக்க வேண்டுகிறேன் அல்லது வேறு ஏதாவது வழி இருந்தால் ஆராய வேண்டுகிறேன்.

*வி.ஜி.சுந்தரம், வாசுதேவநல்லூர், திருநெல்வேலி.*

**தீர்வு:**

**பணியாளர்கள் பற்றாக்குறைக் காரணமாக வாசுதேவநல்லூர் கிளை நூலகர், புளியங்குடி இராயகிரி கிளை நூலகங்களையும் கூடுதலாக கவனித்து வருகிறார். இதனால் வாசுதேவநல்லூர் கிளை நூலகம் வாரத்தில் 3 நாட்கள் மட்டும் திறந்து செயல்படுத்த முடிகிறது. 3ஆம் நிலை நூலகர்கள் நியமனம் செய்வது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் 3ஆம் நிலை நூலகர்கள் நியமனம் செய்ய இயலவில்லை. இருப்பினும் வழக்குகள் முடியும் வரை நூலகங்களைக் கவனிக்க பணியாளர்கள் இல்லாது இருப்பதாலும் இதுபோன்று பொதுமக்களிடமிருந்து புகார் மனுக்கள் பெறப்பட்டு வருவதாலும் பொதுமக்களின் குறைகளைத் தீர்க்கும் வகையில் உடனடியாக தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில் பணியாளர்கள் நியமனம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளன. விரைவில் தினக்கூலிப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு வாசுதேவநல்லூர் கிளை நூலகம் வாரம் முழுவதும் செயல்படுத்தப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.**

*மாவட்ட நூலக அலுவலர்,*
*மாவட்ட நூலக ஆணைக்குழு,*
*திருநெல்வேலி—627 002.* ★

# கைத்திறன் வளர்க்கும் பூம்புகார்

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் பிரசித்திப் பெற்ற 'பூம்புகார்' நிறுவனம், கைவினைப் பொருட்கள் தயாரிப்பதில் இம்மாநிலத்தி லேயே முதன்மையான ஒன்றாக திகழ்கிறது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் தொன்மையான கலைகளை பாதுகாப்பதோடு கைவினைஞர்களுக்கு உதவி செய்யும் நோக்கோடு செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்கள் மற்றும் பெங்களூர், கல்கத்தா, மும்பை மற்றும் புதுடெல்லி போன்ற வெளிமாநிலங்களிலும், 19 விற்பனை நிலையங்களை கொண்டுள்ளது. இந்நிறுவனம், தனது விற்பனை நிலையங்கள் மூலம் கைவினைப்பொருட்களை விற்பனை செய்வதுடன் ஆண்டுதோறும் இந்நாட்டில் பல பகுதிகளில் பலவகைப்பட்ட கண்காட்சிகளை நடத்தி அவற்றின் மூலமாக கூடுதல் சந்தை வாய்ப்பை ஏற்படுத்தி கைவினைஞர் களுக்கு உதவி செய்து வருகிறது. கடந்த ஆண்டுகள் போல, இக்கழகம் இவ்வாண்டும் சென்னை இராஜாஜி மண்டபத்தில் கண்காட்சிகளை தொடர்ந்து நடத்தி வருகிறது. தள்ளுபடி விற்பனையாக 'ஆடித்தள்ளுபடி' 12-8-99 முதல் 21-8-99 வரை அளிக்கப்பட்டது. தற்போது இராஜாஜி மண்டபத்திலேயே விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு கணபதி தரிசனம் கண்காட்சியினை நடத்துகிறது.

நாடு முழுவதும் விநாயகர் சதுர்த்தியை மிக்க மகிழ்ச்சியுடன் கொண்டாடுகிறார்கள். இதனையொட்டி பூம்புகார் நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு கணபதி தரிசனம் கண்காட்சியை அனைத்து விற்பனை நிலையங்கள் மூலம் நடத்துகிறது. இக்கண்காட்சியில் விநாயகரின் பல்வேறு விதமான சிலைகள் இடம் பெறுகின்றன.

கணபதி தரிசனம் கண்காட்சி சென்னையிலுள்ள இராஜாஜி மண்டபத்தில் 23-8-99 முதல் 12-9-99 வரை நடைபெறும். இக்கண்காட்சியில் விநாயகரின் பல்வேறு வடிவங்கள், புரதான முறையில் உருவாக்கப்பட்டவையும், பல்வேறு இடங்களிலிருந்து சேகரிக்கப்பட்டு, வெண்கலம், பித்தளை, மரம், சந்தனமரம், நூக்கமரம், நாட்டுமரம், காகிதக்கூழ், வெள்ளெருக்கு போன்றவற்றில் உருவாக்கப்பட்டவையும் பத்திக் மற்றும் கலம்காரி துணை வகைகளிலும் சேகரிக்கப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. இவ்வருடத்தின் சிறப்பு அம்சமாக சுவாமிமலையிலுள்ள தனது உற்பத்தி நிலையத்தில் சாஸ்திர முறைப்படி 32 விதமான (நிலைகளில்) பஞ்சலோகத்தில் விநாயகர் சிலைகளை உற்பத்தி செய்து இக்கண்காட்சியில் பார்வைக்காகவும் விற்பனைக்காகவும் வைக்கப்பட்டுள்ளன. மேற்படி 32 விதமான சிலைகளும் ஒரு தொகுப்பாக விற்பனை செய்யப்படுகிறது. மேலும் இந்த கண்காட்சியில் மற்றொரு சிறப்பு அம்சமாக கண்கவரும் வண்ணப் பெரிய அளவில் நர்த்தன கணபதி சிலையினை 7' உயரத்தில் 1.5 டன் எடையில் இடம் பெற்றுள்ளது. இதுவே இதுவரை செய்யப்பட்ட மிகப் பெரிய விநாயகர் வெண்கலச் சிலையாகும். அதிக அளவில் கைதேர்ந்த கைவினைஞர்கள் இப்பெரும் சிலையினை 42 மாதங்களில் செய்து முடித்துள்ளார்கள். மேற்படி சிலையானது அதிக கலைத்திறனுடன் இருப்பதால் அதனைக் காண்பவர்களின் கண்ணைக் கவரும் வண்ணம் இருப்பது மட்டுமல்லாமல் அதன் விலையும் நியாயமாக உள்ளது.

இக்கண்காட்சியில் அவரவர்களின் நிதி நிலைமைக் கேற்றவாறும் விருப்பத்திற் கேற்றவாறும் ரூ.18 முதல் ரூ.30 இலட்சம் வரை சிலைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

பெரிய அளவில் விநாயகர் சிலைகள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது மட்டுமல்லாமல், கண்கவர் வண்ணம் அழகிய கைத்திறன் பொருட்கள் இந்நிறுவனத்தின் பல்வேறு பகுதிகளி லிருந்தும் தருவிக்கப்பட்டு கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளது. இக்கண்காட்சியில் இடம்பெறும் அனைத்து பொருட்களுக்கும் 10% சிறப்பு தள்ளுபடி வழங்குகிறது.

பூம்புகார் நிறுவனம், அடுத்ததாக இராஜாஜி மண்டபத்தில் 'கைத்திறத் தொழில்கள் சந்தை' கண்காட்சி நடத்த உள்ளது. இக்கண்காட்சியில் பூம்புகார் இந்தியாவின் அனைத்து பகுதியிலும் உள்ள கைவினைஞர்களை அழைத்து அவர்களின் கைவினைப்பொருட்களை கைவினைஞர்கள் வாயிலாக, நேரடியாக விற்பனை செய்ய அபிவிருத்தி ஆணையர் (கைத்திறன்), புதுடெல்லி அவர்களுடன் இணைந்து ஏற்பாடு செய்கிறது. இக்கண்காட்சி வருகின்ற செப்டம்பர் 16ஆம் தேதி முதல் செப்டம்பர் 30ஆம் தேதி வரை நடக்கவுள்ளது.

இந்த கண்காட்சிக்காக ஆதரவு அளித்து, அதன் மூலம் கைவினைஞர்களின் வாழ்க்கைத்தரம் உயர உதவும்படி பூம்புகார் அன்புடன் வேண்டுகோள் விடுக்கின்றது.

## சமூகநலத்துறையின் மூலம் நிறைவேற்றப்படும்

# மகளிர் நலத்திட்டங்கள்

| திட்டத்தின் பெயர் | விவரம் | வரையறைகள் | அணுகவேண்டிய அலுவலர் |
|---|---|---|---|
| **மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதியுதவித் திட்டம்** | 10ஆம் வகுப்பு வரை படித்த ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு அவர்களின் பெற்றோர்களுக்கு நிதியுதவி வழங்குதல். வழங்கப்படும் உதவித்தொகை ரூ.10,000. | மணப்பெண் பத்தாம் வகுப்பு தேர்வு எழுதியிருக்க வேண்டும். பழங்குடியினர் 5ஆவது வகுப்புத் தேர்வு எழுதியிருந்தால் போதும்.<br>குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000–க்குள் இருத்தல் வேண்டும்.<br>ஒரு குடும்பத்தில் ஒரு பெண்ணுக்கு மட்டும் உதவித்தொகை வழங்கப்படும்.<br>திருமணத்திற்கு 45 நாட்களுக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும். மணப்பெண்ணுக்கு 18 வயது பூர்த்தியாகி இருக்க வேண்டும். | மாநகராட்சி ஆணையர்கள் (சென்னை, மதுரை, கோவை மாநகராட்சிகளில்) மாவட்ட சமூக நல அலுவலர்கள் (திருச்சி, திருநெல்வேலி, சேலம் மாநகராட்சிகளில்) நகராட்சி ஆணையர்கள் (நகராட்சி பகுதிகளில்) ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் (ஊரகப் பகுதிகளில்) மாவட்ட சமூக நல அலுவலர்/ விரிவாக்க அலுவலர்/ மகளிர் ஊர்நல அலுவலர் இதர இடங்களில். |
| **அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களின் திருமண நிதியுதவித் திட்டம்** | ஆதரவற்ற பெண்களின் திருமணத்திற்கு நிதியுதவி வழங்குதல். வழங்கப்படும் உதவித் தொகை ரூ.7,000. | ஆண்டு வருமானம் ரூ.12,000–க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். திருமணத்திற்கு முன் விண்ணப்பிக்க வேண்டும். மணப்பெண் 20 முதல் 30 வயதிற்குள் இருத்தல் வேண்டும். | மாவட்டச் சமூக நல அலுவலர் / சமூக நல விரிவாக்க அலுவலர்/ மகளிர் ஊர்நல அலுவலர் |
| **அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம்** | கலப்புத் திருமணங்களை ஊக்குவிக்க ரூ.10,000 (ரூ.7,000 தேசிய சேமிப்புப் பத்திரமாகவும், ரூ.3,000 காசோலையாகவும் வழங்கப்படும்) முன்னேறிய சமுதாயத்தினர் பின்தங்கிய அல்லது மிகவும் பின்தங்கியவரை மணந்தால் வழங்கப்படுகிறது.<br>2–10–97க்குப்பின் நடந்த கலப்புத் திருமணங்களில் மணமகளோ அல்லது மணமகனோ ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினராக இருந்தால் ரூ.20,000 (ரூ.10,000 தேசிய சேமிப்புப் பத்திரமாகவும், ரூ.10,000 காசோலையாகவும்) வழங்கப்படும். | 23–4–98க்குப்பின் நடைபெற்ற திருமணங்களுக்கு வருமான வரம்பு இல்லை. ஆதிதிராவிடர் அல்லது பழங்குடியினராக இருந்தால் 2–10–97க்கு பின் நடந்த திருமணங்களுக்கு வருமான வரம்பு இல்லை.<br>திருமணம் நடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.<br>20 வயது பூர்த்தியாகி இருக்க வேண்டும். | மாவட்டச் சமூக நல அலுவலர் / சமூக நல விரிவாக்க அலுவலர்/ மகளிர் ஊர்நல அலுவலர் |

| | | | |
|---|---|---|---|
| டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் - விதவை மறுமணத் திட்டம் | மறுமணம் செய்து கொள்ளும் விதவையர்களுக்கு மறுமண நிதியுதவியாக ரூ.10,000 வழங்கப்படும். | 1-4-98லிருந்து நடைபெறும் திருமணங்களுக்கு வருமான வரம்பு இல்லை. திருமண நாளிலிருந்து 6 மாதத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும்.<br>மறுமணம் செய்து கொள்ளும் விதவையின் வயது 20 முதல் 30-க்குள் இருத்தல் வேண்டும். | மாவட்டச் சமூக நல அலுவலர் / சமூக நல விரிவாக்க அலுவலர்/ மகளிர் ஊர்நல அலுவலர் |
| ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டம் | ஏழை விதவையர்களின் மகள் திருமணத்திற்கு ரூ.7,000 நிதியுதவி வழங்கப்படும். | ஆண்டு வருமானம் ரூ.12,000-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். ஒரு குடும்பத்தில் ஒரு பெண்ணுக்கு மட்டுமே உதவித் தொகை வழங்கப்படும். திருமணத்திற்கு 15 நாட்களுக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்.<br>மணப்பெண்ணின் வயது 18-லிருந்து 30 வயதிற்குள் இருத்தல் வேண்டும். | மாவட்டச் சமூக நல அலுவலர் / சமூக நல விரிவாக்க அலுவலர் / மகளிர் ஊர்நல அலுவலர் |
| தமிழக அரசு பெண்குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் | வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்களில் ஆண் குழந்தைகள் இல்லாமல் பெண் குழந்தைகள் மட்டுமே உள்ள குடும்பங்களுக்குக் கீழ்க்கண்ட உதவி வழங்கப்படுகிறது.<br>1. ஏப்ரல் 97-க்கு முன்னர் 2ஆவது பெண் குழந்தைக்கு மட்டும் ரூ.1,500-க்கான வைப்புத்தொகை ரசீது வழங்கப்படும்.<br>2. ஏப்ரல்-97 முதல் குடும்பத்தில் 2 பெண் குழந்தைகள் பிறந்து தாயார் கருத்தடை செய்து கொண்டால் ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ.1,500-க்கான வைப்புத்தொகை ரசீதும், ஒரே பெண் குழந்தை பிறந்து தாய் கருத்தடை செய்து கொண்டால் ரூ.3,000-க்கான வைப்புத் தொகை ரசீது அக்குழந்தையின் பெயரில் வழங்கப்படும். | 1. ஆண்டு வருமானம் ரூ.12,000-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>2. இரண்டாவது குழந்தைக்கு 3 வயது ஆவதற்குள் இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்து கொள்ள வேண்டும்.<br>3. இரண்டாவது குழந்தையைப் பதிவு செய்யும்போது முதல் குழந்தை பற்றிய விவரத்தையும் பதிவு செய்ய வேண்டும்.<br>4. முதல் குழந்தைக்கு இந்த வயது வரம்பு பொருந்தாது.<br>5. கருத்தடை செய்து கொள்ளும் தாயின் வயது 40-க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். | மாவட்டச் சமூகநல அலுவலர் |

| | | | |
|---|---|---|---|
| **தேசிய பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்** | வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களில் 15–8–97–க்கு பின் பிறந்த பெண் குழந்தைகளின் தாய்மார்களுக்கு மகப்பேற்றுக்கு பின் உதவித்தொகை ரூ.500 வழங்கப்படும். | ஆண்டு வருமானம் ரூ.11,400–க்கு மிகாமல் இருக்க வேண்டும். ஒரு குடும்பத்தில் எத்தனை குழந்தைகள் இருந்தாலும், 15–8–97க்குப் பின் பிறந்த இரண்டு பெண் குழந்தைகள் வரை இவ்வுதவித் தொகை தாய்மார்களுக்கு வழங்கப்படும். | குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர்/சமுதாய ஊட்டச்சத்து பயிற்றுநர்/ மாவட்டச் சமூகநல அலுவலர்/ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள குழந்தைகள் நல அமைப்பாளர் |
| **தேசிய மகப்பேறு நிதியுதவித் திட்டம்** | கருவுற்ற தாய்மார்களுக்குப் பேறு காலத்திற்கு முன்பு 12–லிருந்து 8 வாரங்களுக்கு முன்பாக ரூ.500 ஒரே தவணையில் நிதியுதவி வழங்கப்படுகிறது. இதன் மூலம் கருவுற்ற தாய்மார்களுக்கு வேலை செய்வதிலிருந்து ஓய்வு மற்றும் சத்துணவு பெற இத்திட்டம் உதவுகிறது. | 1. பயனீட்டாளர் ஆண்டு வருமானம் ரூ.12,000–க்குள் இருத்தல் வேண்டும்.<br>2. கருவுற்ற தாய்மார்கள் 19 வயதிற்கும் மேல் இருக்க வேண்டும்.<br>3. பயனீட்டாளர் முதல் இரண்டு பேறு காலத்திற்கு இந்த உதவி பெறலாம். | குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்/திட்டக்குழு அலுவலர்/மாவட்ட ஊட்டச்சத்துத் திட்ட அலுவலர்/ வட்டார பயிற்சி பயிற்றுநர் (ஊட்டச்சத்துத் திட்டம்) |
| **இலவசத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்** | வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஆதரவற்ற விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட மனைவிகள், உடல் ஊனமுற்ற ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோர் சுயதொழில் மூலம் தங்களின் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளும் பொருட்டு ஆண்டுதோறும் இலவசமாக தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. | 1. 20 வயது முதல் 40 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.<br>2. தையல் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.<br>3. ஆண்டு வருமானம் ரூ.12,000–க்கு உட்பட்டு இருத்தல் வேண்டும். | மாவட்ட சமூகநல அலுவலர்கள் |





| | | | |
|---|---|---|---|
| **இத்துறையின் கீழ் இயங்கும் மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மகளிருக்குத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வேலைவாய்ப்பு அளித்தல்** | 1. தையற் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்<br>2. இணை உணவு தயாரிப்பு கூட்டுறவுச் சங்கங்கள்<br>3. எழுது பொருள் தயாரிக்கும் மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்.<br>4. இதர மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் | சங்க உறுப்பினராக குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000—க்கு மிகாமல் இருக்க வேண்டும்.<br>சங்கங்களில் உறுப்பினராக சேர சம்பந்தப்பட்ட தொழில் தெரிந்திருக்க வேண்டும். | மாவட்டச் சமூகநல அலுவலர்கள் |
| **பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்கள் மூலம் வேலைவாய்ப்பு பயிற்சி அளித்தல்** | தையற் பள்ளி, பனை ஓலைத் தொழிற் பயிற்சி, போர்வை நெய்தல் பயிற்சி, துணி பொம்மைகள் செய்தல் பயிற்சி, பாய்கள் முடைதல், மெழுகுவர்த்தி உற்பத்தி பயிற்சிகள். | எட்டாம் வகுப்புக்கு மேல் படித்த (தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் பெண்களுக்குக் கல்வித் தகுதி அவசியமில்லை) வேலையற்ற பெண்களுக்குச் சுயவேலைவாய்ப்பு பெறும் பொருட்டு பயிற்சி அளித்தல். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000—க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். வயது வரம்பு 18 முதல் 35—க்குள் இருக்க வேண்டும். | மாவட்டச் சமூகநல அலுவலர்கள் |

# பொருளாதாரப் பின்னணியில் பெண்

– இரா.சீனிவாசன்
–க.பஞ்சாங்கம்

வாழ்க்கை இயற்கையைப் போலச் சிக்கலானது. அதுவும் பிற விலங்குகளின் வாழ்கையில் இல்லாத புதிய ஒரு பரிமாணத்தோடு கூடிய சிக்கல் வாய்ந்தது. இந்த மனித விலங்கு வாழ்க்கை; அதுதான் ஆண் / பெண் உறவு; மானுடப் பிரச்னை வரலாற்றின் அடிப்படை அலகாகக் கொள்ளத்தக்கது இந்த ஆண் / பெண் உறவுமுறைதான். மற்ற விலங்குகளின் வாழ்வில் இந்த ஆண் / பெண் உறவுமுறை, மறு உற்பத்திக்கான இயற்கையின் தேவையை நிறைவேற்றுவதாக மட்டுமே அமைந்திருக்கிறது. குறிப்பிட்ட பருவ எல்லைக்குள் இயங்குவதாக மட்டுமே அமைந்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், மனித வாழ்வில் அமைந்துள்ளது போல, இந்த அளவிற்கு, ஆண்/பெண் என்ற மனோபாவம் கூட அமைந்திருக்குமா என்பது சந்தேகமே. இவ்வாறு மனித்னின் ஆண்/பெண் உறவுமுறை சிக்கலாக அமைவதற்குக் காரணம், இவன் இயற்கையை எதிர்கொள்ள அமைத்துக்கொண்ட மொழிவழிப்பட்ட சமூகப் பண்பாடு என்கிற கட்டுமானமேயாகும். இந்தச் சமூக பண்பாட்டை வடிவமைப்பதில் பொருளாதாரச் சூழல் எத்தகைய செல்வாக்குச் செலுத்துகிறது. குறிப்பாக ஆண்/பெண் உறவில் எவ்வாறு இயங்குகிறது என்பதை விளங்குவதற்கு இக்கட்டுரையில் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

மனிதனது அனைத்து முயற்சி களுக்கும் முதன்மையான காரணம், அவனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதே ஆகும். ஆனால் மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் முதலியவை திரும்பத்திரும்ப ஏற்படக்கூடியவை! எல்லைக்குள் அடங்காதவை! ஆனால் இவனுடைய உழைப்புச் சக்தியும், உற்பத்திக்கான காரணங்களும் எல்லைக்கு உட்பட்டவை! மேலும் இக் காரணிகள் ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்களின் உற்பத்திக்கு பயன்படக்கூடியவை! அன்றியும், ஒரு காரணியை ஒரு பொருளின் உற்பத்திக்குப் பயன்படுத்தினால், வேறொன்றுக்கு அது பயன்படாமல் போய்விடும். இத்தகைய நெருக்கடியான சூழலில், மனிதன் பால் "தேர்ந்தெடுத்தல்" என்ற கடினமான பணிவந்து விழுகிறது! இவ்வாறு காரணிகள் குறைவாக இருப்பதால், (எல்லைக்கு உட்பட்டதாக இருப்பதால்) எந்தெந்த தேவைகளுக்கு முதலிடம் அளிப்பது, அதையும் எதுவரையில் பூர்த்தி செய்து கொள்ள முடியும்? காரணிகளின் தன்மை என்ன என்றெல்லாம் தீர்மானித்தே ஆகவேண்டிய நெருக்கடிக்குள் மனிதன் தள்ளப்படுகிறான். இத்தகைய சிக்கலான தேர்வுகளை மேற்கொள்ள மனிதன் எடுக்கின்ற நடவடிக்கையைப் பற்றிப் படிப்பதே "பொருளாதாரயியல்" எனப்படுகிறது!

மேற்கண்ட "தேர்வுகளை" நிர்ணயிப்பதில் 'பண்பாடு' எனப்படும் மனித வாழ்வின் மற்றொரு பரிணாம வளர்ச்சி பெரும்பங்கு வகிக்கிறது. ஒவ்வொரு பண்பாடும் பொதுவான சில கருத்தாக்கங்களை, மதிப்பீடுகளைக் கொண்டு விளங்குகின்றது! இந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் தான் ஒவ்வொரு மனிதனும் தன் தேவைகளைத் தீர்மானிக்கிறான்! எனவே, பண்பாடு என்பது மேற்கண்ட பொருளாதார நடவடிக்கையில் பெரும்பங்கு வகிக்கிறது என்பது தெரிகிறது! அதே நேரத்தில் இந்தப் பண்பாட்டை வடிவமைப்பதில் பெரிதும் ஆதிக்கம் செலுத்துவது, அடிப்படையில் ஆண்/பெண் உறவுமுறையாக இருக்கிறது! ஆக, இறுதியில் அப்படியும் இப்படியுமாகப் பொருளாதாரக் காரணிகளில் செல்வாக்குக்கு உட்படுகிற ஒரு கூறாக ஆண்/பெண் உறவுமுறை வந்து சேர்கிறது! எனவேதான் சுதந்திர இந்தியாவில் ஏற்பட்டுள்ள சமூகப் பொருளாதார மாற்றங்கள், எந்த அளவிற்குப் பெண்களின் வாழ்நிலையில் மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளன. அவற்றின் தன்மை என்ன என்பதை விளக்குவதன் மூலம் ஒரு தந்தை வழிச் சமூகத்தில் பெண்ணின் நிலை என்ன என்பதை மேலும் ஆழமாக அறிந்து கொள்ளலாம் என நம்பப்படுகிறது.

***பொருளாதார வளர்ச்சியும் பெண்கள் மேம்பாடும்:***

ஒரு நாட்டின் வளர்ச்சி நிலையைக் கணிக்கும் போது, பொதுவாக அந்நாட்டின் தனிநபர் வருமானத்தின் அ வு ஒரு குறியீடாக எடுத்துக் கொள்ளப்படும்! மேலும், ஒரு சமூகத்தில் நிலவும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் கணிப்பதற்கும், பல புதிய விவர உத்திகள் பொருளாதார நிபுணர்களால் வெற்றிகரமாகக் கையாளப்பட்டு வருகின்றன; ஆனால் சமூகப் பண்பாட்டு மாற்றங்களையும் வளர்ச்சிகளையும், கணிப்பதற்குச் சரியான புள்ளிவிவர முறைகள் திருப்திகரமாக இதுவரை அமையவில்லை; என்றாலும், பண்பாட்டு மாற்றத்தின் குறியீடாகப் பெண்களின் சமூக நிலையை எடுத்துக் கொண்டு ஆராய்ந்தால், பொருளாதார மாற்றத்திற்கும், பண்பாட்டு மாற்றத்திற்கும் இருக்கும் நெருங்கிய உறவை நன்கு வெளிக்கொணர முடியும்.

கிருஷ்ணா அஹீஜா படேல் உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கும் பெண்களின் மேம்பாட்டுக்கும் உள்ள உறவை ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார். இவ்வாராய்ச்சிக்காகப் "பெண்கள்



முன்னேற்றக் குறியீடு'' என்றொரு புள்ளியியல் அட்டவணையைத் தயார் செய்துள்ளார். இப்புள்ளியில் குறியீடு (1) பிரசவத்தின் போது இறந்து போகும் தாய்மார்களின் விகிதம், (2) பெண் குழந்தைகளின் இறப்பு விகிதம் (3) பெண்களின் வாழ்நாள் விகிதம் (4) பெண்களின் உயர்கல்வி விகிதம் (5) பெண்களின் வேலைப் பங்கேற்பு விகிதம் (6) பெண்களின் அரசியல் பங்கேற்பு விகிதம் ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது; இவ்வாறு தயாரிக்கப்பட்டுள்ள இப்புள்ளியல் குறியீடு பெண்களின் உண்மை நிலையை முழுமையாகப் பிரதிபலிக்கவில்லை தான் என்று ஏற்றுக்கொள்ளும் படேல், மேலும் செம்மையாகக் கணக்கிட்டுத் தயாரிக்கப்படும் புள்ளியல் குறியீடு வரும்வரை தன்னுடைய இந்தக் குறியீட்டு அட்டவணையைத் தற்காலிகமாக ஏற்றுக்கொள்ளலாம் என்றார்.

இந்தப் புள்ளியல் ஆராய்ச்சியின்படி, இந்தியா பொருளாதார வளர்ச்சியில் உலக நாடுகளின் 63–வது நாடாகவும், பெண்களின் முன்னேற்றக் குறியீட்டின்படி 76–வது நாடாகவும் உள்ளது என்கிறார் படேல், மேலும் தன் ஆய்வில் கீழ்க்காணும் முடிவுகளையும் தருகிறார். அவற்றுள் குறிப்பிடத்தக்க சில வருமாறு:–

1. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் அந்நாட்டுப் பெண்களின் நிலைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை.

2. பெண்களின் வளர்ச்சிக்குத் தடையாய்ப் பல பண்பாட்டு மற்றும் சமூகக் காரணங்கள் உள்ளன.

3. பெண்களுக்கெனத் தனியாகச் சமூகப் பொருளாதாரத் திட்டங்களை வகுத்துச் செம்மையாகச் செயல்படுத்தும் பின்தங்கிய நாடுகளில் முன்னேறிய நாடுகளின் நிலையை விடப் பெண்களின் நிலை மேம்பாடான முறையில் அமைந்துள்ளது.

பெண்களின் பின்தங்கிய நிலைக்கு முக்கியமான இரண்டு காரணங்களைப் படேல் முன் வைக்கிறார். (1) பொருளாதார வாழ்வில் பெண்கள் ஆண்களைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை. (2) இப்பொருளாதாரச் சார்பு அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ள பண்பாட்டுச் சூழல்! மேலும், ஒரு கருத்தைப்படேல் வலியுறுத்துகிறார். பெண்களுக்குப் பொருளாதார சுதந்திரம் கிடைத்தாலும்கூட, பழைய பண்பாட்டுச் சூழல் உடனடியாக மாற்றங்களுக்கு உட்படுவதில்லை, இந்நிலையில் பெண்களின் வாழ்நிலையைத் தீர்மானிப்பதில், நேரடியான பொருளாதாரக் காரணிகளை விட, அக்காரணிகளால் உருவாகிய பண்பாட்டுச் சூழல் பெரும்பங்கு வகிக்கிறது! எனவே பெண்கள் பொருளாதாரத்தில் சார்பற்ற நிலையை அடைவதுடன், ஆண்/பெண் சமத்துவத்திற்கு மனத்தைப் பக்குவப்படுத்தும் பண்பாட்டுச் சூழலையும் ஏற்படுத்த வேண்டும்! இதற்கு பெண்களுக்கான பண்பாட்டுச் சூழல் எவ்வாறு அமைந்திருந்தது என்பதைச் சரியாகக் கணித்துக் கொள்வது நலம் பயக்கும்!

### *பெண்ணும் சமயமும்:*

இந்தியா மதச்சார்பற்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதால், இன்று உலகிலுள்ள பெரும்பாலான மதங்களும் இந்தியாவில் செழிப்புடன், உரிமையுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன! ஆனாலும் இந்திய மக்கள் தொகையில் 82% மக்கள் இந்துக்கள் ஆவர்! எனவே, பெரும்பான்மையான இந்திய மக்களின் மனோபாவத்தை வடிவமைப்பது இந்து சமயப் பண்புகளும் பழக்க வழங்கங்களுமே! பொதுவாகவே மானுடனின் மொழிக்குள் பெரும்பகுதியை மதக்கருத்துக்களே ஆக்ரமித்துள்ளதால், ஒவ்வொரு மனிதனும் மதத்தின் செல்வாக்கிற்கு அவனறியாமலேயே உள்ளாகி ஒரு மதவாதியாகவே வடிவமைக்கப்படுகிறான்! அதுவும் பெண்களைப் பொறுத்தவரை அவர்களின் உளவியலை உருவாக்குவதில் மத நிறுவனங்களின் செல்வாக்கு அதிகமாகவே இருந்து வந்திருக்கிறது.

இந்து மதத்தில் பெண் தெய்வங்கள் மிகவும் சக்தி வாய்ந்தனவாகக் காட்டப்படுகின்றன. 'சக்தி வழிபாடு'

இந்து மதத்தின் பெரும்பிரிவாக விளங்குகிறது. துர்க்கை, ஆண் கடவுளால் அழிக்க முடியாத தீய சக்திகளை அழித்ததாகச் சமய நூல்கள் பலவாறு புனைந்து அவளைக் கொண்டாடுகின்றன. இவ்வாறு புராணங்களில் பெண் ஒருபக்கம் கொண்டாடப்பட்டாலும், மறுபக்கம், அவள் ஆணுக்கு அடங்கியிருக்கும் போதுதான் அவளது நற்குணங்களும் சக்தியும் அதிகரிப்பதாகவும் கூறப்படுகிறது. பெண், ஆணின் ஒரு பாதி என்கிறது இந்துமதத் தத்துவம்! அதே நேரத்தில் ஆண்–பெண் நிலைப்பாட்டை விளக்கும்போது, ஆண் 'விதை' என்றும், பெண் அதை ஏற்று விளைய வைக்கும் 'நிலம்' என்றும் அடையாளப் படுத்தப்படுகிறாள்! இத்தகைய அடையாளப்படுத்தல் மூலம், 'விதையே' விளைச்சலுக்கு மூலம் என்று ஆணாதிக்–கத்தை நியாயப்படுத்துகிறது. மேலும், பல புராணங்களும், சடங்குகளும் ஆணுக்குப் பெண் அடிமை என்ற கருத்தைத் திரும்பத் திரும்ப வலியுறுத்துகின்றன. (துயே, 1988) இந்தக் கருத்தைத் தான் இன்றும் இந்தியத் தகவல் தொடர்புக் கருவிகள் மின்னணுவின் உதவியால் பல கோடி மடங்கு பெருகி விதைத்துக் கொண்டிருக்கின்றன.

### *பெண்ணும் சமூகமும்!*

இந்தியச் சமூகத்தில் பெண் என்பவள்; 'தாய்' (அ) மனைவி என்ற நிலையில்தான் பெரும்பாலும் அடையாளப்படுத்தப்படுகிறாள்; எனவே, 'குடும்பம்' என்ற நிறுவனத்திலிருந்து பிரித்தறிய முடியாத ஒரு நிலையில்தான் அவளது வாழ்வு வடிவமைக்கப்பட்டுள்ளது; மேற்கத்திய நாடுகளில் கடந்த சில நூற்றாண்டுகளாகப் பின்பற்றப்படும் முதலாளித்துவப் பொருளாதார அரசியல் காரணமாக, அங்கே பெண்ணைத் 'தனியாக' ஒரு நபராகப் பார்க்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது; இன்று மேற்கத்திய நாடுகளில் பெண்களுக்கான விடுதலைக் குரல் ஓங்கி ஒலிப்பதற்கு இது ஓர் அடிப்படைக் காரணமாகும்!

இந்தியச் சமூகத்தில் 'பெண்' குழந்தை பிறந்த உடனேயே, 'வரப்போகிற ஒரு கணவனுக்காக வாழப் போகிற ஓர் அடிமை! அதற்காகத் தான் நாம் தயாரிக்கப்படுகிறோம்' என்ற மனோபாவத்தை அப்பெண் சிறுமியாக இருக்கும்போதே அடையும்படியாகக் குடும்பத்தின் நிர்வாக அமைப்புக்கள் அமைந்துள்ளன. எனவே, ஓர் இந்தியப் பெண் முன்பின் பழக்கமில்லா ஏதோ ஒரு ஆடவனுடன், திருமணத்தன்றே மனைவியாக, அடிமை வேலை செய்யத் தயாராகிவிடுகிறாள்! இந்த அடிமைப் பதவியும் அவளுக்குச் சாதாரணமாகக் கிடைத்துவிடுவதில்லை; 'வரதட்சணை' என்கிற கொடுமையை அவள் கடந்து வரவேண்டியுள்ளது வரதட்சணை கொடுமைக்கு ஆளாகும் இந்தியப் பெண்களின் நிலைபற்றி அதிகம் கூறத்தேவையில்லை.

அண்மைக் காலங்களில், சேலத்தை அடுத்துள்ள கிராமங்களில் நடந்த பெண் சிசுக்கொலைகள் போன்ற நெஞ்சைப்பிளக்கும் சம்பவங்கள், இதற்கு ஓர் முக்கிய உதாரணம்.

இந்திய சமூகத்தில், பெரும் பகுதிகளில் தந்தை வழிச் சமூக அமைப்பே பின்பற்றப்படுகிறது. இத்தகையக் குடும்ப அமைப்பில் பாலின வேறுபாட்டின் அடிப்படையில் வேலைப் பிரிவினைகள் அமைந்துள்ளன. வீட்டு வேலைக்குப் பெண்; வெளியில் வேலை செய்து பொருளைத் தேடுபவன் ஆண்! இதன் மூலம் ஆண் குடும்பத் தலைவன் என்றும், பெண் அவனைச் சார்ந்து அடங்கி நடக்க வேண்டியவள் என்றும், சமூகச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

தாய்வழிக் குடும்ப அமைப்பு நிலவும் சமூகங்களில் (கேரளாவில் நாயர் முதலிய சில சாதிகள், வடகிழக்கு மாநிலங்களில் வாழும் சில மலைச் சாதியினர்) பெண்களின் நிலை உயர்ந்துள்ளது என்று பல ஆய்வுகள் நிரூபிக்கின்றன. (கணேஷ் கமலா லார்லா ரிசிவோவ், 1993) எனவே, குடும்பத்தின் அதிகார அமைப்பு முறைக்கும், பெண் விடுதலைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பது தெரிகிறது; ஆகையால், பெண் விடுதலை என்பது குடும்பத்திலிருந்தே தொடங்கப்பட வேண்டிய ஒன்றாக நிலவுகிறது!

ஆண்–பெண் சமத்துவத்தை இந்திய அரசியல் சட்டம் வலியுறுத்துகிறது. பெண்களுக்கான உரிமையை வழங்க, பழைய பெண்ணடிமை முறையை ஒழிக்க, (1) சதி ஒழிப்புச் சட்டம் (2) சிசுக் கொலைத் தடுப்புச் சட்டம் (3) தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் (4) விவாகரத்துச் சட்டம் (5) வரதட்சணைக்கு எதிரான சட்டம் (6) கருக்கலைப்புச் சட்டம் (7) சொத்துரிமைச் சட்டம் (8) பாலியல் வன்முறைக்கு எதிரான சட்டம் (9) பால்ய விவாக ஒழிப்புச் சட்டம் எனப் பலவிதமான சட்டங்களை இந்திய அரசாங்கம் இயற்றியுள்ளது; ஆனால் எளிதில் மாற மறுக்கும் பண்பாட்டுச் சூழலினால், இச்சட்டங்கள் எதிர் பார்த்த பயனைத் தரவில்லை.

இந்நிலையில் பெண்களுக்கான விடுதலையை வழங்குவதற்கேற்ற பண்பாட்டு மாற்றங்களை ஏற்படுத்தச் சிறந்த வழிமுறைகள் என்ன? பெண் கல்வியும், பெண்ணின் பொருளாதார விடுதலையும்தான் என்று பலரும் ஒப்புக் கொள்கின்றனர். எனவே இவ்விரண்டிலும் சமகாலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை இனிக் காணலாம்.

### *பெண்ணும் கல்வியும்*

கல்வி கண்ணைத் திறக்கும் என்பது உண்மை! ஆனால் இந்தியாவின் கல்வி முறையும் பெண்ணை அடிமைப்படுத்தும் தந்தை வழியிலான சமூகப் போக்கை முன்னிலும் பல மடங்கு வலியுறுத்திப் போதிப்பதாகவே அமைந்துள்ளது; இந்தியாவில் இதுவரை கல்விக்காக அமைக்கப்பட்ட குழுக்கள் பலவும் இதே கருத்தை வலியுறுத்துகின்றன. சான்றாக, டாக்டர் இராதாகிருஷ்ணன் தலைமையிலான கல்விக்குழு தயாரித்து அளித்த அறிக்கையில், பெண்கல்வி, பெண்கள் வீட்டுவேலை செய்வதற்கான திறமைகளை வளர்க்கத் துணை செய்ய வேண்டும் என்று குறிப்பிடுகிறது; ஆனாலும் இத்தகைய இடர்ப்பாடுகளுக்கிடையிலேயும் பெண்கல்வி இந்தியாவில்

ஓரளவிற்கு ஒப்பீட்டளவில் உயர்ந்துள்ளது எனலாம். அதனால் கல்வி தொடர்பான தேர்வுகளில் பெண்களின் தேர்வு விகிதம் அதிகரித்து வருவதைச் சான்றாகச் சொல்லலாம்: ஆனால் ஆண்களுடன் ஒப்பு நோக்கும் போது பெண்கல்வி போதுமானதாக இல்லை. மக்கள் தொகையில் **46.5%** ஆக இருக்கும் பெண்களின் படிப்பறிவு விகிதம் **39.42%** ஆகவும், ஆண்களின் படிப்பறிவு விகிதம் **63.38%** ஆகவும் இருப்பதாக **1991**–ம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு கூறுகிறது; பள்ளியில் இருந்து நின்று விடும் பெண்களின் விகிதம் **67.55%** ஆகவும், ஆண்களின் விகிதம் **58.80%** ஆகவும் இருப்பதாக **1987–88**ஆம் ஆண்டு எடுத்த புள்ளிவிவரம் கூறுகிறது! கடந்த எண்பது ஆண்டுகளில் பெண்களின் கல்வி வளர்ச்சி **24%** ஆகவும், ஆண்களின் கல்வி வளர்ச்சி **37%** ஆகவும் இருக்கிறது.

பெண்களின் கல்வி வளர்ச்சியில் இந்நிலை நிலவுவதற்குப் பல காரணங்கள்உள! அவற்றில் பெரும்பங்கு வகிப்பது பண்பாட்டுக் காரணிகளே ஆகும்! ஆண் படித்தால் போதும் என்ற மனப்பான்மை; இளமைத் திருமணம் முதலியவை பெண் கல்வியின் தேக்க நிலைக்கு முக்கிய காரணங்கள் ஆகும்! உண்மையில் உலக வங்கியின் ஓர் அறிக்கையின் படி, ஆண் கல்வியால் ஏற்படும் பொருளாதார விளைவுகளை விடப் பெண் கல்வியினால் ஏற்படும் பொருளாதார விளைவு அதிகம் என்று தெரிய வருகிறது; ஒன்று, பெண்களின் வருவாய் ஈட்டும் திறன் அதிகரிக்கிறது; இரண்டு, கல்வியினால் ஏற்படும் சமூக நன்மைகள், சான்றாகப் படித்த பெண்களிடையே அதிகரிக்கும் திருமண வயது; கருத்தடை, சிறிய குடும்பம் பற்றிய அறிவு முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

எனவே பெண் விடுதலைக்கான பெண் கல்வியின் வளர்ச்சி அளவு சார்ந்ததாகவும் பண்பு சார்ந்ததாகவும் இருக்க வேண்டும்; மேலும் பாலின வேறுபாடு அற்ற, பொருளாதார மேம்பாட்டிற்கான கல்வித் திட்டம் வகுக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட வேண்டும்; இத்தகைய கல்வி முறையினால் பண்பாடு மாற்றங்களை எளிதாக நடத்திக்காட்ட முடியும்.

### *பெண்ணும் பொருளாதார நிலையும்*

பெண்ணின் சார்பு நிலையை விளக்க எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மிக முக்கியமான அடையாளக் குறியீடு அவளது பொருளாதார நிலையாகும்! பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு ஒன்று தயாரித்தளித்த அறிக்கை உலகத் தொழிலாளர் தொகையில் மூன்றில் ஒரு பங்கு பெண்கள் என்றும், பெரும்பாலான சம்பளமில்லா வேலைகளைச் செய்பவர்கள் பெண்களே என்றும் கூறுகிறது. உலகில் இருபாலாரும் செய்யும் சம்பளமில்லா வேலையின் அளவு **16** ட்ரில்லியன் டாலர், இதில் **11** ட்ரில்லியன் டாலர் அளவு பெண்ணினால் மட்டுமே செய்யப்படுகிறது. மேலும் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் பெண்களுக்கு உலக வருமானத்தில் **10%** தான் போய்ச் சேர்கிறது; உலகச் சொத்தில் **1%** தான் அவர்களுக்கு உரிமையாய் இருக்கிறது என்றும் கூறுகிறது. (படேல் **1993**) அன்றியும் உலகில் வறுமையில் வாடும் **1.3** மில்லியன் மக்களில் **70%** பேர் பெண்களே.



இந்தியா போன்ற ஓரத்து நாடுகளோடு ஒப்பிடும் போது வளர்ச்சியடைந்த நாட்டிலுள்ள பெண்கள் உயர்ந்த நிலையில் விளங்கினாலும், தங்கள் நாட்டிலுள்ள ஆண்களோடு ஒப்பிடும் போது தாழ்ந்த நிலையில் தான் காணப்படுகிறார்கள்.

இந்திய மக்கள் தொகையில் 46.5% ஆக இருக்கும் பெண்கள், தொழிலாளர் தொகையில் 25% தான் உள்ளனர். இந்தப் பெண் தொழிலாளர்களின் பொருளாதார நிலையினை அறிந்து கொள்ளப் பயன்படும் முக்கியக் குறியீடு, அவர்களின் "வேலைப்பங்கேற்பு விகிதம்" பற்றிய அட்டவணை ஆகும். இக்குறியீட்டில் 'வேலை' என்பது வெளிப்படையாக வருவாயைத் தரும் வேலையை மட்டும் குறிக்கும்; அதாவது பெண்களின் வருவாய் இல்லாத வீட்டு வேலை கணக்கில் சேராது! இந்த அடிப்படையில் வேலை பங்கேற்பு விகிதம் பற்றிய புள்ளிவிவர அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**இந்தியாவில் வேலைப்பங்கேற்பு விதிகம் (1971–91)**

| வருடம் | பிரிவு | நபர் | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|---|---|
| 1971 | மொத்தம் | 34.2 | 52.7 | 14.2 |
| | கிராமம் | 35.3 | 53.8 | 15.9 |
| | நகரம் | 29.6 | 48.9 | 7.2 |
| 1981 | மொத்தம் | 36.7 | 52.6 | 19.67 |
| | கிராமம் | 38.8 | 53.8 | 23.1 |
| | நகரம் | 30.0 | 49.1 | 8.3 |
| 1991 | மொத்தம் | 37.7 | 51.6 | 22.7 |
| | கிராமம் | 40.2 | 52.5 | 27.2 |
| | நகரம் | 30.4 | 49.0 | 9.7 |

**மூலம் : (டாத் ருட்தார் & கே.பி.எம்.சுந்தரம் (1994)**

இப்புள்ளி விவரப்படிப் பெண்களின் வேலைப்பங்கேற்பு விகிதம் 1971–ல் இருந்து அதிகரித்து வருகிறது; இது அண்மைக் காலத்தில் பெண்கள், ஆணாதிக்கத்தில், இருந்து வந்த தொழிலாளர் உலகில் தங்களுக்கான ஒரு இடத்தை ஏற்படுத்தி வருகின்றனர் என்பதைக் காட்டுகிறது இவ்வட்டவணைப்படி, கிராமப்புறங்களில் பெண்களின் வேலைப் பங்கேற்பு விகிதம் அதிகரித்த அளவு, நகர்ப்புறங்களில் அதிகரிக்கவில்லை! காரணம், நவீன தொழில்நுட்பம் இயந்திரங்களைக் கொண்டு வேலை வாங்கிக் கொள்ளுகிறது; வேலைப் பங்கேற்பு விகிதம் கிராமங்களில் அதிகமாக இருந்தாலும், கிராமியப் பொருளாதாரம் சட்ட ஒழுங்குகளுக்கு உட்படாது இருப்பதால், பெண் தொழிலாளர்கள் அதிகமான சுரண்டலுக்கு உள்ளளாகின்றனர்; இத்தகைய தடைகளை எல்லாம் தாண்டி, இதற்கு முந்திய காலங்களில் பெண்களின் வேலைப் பங்கேற்பு விகிதம் அதிகரித்துள்ள அளவிற்கு, வருங்காலத்தில் அதிகரிக்குமா என்பது சந்தேகத்திற்குரியது; ஏனெனில் 1985–ல் இருந்து இந்தியா பின்பற்றிவரும் தாராளமயப் பொருளாதாரம், தனியார் மயம், இந்தியப் பொருளாதாரத்தை உலகப் பொருளாதாரத்தோடு இணைத்தல் போன்ற கொள்கைகளினால் வேலை வாய்ப்புகள் குறைந்து கொண்டே வருகின்றன. இவ்வாறு வேலைவாய்ப்புகள் குறையும் போது, பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் பெண்களே! ஏனென்றால், பெண்கள் பொருளாதார சுதந்திரம் அடைய வேண்டும் என்றால், நாட்டில் வேலை வாய்ப்புகள் குறையாமல் பெருகிக் கொண்டே இருக்க வேண்டும்; பெண்களுக்குச் சட்ட ரீதியாகச் சொத்துரிமை இருந்தாலும், அதைத் தன்னிச்சையாகப் பயன்படுத்தக்கூடிய உரிமையைப் பண்பாட்டுச் சூழல் இன்னும் அவர்களுக்கு வழங்கவில்லை; இந்நிலையில் பெண்களின் வேலைவாய்ப்புக் குறைந்தால், அவர்கள் விடுதலை அடைவதற்கு முக்கியமான ஒரு காரணி இல்லாமல் போய்விடும். மேலும் வேலை வாய்ப்புக் குறைவினால் வறுமை அதிகரிக்கும், வறுமையினால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகுபவர்கள் பெண்களே! மேலும் அரசின் புதிய பொருளாதாரக் கொள்கையினால், அரசு சமூக நலனுக்காகச் செலவிடும் தொகையின் அளவு குறைந்து கொண்டே வருகிறது. இதுவும் பெண்களைத்தான் அதிகமாகப் பாதிக்கும்.

மற்றொன்றையும் எண்ணிப் பார்க்கவேண்டும்; நகர்ப்புறங்களில் மேல்தட்டு மற்றும் நடுத்தர வர்க்கப் பெண்களின் பொருளாதார நிலையில் தான் சிறிது மாற்றம் ஏற்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் இன்றும் பெண்கள் குறைந்த பொருளாதார வாழ்வில் கிடந்து, தொடர்ச்சியான சுரண்டலுக்கும் கொடுமைகளுக்கும் ஆட்பட்டுக்கொண்டு தான் வாழ்ந்து வருகின்றனர்.


## *பெண்ணும் வீட்டு வேலையும்*

இந்தியாவில் கணவன் – மனைவி இருவரும் வெளியே வேலைக்குச் செல்லும் குடும்பங்களில் உள்ள 'குடும்ப வேலைகள்' பற்றியும் 'குடும்ப அதிகாரி அமைப்புமுறை' பற்றியும் நடந்தபல ஆராய்ச்சிகளின்படி, பெண்கள் ஆண்களுக்குச் சமமாக வெளியே வேலைக்குச் சென்று பொருள் திரட்டி வந்தாலும், தங்களுக்கான உரிமைப் பெறுவதில் போதுமான அளவு வெற்றி பெறவில்லை என்று தான் தெரியவருகிறது. இதற்கு முக்கிய காரணம் ஆண்கள், தங்களின் அதிகாரங்களை, இதுநாள் வரைத் தங்களுக்கு அடிமைப்பட்டிருந்த பெண்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பவில்லை. பழைய பண்பாட்டுச் சூழல் இடந்தரவில்லை (இராமு. ஜி.என். 1989) பெண்களும் பாரம்பரியமாகக் காக்கப்பட்டுவரும் குடும்ப அமைப்புடன் ஒத்துப்போகவே விரும்புகின்றனர். மீறினால் குடும்பம் பிளவு படுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையில் பல பெண்கள் ஆணுக்குக் கட்டுப்பட்டே வாழப்பழகிக் கொள்கின்றனர், வேலைக்குப் போகும் பெண்களின் நிலையே இது என்றால், குடும்பத்தில், இருக்கும் வேலைகளை மட்டும் செய்து கொண்டு வரும் பெண்களின் நிலையைச் சொல்லவே தேவையில்லை.

ஆனால் அண்மைக் காலத்தில், பெண்கள் செய்யும் குடும்ப வேலைகளும் பொருளாதாரத்தைச் சார்ந்தவைதான் என்பதை நிரூபிக்க ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. உதாரணமாக சமையல், விறகு, தண்ணீர் முதலியவற்றைச் சேகரிப்பது, ஆகிய வீட்டு வேலைகளுக்குப் பொருளாதார மதிப்புப் போட்டுப் பார்த்தால், பெண்களின் 'வேலைப் பங்கேற்பு விகிதம் தற்போதைய நிலையை விடப் பன்மடங்கு அதிகமாகவே இருக்கும் என ஆராய்ந்து கூறுகின்றனர்.

இத்தகைய வீட்டு வேலைகள் மூலம், ஏற்படும் பொருளாதாரப் பங்களிப்பை மதிப்பிடவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அமெரிக்காவின் சிக்காக்கோ பல்கலைக்கழகத்தைச் சார்ந்த பெக்கர், ஷீல்ஸ் ஆகியோர் 'புதிய வீட்டுப் பொருளாதாரம்' என்ற பெயரில் ஒரு கோட்பாட்டை உருவாக்கியுள்ளனர். மரபான பழைய பொருளியலில் மனிதனின் நேரத்தை (செயலை) இரண்டு வகையாகப் பிரிப்பர். (1) உழைப்பு நேரம் (2) ஓய்வு நேரம். அதாவது நேரடியாக வருவாய் ஈட்டாத வேலைகள் யாவும் ஓய்வு நேரமாக எடுத்துக் கொள்ளப்படும். இப்பழைய கோட்பாட்டின்படி, வீட்டு வேலை செய்யும் பெண்களின் நேரம் யாவும் பொருளியல் ஓய்வு நேரமாக எடுத்துக் கொள்ளப்படும்; ஆனால் புதிய வீட்டுப் பொருளாதாரக் கோட்பாட்டின்படி, ஓய்வு நேரம் (குறிப்பாகப் பெண்களின் ஓய்வு நேரம்) (1) வீட்டு உற்பத்தி வேலை (2) ஓய்வு நேரம் என்று இரண்டாகப்பிரிக்கப்பட வேண்டும். இக்கோட்பாட்டின்படி, பெண்களின் வீட்டு வேலைக்கான பொருளாதார மதிப்பைக் கணக்கிட முடியும். இந்தியாவிலும் ஆங்காங்கே இத்தகைய முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இம்முயற்சிகளின் பயனாக, பாலின அடிப்படையில் குடும்ப வேலைப் பிரிவினை இருந்தாலும், ஆண்களுக்கு நிகராகக் குடும்ப பெண்களும் குடும்பப் பொருளாதாரச் சேகரிப்பில் ஆட்படுகின்றனர் என்ற புதிய மனநிலையை ஆண்களிடம் உருவாக்க முடியும். இதனால் ஆண்–பெண் சமத்துவத்திற்கு, ஆண்கள் செய்யும் அனைத்து வேலைகளையும் பெண்களும், செய்ய வேண்டும் என்கிற பார்வையை மாற்றி அமைக்க முடியும்.

என்பதும் பல புள்ளி விவரங்களோடு இங்கே எடுத்துக்காட்டப்பட்டன. சுதந்திர இந்தியாவில் அரை நூற்றாண்டாகப் பெண் விடுதலைக்காக மேற்கொண்ட முயற்சிகள் யாவும் முழுமையான பயனை அளிக்கவில்லை. பெண்கள் மேல் இழைக்கப்படும் வன்முறைகளும் கொடுமைகளும் அதிகரித்துக் கொண்டே போவது மட்டுமில்லாமல், பலவிதமான வடிவங்களும் எடுத்துள்ளன. அனாலும் ஆணாதிக்கச் சமூக அமைப்பும், அதன் பண்பாட்டுக் குணமும், கல்வி மற்றும் பொருளாதாரத் துறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களால் பெரிதும் விசாரணைக்கு உள்ளாகிக்கொண்டு வருகின்றன. எனவே இவற்றின்



### *முடிவுரை*

பொருளாதார மாற்றத்திற்கும் பண்பாட்டு மாற்றத்திற்கும் இடையே உள்ள உறவு நிலைகளும், இவைகள் இரண்டும் எப்படிப் பெண்களின் வாழ்வு நிலையைத் தீர்மானிப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றன தொடர்ச்சியாக ஆண்–பெண் சமத்துவம் எதிர்காலத்தில் உலகமெங்கும் உருவாக வாய்ப்பு இருக்கிறது என நம்பலாம்.

***– இலக்கிய மலரிலிருந்து...***

# பசி

- கலவரம்

ஆம்...!

வேறுபாடுகள் தோற்றுவித்த

பூசல்...!

கல்லெறி, கத்திச்சண்டை...

மனிதனுக்குள்...

- பூக்களில் வேறுபாடு

ஆனால்

பூசல்கள் இல்லை.

பறவைகளில் வேறுபாடு

ஆனால்

சண்டைகள் இல்லை –

- சாதி,

மதம்,

மனிதனைப் பிரித்தால்

அவனுக்குள் 'இலங்கை'

எல்லாம் முடிந்தது...

ஒரு திங்கள் கடந்தது...

கலவரப் பகுதியில்

பசியின் கொடுமை

பிச்சையெடுக்கும்

சிறுமலர் ஒன்று

அம்மா தாயே பிச்சை

என உடலின்

உயிரின்

உள்ளிருந்து

வெளிரிய குரல்

அவலமாக





- முதலில் ஒரு கவளம்...

தாழ்த்தப்பட்டவர்

வீடொன்றிலிருந்து

பிறிதொரு கவளம்

முஸ்லீம் மத வீட்டிலிருந்து

பிறகு

பிற்பட்டவர்

மிகவும் பிற்பட்டவர்

கடைசியில்

முற்பட்டவர்

வீட்டிலிருந்து...

- எல்லாம்

ஒரே பாத்திரத்தில்

**அத்தனையும்**

**கலந்தன**

**ஒரே கலத்தில்**

- பிசைந்தன விரல்கள்

ஏக காலத்தில்

ஒரே ஒரு

கவளமாய்

உள்ளே சென்றது

**சாதி மதங்களின்**

**சேர்க்கையால்**

**பசி தணிந்தது**

**புன்னகை பிறந்தது..**

**– தகடூர் தங்க மாதவ இந்திரன்**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : **க.முத்துசாமி,** இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5368927/5364906

கோ-ஆப்டெக்ஸின்

# பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்.

உங்களின் நீண்டநாள் கனவை நனவாக்கும் புதிய திட்டம்.



உங்கள் மனங்கவர்ந்த பட்டுப்புடவை ஒன்றை வாங்கவேண்டும் என்று நீண்டநாட்களாக நினைத்திருப்பீர்கள். ஆனால் அதன் விலையை நினைத்து வாங்காமல் இருந்திருப்பீர்கள். அப்படிப்பட்ட உங்களின் ஆசையை நிறைவேற்றவே, கோ-ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்துகிறது, **"பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்"**.

மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை முதல் 9 மாதங்களுக்குச் செலுத்தினால் 10-வது தவணையை கோ-ஆப்டெக்ஸ் ஏற்று மொத்தத் தொகையின் மதிப்பில், அரசு தள்ளுபடியுடன் பட்டுப்புடவையை பெற்றுக்கொள்ளலாம்.

குறைந்த செலவில் தங்களின் நீண்டநாள் கனவு நனவாகும் ஓர் அரிய வாய்ப்பு!

**தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை !**

| வ.எண் | மாதச் சந்தா ரூ. | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்தத் தொகை ரூ. | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. | கூடுதல் தொகை (3+4) ரூ. | அரசு தள்ளுபடி * ரூ. | அங்கத்தினர் களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1. | 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 2. | 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 3. | 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 4. | 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 5. | 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 6. | 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

* அரசு தள்ளுபடியானது தற்பொழுது நடைமுறையில் உள்ள 20%க்கு ஏற்றவாறு கணக்கிடப்பட்டுள்ளது. திட்டத்தின் முதிர்வு காலத்தில் அரசால் வழங்கப்படும் தள்ளுபடி சதவீதம் கணக்கிட்டு வழங்கப்படும்.

இந்த வசதி தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, பட்டர்பிளை, குறளகம், வானவில் - சென்னை, கோ-ஆப்டெக்ஸ் மகாராணி - கோயம்புத்தூர், கோ-ஆப்டெக்ஸ் அங்கயற்கண்ணி - மதுரை, கோ-ஆப்டெக்ஸ் பவளம் - ஈரோடு, கோ-ஆப்டெக்ஸ் அமுதசுரபி - திருச்சி, கோ-ஆப்டெக்ஸ் பட்டு மாளிகை - தஞ்சாவூர், தங்கம் பட்டு மாளிகை - சேலம் மற்றும் இதர பெருவிற்பனை நிலையங்களில் மட்டுமே கிடைக்கும்.

**இன்றே இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்.**

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

பாரம்பரியத்தின் பெருமை. காலத்திற்கேற்ற ரசனை.

தமிழரசு

பதிவு எண். M 8676
Licence No. TN/MS(C)/PP-23

